Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly


நாதம் - 17 வெள்ளி - 02 03 - 09 - மார்ச் - 2006





## உறங்கும் சிங்களத் தலைமைகள்

## சிக்கலுக்குள் மாட்டிய சிங்கள தேசம்



## சிலையின் இரகசியம்



குதிரைமீது சவாரி செய்யும் நிலையில் சிலைகளை அமைக்கும் விஷயத்தில் ஒரு மரபு உண்டு.

குதிரையின் நான்கு பாதங்களும் தரையில் படிந்திருந்தால், அந்தக் குதிரை வீரன் இயற்கையாக மரணம் அடைந்தவன் என்று பொருள்.

குதிரையின் ஒரு கால் மட்டும் தூக்கிய நிலையில் இருந்தால், அந்தக் குதிரை வீரன் போரில் காயமடைந்து, பின்னர் இறந்தவன் என்று பொருள்.

முன்னங்கால்கள் இரண்டும் தூக்கிய நிலையில் இருந்தால் அந்தக் குதிரை வீரன் போர்க்களத்தில் போரில் சண்டையிட்டுக்கொண்டிருந்தபோது வீரமரணம் அடைந்தவன் என்று பொருள்.

இந்த மரபு 16 ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரை பின்பற்றப்படுகிறதாம்.

## மாடி விமானங்கள்




உலகின் முதல் மாடி விமானத்தைப் பிரான்ஸ் நாட்டின் ஏர்பஸ் நிறுவனம் உருவாக்கி டல்லஸ் நகரில் காட்சிக்கு வைத்துள்ளது. உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான இதில் மூன்று வகுப்புக்களில் மொத்தம் 555 பயணிகளும் ஒரே வகுப்பாக இருந்தால் 800 பயணிகளும் பயணம் செய்யலாம். இதன் வால் ஏழுமாடி உயரம் உள்ளது. 14,800 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய இந்த விமானத்தின் விலை 28 கோடி டாலர். மாடி பேருந்து போல மாடி விமானம் வந்துவிட்டது. பயணிகளுக்கு இனிமேல் ஜாலிதான்!

# பலதும்... பத்தும்

## டைட்டானிக் இரகசியம்




இங்கிலாந்திலிருந்து நியூயோர்க் நகருக்கு 1912 இல் புறப்பட்ட டைட்டானிக் என்ற பிரமாண்டமான பயணிகள் கப்பல், வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் பாறையில் மோதி கவிழ்ந்துவிட்டது என்றுதான் இதுவரை கூறப்பட்டு வருகிறது.

"இது சரியா?" என்று கேப் எலிசபெத் என்ற இடத்தைச் சேர்ந்த ரோஜர் லாங் கேட்கிறார். "அப்படியானால் அந்தக் கப்பல் எப்படி கவிழ்ந்தது?" என்று அவரையே கேட்டால், "அதைப் பற்றித்தான் நாம் யோசிக்கவேண்டும்" என்றார்.

பாறையில் கப்பல் மோதிய பிறகு அதன் வேகத்தைக் குறைத்து திசையை மாற்ற முற்பட்டபோது அதன் வால்பகுதி உடைந்து 30 டிகிரி கோணத்தில் சாய்ந்தது என்று இதுவரை கூறப்பட்டு வருகிறது. இது சரியல்ல. 10 முதல் 11 டிகிரி வரை மட்டுமே அது சரிந்திருக்க வேண்டும் என்கிறார் ரோஜர் லாங்.

சுமார் 850 அடி நீளத்துக்கு இருந்த அக்கப்பல் கடலில் மூழ்கியபோது அதில் இருந்தவர்களில் 1,500 இற்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர். தனது முதல் பயணத்திலேயே மிகப்பெரிய லாபத்தைச் சந்தித்தது டைட்டானிக். ஆனால் டைட்டானிக் ஆங்கிலப் படத்தில் மிகவும் விததியாசமான முறையில் படமாக்கி இருக்கின்றனர். படம் முழுக்கக் கற்பனைதான் என்றாலும் கதாசிரியர் தான் படித்து கேள்விப்பட்ட செய்திகளையே அந்தப்படத்தில் புகுத்தி இருக்கிறார். நடந்த சம்பவத்தில் அழகாக காதலையும் ஏற்றியது கதாசிரியரின் புதுமை.



## கிண்டல் செய்யும் ரோபோக்கள்

மனிதர்களைப் போல பேசவும் நடக்கவும் நடனமாடவும் கூடிய "ரோபோட்"களை உருவாக்கிய விஞ்ஞானிகள் தற்போது கொஞ்சம் அதிகமாகப் போய் பெண்களைப் பார்த்து "ஜொள்ளு"விடும் ரோபோட்களையும் உருவாக்க இருக்கிறார்கள். தென்கொரியாவைச்சேர்ந்த ரோபோட் ராய்ச்சி மைய இயக்குநர் கிம் ஜோங் ஹுக்வான் உணர்ச்சிவசப்படக்கூடிய "ரோபோட்"களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார். உணர்ச்சிகளுக்கும் குழந்தை பிறப்புக்கும் காரணமான "குரோமோசோம்"களை செயற்கையாக உருவாக்கி இருக்கிறார்.

இந்தச் செயற்கை குரோமோசோம்கள் அடுத்த மூன்று மாதத்தில் "ரோபோட்"களில் பொருத்தப்படும். இவை "இவை" ரோபோட்களை ஆசைப்படவும் கோபப்படவும் சந்தோஷப்படவும் பயப்படவும் துக்கப்படவும் வைக்குமாம். காலப்போக்கில் இந்த ரோபோட்கள் குழந்தைகளைப் பெற்றுத்தரும்படியாக அமைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!!!

## மொழிமாற்று இயந்திரம்



*புதியதொரு நாட்டுக்கு - இடத்துக்கு செல்கிறீர்களா, மொழிபுரியவில்லையா, கவலையை விடுங்கள், மொழிபெயர்ப்பு இயந்திரம்-அதாவது மொழிமாற்றி என்பது தயார் என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.*

*அதாவது புதிய மொழியில் ஒரு வாசகத்தைக் கண்டீர்கள் என்றால், அதை அப்படியே அந்த இயந்திரத்தில் ரைப் செய்து கொண்டால் உங்களுக்கு வேண்டிய மொழியில் -அதாவது தமிழ் அல்லது ஆங்கிலத்தில்-அதன் மொழிபெயர்ப்பு அப்படியே அச்சாகிவிடும் என்கிறார்கள் இவர்கள்.*

*இதைப்போன்ற மொழிமாற்றிகள் சில ஏற்கெனவே இணையத்தில் காணக்கிடைக்கின்றன. ஆனால் வேறு சில விஞ்ஞானிகள் இதுபற்றி சந்தேகங்களை எழுப்புகிறார்கள். உதாரணமாக, அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்ற கம்பராமாயண வரிகளை, இந்த மொழிமாற்றியில் இட்டால், ராம பிரானும் சீதையும் ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் நோக்கினார்கள் என்கிற தொனிப்பொருள் மொழிபெயர்ப்பில் வருமா என்பது சந்தேகம் தான்.*

*ஆக, தமிழைப்போன்றே எந்த ஒரு மொழிக்கும் சிறப்பு அம்சங்கள் என்று சில இருப்பதால் அவற்றை எந்திர கதியில் மொழிமாற்ற முடியாது என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள்.*

## தயாராகிவிட்டது ஆகாயக் கப்பல்




கலிபோர்னியாவைச் சேர்ந்த வோல்ட்வைட் ஏரோஸ்பேஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் உலகின் முதலாவது ஆகாயக் கப்பலை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. 2010 முதல் இந்த ஆகாயக்கப்பல் பறக்கத்தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 647 அடி நீளம்,244 அடி அகலம், 165 அடி உயரம் கொண்ட ஒரு சொகுசு ஓட்டலைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த ஓட்டல் நின்ற இடத்திலிருந்து அப்படியே உலங்குவானூர்தியைப் போல மேலே எழும்பி,விரும்பிய இடத்தில் இறங்கும் சக்திகொண்டதாக இருக்கும். ஓடுதளம் தேவையில்லை. 250 பயணிகளுடன் மணிக்கு 174 மைல் வேகத்தில் பறக்கக்கூடிய இந்த ஆகாயக்கப்பல் , சொகுசாகப் பயணிக்க விரும்பும் பயணிகளுக்காகவே இது வடிவமைக்கப்படுகிறது. சொகுசுக் கப்பல்களில் இருப்பதைப் போன்று சொகுசு வசதிகளுடன் இது வடிவமைக்கப்படுகிறது என்கிறார். இதனை வடிவமைத்து வரும் நிபுணரான இகார் பேஸ்டானிக். ஹீலியம் மூலம் இது பறப்பதால், பிற விமானங்களை விட எடைகுறைந்ததாக இந்த ஆகாய சொகுசுக் கப்பல் இருக்கும். தொடக்கத்தில் பயணிகளுக்கான சொகுசு வாகனம் தயாரிக்கப்படும் என்றும், பின்னர் சொகுசாக எடுத்துச்செல்ல வசதியாக சரக்கு விமானம் ஒன்றும் இதேபோல வடிவமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலத்திலும், பனிநிறைந்த பகுதிகளிலும், நீரிலும் கூட இதை லேண்டிங் செய்யமுடியும் என்பது இதன் கூடுதல் சிறப்பாகும்.

# சமாதானப் பேச்சுக்கள் அடுத்த கட்டத்துடன் தேங்கி நின்றுவிடுமா?

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு.வெங்கடேஸ்வரன் இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஒரு செத்துப் பிறந்த குழந்தை என்று வர்ணித்தார். பின்னாளில் சிங்களவர்களும் தமிழர்களும் சேர்ந்தே அதை புதைத்து விட்டார்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பிறக்கும்போதே ஒரு நீலக் குழந்தையாகத்தான் பிறந்தது. பிறந்ததிலிருந்து அதை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து பராமரிக்க வேண்டியிருந்தது. அதன் மருத்துவிச்சிகளான மேற்கு நாடுகள் அடிக்கடி அதற்கு அவசர சிகிச்சை அளிக்கவேண்டியும் இருந்தது.

இந்த நீலக்குழந்தை பிறந்த போது தரப்பட்ட அதேயளவு உணவையே அது பிறந்து பல மாதங்களின் பின்பும் தர திரு.ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முயன்றது. இதனால் நீலக்குழந்தை வளர்ச்சி குன்றிக்கொண்டே வந்து ஒரு கட்டத்தில் குறைவளர்ச்சி நிலைக்கு- Retarted- வந்துவிட்டது. அப்பொழுதுதான் கிழக்கில் கருணாவின் பிரச்சினை தோன்றியது. அதிலிருந்து தொடங்கி ஏற்கனவே குறைவளர்ச்சியோடு இருந்த அந்த குழந்தை மெல்லச் சாகத்தொடங்கியது. கடந்த சனாதிபதித் தேர்தலோடு அது அநேகமாக கோமா நிலைக்கு வந்துவிட்டது. பெருமளவு சிங்களவர்கள் திரு. மகிந்தவுக்கு வாக்களித்ததன் மூலமும், தமிழர்கள் வாக்களிக்காததன் மூலமும் சமாதானத்திற்கு நாடு தயாரில்லை என்பது தெரியவந்த சூழலில் குறைவளர்ச்சியோடு இருந்த நீலக் குழந்தை அநேகமாக கோமா நிலைக்கு வந்து விட்டது.

ஆனால், அதைச் சாகவிட அதன் மருத்துவிச்சிகளான இணைத்தலைமை நாடுகள் தயாரில்லை. அதை தப்ப வைக்கும் மற்றொரு முயற்சியாக அண்மையில் ஒரு அவசர சிகிச்சை செய்யப்பட்டது. அதுதான் ஜெனீவா சந்திப்பு.

அந்தச் சிகிச்சை உடனடியாக பயனளித்திருப்பதாகவே தோன்றுகிறது. அதாவது சாகக் கிடந்த நீலக் குழந்தை மெல்லக் கண்ணைத் திறந்திருக்கிறது. ஆனால அது இப்பொழுதும் கண்ணாடிப் பெட்டிக்குள்தான் இருக்கிறது. அது இன்னமும் குறைவளர்ச்சியுடன் தான் காணப்படுகின்றது. அது கோமா நிலைக்குப் போவதை மருத்துவிச்சிகள தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் அது அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்ந்து செல்லத் தேவையான ஊட்டச்சத்தை அதன் பெற்றோராகிய சம்பந்தப்பட்ட இரு தரப்பும் அதாவது சிங்களவரும் தமிழருமே கொடுக்கவேண்டும். இது நடக்கக்கூடிய காரியமா?

புரிந்துணர்வு உடன்படிக்கையின் உயிர் இப்பொழுது இரண்டு விசயங்களில் தொங்கிக்கொண்டிருக்கிறது. முதலாவது துணைப் படைகள் இரண்டாவது உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் கடல் பாதுகாப்பு வலயங்கள்.

துணைப்படைகளைப் பொறுத்தவரை அரசாங்கம் ஜெனீவாவில் வைத்து சில வாக்குறுதிகளை வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் இது விசயத்தில் அவர்கள் வெளிப்படையாக துணைப்படைகளின் இருப்பை ஒப்புக்கொள்ளும் உத்தியோகபூர்வ எழுத்து வடிவ ஆவணம் எதுவும் இதுவரை பகிரங்கபபடுத்தப்படவில்லை. எழுதப்பட்ட ஒரு ஆவணமாக இருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையையே மதித்து நடக்காத ஒரு அரசாங்கம் எழுதப்படாத வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்று எப்படி நம்புவது?

இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல வேறெந்த அரசாங்கமும் இது போன்ற துணைப்படைகளின் இருப்பை ஒப்புக்கொள்வதில்லை. பொதுவாக மரபு ரீதியிலான அரச படைகளால் வெளிபபடையாகவும் உத்தியோகபூர்வமாகவும் தாக்கியழிக்க முடியாத இலக்குகளை அழிப்பதற்குத் துணைப்படைகளே பயன்படுத்தப்படுகின்றன. யுத்தத்தில் நேரடியாக ஈடுபடாத ஆயுதம் தரித்திராத ஆனால் போராடும் இயக்கத்திற்கு ஆதரவாக செயற்படுகின்ற சாதாரண பொதுச்சனங்களையோ அல்லது சமூகத்தில் மதிக்கப்படும் பிரமுகர்களையோ அல்லது சர்வதேச அளவில் தெரியவந்த பிரமுகர்களையோ குறிவைக்கும்போது அதை அரச படைகளால் வெளிப்படையாகச் செய்யமுடியாது. எனவே துணைப் படைகள் களத்தில் இறக்கப்படுகின்றன.

இந்தோனேசியாவில் கிழக்கு தீமூரில் இந்தோனேசிய இராணுவம் துணைப்படைகளை வைத்து மேற்கொண்ட படுகொலைகள் அங்கே ஒரு கட்டத்தில் கிழக்கு தீமூரின் பிரிவினையை துரிதப் படுத்தின. கிழக்கு தீமூரின் சமாதான உடன்படிக்கையின்படி அங்கே முதலில் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாடு கொண்டுவரப்பட்டு சில ஆண்டுகளின் பின் பிரிவினைக்கு ஆதரவா? இல்லையா? என்று மக்களின் கருத்தைக் கோரும் பொதுசன வாக்கெடுப்பு ஒன்று வைக்கப்பட்டது. இதில் மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்ததைக் கண்டு பொறுக்க முடியாத இந்தோனேசிய ராணுவம் தனது துணைப்படைகளை ஏவி கிழக்கு தீமூரியர்களைக் கொன்று குவித்தது. நிலைமை ஒரு கட்டத்தில் மோசமான வளர்ச்சிக்கு வந்துவிடவே அவுஸ்ரேலியா அங்கே தனது சுமார் 4000 துருப்புக்களை இறக்கியது. இத்துருப்புக்கள் இந்தோனேசிய ராணுவத்தை பின்னுக்கு தள்ளிக் கொண்டுபோய்விட்டதோடு கிழக்கு தீமூரின் பிரிவினையை உறுதிப் படுத்தின.

சிறிலங்கா அரசாங்கமும் புலிகளின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம் தனது பேரம் பேசும் சக்தியை அதிகரித்துக்கொள்ளும் ஒரு உத்தியாகவே துணைப் படைகளைப் பயன்படுத்தியது. கொழும்பில் உள்ள பெரும்பாலான போரியல் வல்லுனர்கள் ஒன்றைச் சொல்லுகிறார்கள். தென்னிலங்கையில் உள்ளபாதாள உலகக் கும்பல்களையே கட்டுப் படுத்த முடியாது திணறும் ஒரு அரசாங்கம் எப்படி துணைப்படைகளை கட்டுப்படுத்த முடியும் என்று? அநேகமாக சுமார் 50000 க்கும் குறையாத ராணுவ தப்பியோடிகள் தென்னிலங்கையில் ஆங்காங்கே தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்களையும் கைது செய்ய முடியாது திணறும் ஒரு அரசாங்கம் துணைப்படைகளை எப்படி கட்டுப்படுத்தும்? என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

ஆனால் இந்த விவாதம் துணைப்படைகளுக்கும் அரசாங்கத்திற்கும் உறவில்லை என்ற ஒரு எடுகோளை முன்னிறுத்தி கூறப்படுகிறது. அதாவது துணைப்படைகள் சுயாதீனமாக தொழிற்படுகின்றன என்று அர்த்தப்படுத்த முனைகின்றது..

ஒரு கதைக்காக இதை உண்மை என்று எடுத்துக் கொண்டால் ஒரு முக்கியமான கோள்வி எழும். இலங்கைத்தீவு என்ன ஆப்கானிஸ்தானா? அல்லது ஒரு தோல்வியுறும் அரசா? என்று. ஏனெனில் அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு துணைப்படைகளும் யுத்த பிரபுக்களும் பாதாள உலகக் கும்பல்களும் பலமாயிருக்கும் ஒரு நாடு மேற்கு நாடுகளின் அளவு கோல்களின்படி ஒரு தோல்வியுறும் அரசே. எனவே மேற்படி விவாதத்தை முன் வைப்பவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்.



ஜெனீவா சந்திப்பில் ஒப்புக் கெள்ளப்பட்டபடி துணைப்படைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தினால் அரச படைகளின் ஒரு அலகாகவே துணைப்படைகள் இயங்குகின்றன என்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்வது போல ஆகிவிடும். இந்நிலையில் அரசாங்கம் என்ன முடிவை எடுக்கும்?

இது முதலாவது. இரண்டாவது, உயர் பாதுகாப்பு வலயம். இது முன்பு ரணில் விக்கிரமசிங்க காலத்திலும் முட்டுப்பட்ட ஒரு விவகாரம்தான். அப்பொழுது யாழ்ப்பாணத்துத் தளபதியாக இருந்து உயர் பாதுகாப்பு வலயங்களை முழுக்க முழுக்க ராணுவ நோக்கு நிலையிலிருந்தே அணுகிய சரத்பொன்சேகா இப்பொழுது ராணுவத் தளபதியாக இருக்கின்றார்.

அவர்களைப் பொறுத்தவரை உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப்படுபவை படைத்தளங்கள் முகாம்களின் கவசங்களைப் போன்றவை. அந்தக் கவசங்களை அகற்றினால் தமது படை நிலைகள் புலிகளுக்கு திறக்கப்பட்டுவிடும் என்று

**நிலாந்தன்**

அவர்கள் அஞ்சுகிறார்கள். குறிப்பாக புலிகளின் நீண்ட தூர ஆயுதங்களை யிட்டு அவர்கள் அதிகம் அஞ்சுகிறார்கள். அந்த ஆயுதங்களின் வீச்செல்லைகளுக்கும் அப்பால் தமது தளங்களின் உயிர் மையங்களை வைத்திருப்பதென்றால் இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் இடையில் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

எனவே யுத்தத்தை ஒத்தி வைக்கும் ஒரு சமாதானத்தை நம்பி தமது பாதுகாப்புக் கவசத்தை அகற்றி விட்டால் அடுத்த சண்டை தொடங்கும் போது நிலைமை புலிகளுக்குச் சாதகமாக மாறிவிடும் என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

இந்த வாதங்களின் படி உயர் பாதுகாப்பு வலயங்களைப் பற்றிய எந்தவொரு உரையாடலும் இறுதித் தீர்வுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும் என்றும் இறுதித் தீர்வு பற்றி முடிவெடுக்கப்படும் ஒரு தருணத்தில்தான் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது பற்றி சிந்திக்கலாம் என்பது அவர்களுடைய நிலைப்பாடாக இருக்கின்றது.

அதாவது யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்கும் அல்லது பலப் படுத்தும் நடவடிக்கை ஒன்று இறுதித் தீர்வுடன் பிரிக்கப்படவியலாதபடி பிணைக்கப் பட்டிருப்பதாகப் படைத்தரப்பு நம்புகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை தயாரித்து அதில் கையெழுத்திட்டு நடைமுறைபடுத்தவிழைந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே இது விசயத்தில் படைத்தரப்பின் அச்சங்களை ஆமோதிப்பது போல நடந்து கொண்டது. இந்நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசியல் அமைப்புக்கு முரணானது என்று கூறும் மகிந்தவின் அரசாங்கம எத்தகைய ஒரு முடிவை எடுக்கும்?

எந்த இரண்டு விவகாரங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் உயிர் தொங்கிக்கொண்டிருக்கிறதோ அந்த இரண்டு விவகாரங்களிலும் துணிச்சலான முடிவுகளை எடுக்க முடியாத ஓர் உள்நாட்டு யதார்த்தத்துள் அரசாங்கம் சிக்கியிருக்கிறது.

சிலசமயம் துணைப்படைகளை உறங்கு நிலைக்கு அல்லது உறைநிலைக்கு கொண்டுவருவது என்று ஒரு முடிவை எடுத்தாலும் கூட உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது என்பது கொழும்பில் அதிகம் உணர்ச்சிகளைத் தூண்டும் ஒரு விவகாரமாகவே இருக்கும். எனவே அடுத்த சுற்றுப் பேச்சுக்கிடையில் துணைப்படைகளை உறையவைக்க அரசாங்கம் முயலக் கூடும்.

இணைத்தலைமை நாடுகளும் அது விசயத்தில் துணைப்படைகளை ஏற்றுக்கொள்ளாத ஒரு போக்கே காணப்படுகின்றது. துணைப் படைகளை அவர்கள் "நாசமாக்கிகள்"- Spoilers- என்ற வகைக்குள் உள்ளடக்குவது போலத் தெரிகிறது. அதாவது சமாதானத்தை குழப்பும் சக்திகள் என்று அர்த்தம். எனவே துணைப் படைகளுக்கு எதிரான ஒரு பலமான சர்வதேச சூழல் காணப்படுவதால் இது விசயத்தில் அரசாங்கம் ஏதும் சுதாகரிப்புக்களை செய்யக் கூடும்.

ஆனால் உயர் பாதுகாப்பு வலயங்களை பொறுத்தவரை ஒரு வலிமையான சர்வதேச அபிப்பிராயம் இன்னமும் போதியளவு உருவாகி விடவில்லை. இதுபோன்ற விவகாரங்களில் உலகில் நிகழும் ஏனைய சமாதானப் பேச்சுக்களின் போதும் ஒன்றில் இழுத்திழுத்து நடைமுறைப் படுத்தும் ஒரு போக்கோ அல்லது முதலில் ஒப்புக் கொண்டதை பின்னர் மறுதலிக்கும் ஒரு போக்கே தான் காணப்படுகின்றது.

பலஸ்தீனத்தில் 1993 ஆம் ஆண்டு செய்யப்பட்ட உடன்படிக்கையின்படி பலஸ்தீன பகுதிகளில் இருந்து துருப்புக்களை பின்னெடுக்கும் விவகாரம் பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னரும் இப்பொழுதும் இழுபடக் காணலாம்.

எனவே உயர் பாதுகாப்பு வலயங்களைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் அதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக பெருப்பித்து அதற்கு எதிரான சர்வதேச அபிப்பிராயத்தை திரட்டினால் தான் பேச்சுக்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்த முடியும். இல்லையென்றால் அடுத்த சுற்றுச் சந்திப்போடு யுத்த நிறுத்தம் தேங்கி நின்றுவிடும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# நறுக்கென...

## அம்பலத்துக்கு வந்த அரசியல்..!



சிறுவர் உரிமை, சிறுவர் நலன் என தென்னிலங்கை அரசாயினும் சரி, அமைப்புகளாயினும் சரி, தென்னிலங்கை அரசியல் கட்சிகளாயினும் சரி வாய் கிழியக் கத்தி பெரிய அரசியலையே நடாத்தி வருகின்றனர்.

இந்தச் சிறுவர் அனுதாபிகளின் அனுதாபங்கள் எல்லாம் ஏனோ வடக்கு- கிழக்கு சிறுவர்களின் மீது தான் அதிகம். இது ஏனென்பது எல்லோருக்கும் புரியும்.

இந்த நிலையில் இந்த அனுதாபிகள் ஆட்சி பீடத்தில் அலங்கரித்த காலங்களில் இவர்களின் கட்டளைக்கு இசைவாக படையினரின் விசைவில் அசைவினால் இராணுவ முகாம்களிலிருந்தும், விமானங்களிலிருந்தும், கப்பல்களிலிருந்தும் புறப்பட்ட எறிகணைகளினால் கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

அத்தோடு இந்தத் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட பொதுமக்களில் பல ஆயிரக்கணக்கானோர் அநாதையாக்கப்பட்ட சிறுவர்களின் தாய் தந்தையர் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால் சிறுவர்களின் பெற்றோர்களை கொல்வது என்பது மனித உரிமைகளுக்குள்ளும் அடங்காது, சிறுவர்களின் உரிமைகளுக்குள்ளும் அடங்காது என்பது உலக நியதியோ என்னவோ.

இதனால் தானோ என்னவோ தமிழர் தாயகத்தில் அரச வன்முறைகளின் மூலம் மீறப்படும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக எவரும் வாய் திறக்காமல் இருக்கிறார்கள்.

இப்ப ஏனோ தமிழர் தாயகத்தில் தென்னிலங்கை அரசுகளில் இருந்து எவ்வளவோ தூரம் முன்னேறி முன்னேற்றகரமாக சிறுவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தமிழர் தாயகத்தில் இருக்கும் போதும் இவை தொடர்பாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வாய்திறப்பதில்லை.

இந்த நிலையில் அண்மையில் தென்னிலங்கையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

அதாவது உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட செய்தி யாவரும் அறிந்ததொன்று.

இந்த மனு நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் அந்தப் பட்டியலில் பதினெட்டு வயதிற்கும் குறைந்த ஒருவரின் பெயர் இருந்ததேயாகும்.

அந்த வகையில் பார்க்கும்போது ஒரு சிறுவனை இலங்கை அரசியலுக்குள் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதை செய்தமை இலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்று என்பது கவனிக்க வேண்டும்.

இந்த நிலையில் தென்னிலங்கை அரசியலில் ஈடுபடும் எல்லோரையும் ஒருமுறை பரிசோதிக்கவேண்டிய தேவை இருப்பது போன்றே தோன்றுகின்றது.

பிரதான கட்சிகளின் அரசியல் நலனிற்காக சிறுவர்களை பயன்படுத்துவது குற்றமல்லவா?

ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி மகளே என்று கூறினாலும் கூறுவார்கள்.

## யார் சொந்தக்காரர்..?



சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குக் காரணமானவர்கள் ஜே.வி.பியினரே என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பிரச்சார செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு காலத்தில் அதாவது சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க இருக்கும்போது அரசுக்கு சொந்தக்காரர்கள் நாங்கள் தான் எனக் கூறிவந்ததன் மூலம் உண்மையில் அரசுக்கு சொந்தக்காரர் யார் என்பது தொடர்பாக மக்களிடையே பெருத்த சந்தேகத்தைத் தோற்றுவித்தவர்கள்.

உண்மையில் ஜே.வி.பியினரின் நடவடிக்கை என்பது தோலிருக்க சுளை பிடுங்குவது போன்றதாகும்.

அத்தோடு எவ்வளவுக்கு எவ்வளவு மற்றவர்களை அவமானப்படுத்த முடியுமோ அதாவது ஆட்சியில் இருப்பவர்களை அவமானப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவமானப்படுத்துகின்றவர்கள்.

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஐம்பது சதத்திற்கும் பெறுமதியில்லாதவர் என்றெல்லாம் வர்ணித்தவர்கள்.

இந்த நிலையில் சனாதிபதித் தேர்தலில் தற்போதைய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவே ஜே.வி.பியினர் செயற்பட்டனர்.

இதனையே ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச இப்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜே.வி.பியினரின் இந்தச் செயற்பாடானது சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்குள்ளும் தொடர்வதை அவதானிக்கக் கூடியதாகவே இருக்கிறது.

இந்த நிலையில் ஜே.வி.பியினர் அரசு எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதனை உள்ளிருந்து குழப்பும் ஒரு சக்தியாகவே இருந்து வருகிறது. அதாவது அரசின் காலைச்சுற்றிய பாம்பாக செயற்பட்டு வருகிறது. இந்த நிலைமையில் போகிற போக்கில் தாங்கள் சொல்வதை மட்டும் தான் சனாதிபதி செய்யவேண்டும் எனக் கட்டளையிட்டாலும் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை.

உண்மையில் இதனை அவதானிக்கின்றபோது ஜே.வி.பியினர் ஆட்சியிலிருப்பவர்களை வெறும் முட்டாள்களாக்கி தமது காரியத்தை செய்துவிடுகின்றனர் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

சரி. ஜே.வி.பியினர் தான் வெறும் முட்டாள்கள் என்றால் அரச தலைவர் மற்றும் அமைச்சர்களும் முட்டாள்களாக செயற்படுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இவர்களை நம்பி வாக்களித்த மக்களை என்னவென்று நினைத்துக்கொண்டு செயற்படுகின்றார்கள் என்பதுதான் தெரியவில்லை.

## எச்சரிக்கை மணி..?



ஒட்டுப்படைகள் விவகாரத்தில் படைத்தரப்பினர் உண்மையாகச் செயற்பட வேண்டுமெனவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்து சில நாட்களுக்குள்ளேயே ஒட்டுப்படைகள் குறித்து கருத்து தெரிவித்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேற்படி கூற்றைத் தெரிவித்துள்ளார்.

ஒட்டுப்படைகள் குறித்து சிறிலங்கா அரசோ, பாதுகாப்புப் படையினரோ இதுவரை சோற்றுக்குள் மறைக்க முயன்ற பூசணிக்காய் விவகாரமாகவே இதுவரை காலமும் கையாண்டு வந்தனர்.

ஆனால் கண்காணிப்புக்குழுவோ இந்த ஒட்டுக்களின் இருப்பிடம், தரிப்பிடம் அங்கு போவதற்காக வழிகாட்டிய படைத்தரப்பு என எல்லாவற்றையுமே அம்பலப்படுத்தி விட்டனர்.

அத்தோடு ஜெனீவாப் பேச்சில் சிறிலங்கா அரச தரப்பு இந்த விவகாரத்தைப் மறைமுகமாக ஒத்துக்கொண்டே வந்துள்ளது.

இந்த நிலையில் படைத்தரப்பின் பேச்சாளர் தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் ஒட்டுக்குழுக்கள் இயங்கவில்லையென மீண்டும் பழைய பல்லவியை பாடியுள்ளார்.

உண்மையில் இராணுவப் பேச்சாளரின் கூற்றுக்களின் பின்னால் இருக்கும் ஆபத்தை உணர்ந்தவராகவே யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிறிலங்கா படைத்தரப்பு மீண்டும் ஒட்டுப்படைகள் விவகாரத்தில் கண்ணாம்பூச்சி ஆட்டம் ஆடினால் பாரிய விளைவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும் என்பது எல்லோருக்குமே தெரியும்.

இந்த நிலையிலேயே இராணுவப் பேச்சாளர் மீண்டும் தனது பல்லவியைப் பாட முற்பட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் கண்காணிப்புக்குழு தனது பணிக்காலத்தில் சந்தித்த நெருக்கடிகள் சிக்கல்களின் அதி உச்சத்தை எட்டிய காலப்பகுதியாக அக்காலப்பகுதியே இருக்கமுடியும்.

மீண்டும் அத்தகையதொரு நெருக்கடி ஏற்படுமாக இருந்தால் அதனை கண்காணிப்புக் குழுவினால் மட்டுமல்ல வேறு எவராலுமே அதனை கட்டுப்படுத்த முடியாது என்பதே கள யதார்த்தமாக முடியும்.

இந்த நிலையில் படைத்தரப்பு ஒரு விசப்பரீட்சையில் ஈடுபட முற்படுமானால் அதை யாரால் தான் தடுக்கமுடியும்.

இதனை உணர்ந்துதானோ என்னவோ கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் வருமுன் காக்கும் வகையில் ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆனால் இதனை புரிந்துகொண்டோ மதித்தோ சிறிலங்கா அரசோ, படைத்தரப்போ நடக்குமென எதிர்பார்க்க முடியாது.

## பேரியலின் கவலை..!



அரசு- புலிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுக்களில் அரச தரப்புக் குழுவில் இடம்பெற்றவர்களில் பேரியல் அஸ்ரப்பும் ஒருவர்.

பேரியல் அஸ்ரப் அவர்கள் அரசின் சார்பில் பங்கு கொண்டாரா அல்லது முஸ்லிம்களின் சார்பில் பங்கு கொண்டாரா என்பது தொடர்பாக முஸ்லிம்களின் அரசியல் சக்திகளுக்கிடையே மோதலும், குழப்பமும் நீடிக்கிறது.

எப்படியிருப்பினும் பேரியல் அஸ்ரப் அவர்கள் அரச குழுவில் அங்கம் பெற்றமைக்கு பிரதான காரணம் அவர் ஒரு முஸ்லிம் என்ற வகையிலேயே ஆகும்.

அதாவது திருமதி பேரியல் அஸ்ரப் அவர்களை பேச்சுக்குழுவில் அங்கம் பெறச் செய்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு தாங்கள் இடமளிப்பதாக அரச தரப்பு காட்டிக் கொள்ள முயன்றமை தெளிவு.

ஆயினும் பேரியல் அஸ்ரப் ஒரு முஸ்லிமாக பங்கு கொண்டாரே தவிர அவர் முஸ்லிம்களுக்கு பயன்படாததுடன் அரச நலனிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஏனெனில் ஜெனீவாப் பேச்சு மேசையில் வைத்து அரசு இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்து அறிக்கையாக எழுதிவர அதனை அப்படியே ஒப்பு விப்பவராக திருமதி அஸ்ரப் செயற்பட்டு தன்னை சிறுமைப்படுத்தியுள்ளார்.

ஏனெனில் திருமதி அஸ்ரப் ஜெனீவாப் பேச்சு மேசையில் முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்து பேசாது சிறுவர் பிரச்சினை தொடர்பாக பேசியுள்ளார்.

வடக்கு-கிழக்கு உண்மையில் இன்று சிறுவர் பிரச்சினை என்பது அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தப் படுகின்ற ஒன்றாக மாறி வருகின்றது.

இந்த விடயம் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள பேரியலுக்கு தெரியாமலிருக்க முடியாது.

ஆயினும் அரசின் கபட நோக்கத்திற்கு பலியாகிய தன்னையும், தன்னினத்தையும் திருமதி பேரியல் அஸ்ரப் அவர்கள் சிறுமைப் படுத்தியுள்ளார்.

எப்படியோ சிங்கள தேசம் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்களை சிங்கள தேசத்தின் நலனிற்காக பயன்படுத்துகின்றமை மீண்டும் ஒருமுறை நடந்தேறியுள்ளது.

இதற்கு இம் முறை பேரியல் அஸ்ரப்பயன்படுத்தப்பட்டுள்ளார் என்பதே உண்மை.

வேழினி

# உறங்கும் சிங்களத் தலைவர்கள்



உறக்கம் இயற்கையின் நியதி. விழிப்பு மனிதனின் உந்து சக்தி. இலங்கை அரசியலில் நீண்டகாலமாகவே மாறிமாறிப் பதவிக்கு வரும் அரசுத்தலைவர்களின் உறக்கம் இனப்பிரச் சினையின் தீர்வில்லாத தொடர்ச்சிக்கே வழிவகுத்து வந்துள்ளது.

எமது போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் எமது நாடாளுமன்றஅரசியல் தலைவர்கள் சிலர் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தமையால் பேரினவாதம் அகலக்கால்வைத்து எம்மண்ணைச் சூறையாடியது. எமது தேசம் பற்றிய விழிப்புணர்வு எதுவும்அவர்களிடம் இருக்கவில்லை.

இதன் விளைவாக கல்லோயா, கந்தளாய் என எங்கள் சொந்த மண் நிலச்சூறையாடலுக்குள்ளானது.தமிழர்கள் விழித்துக்கொள்ளவில்லை. தமது தாயகத்தின் எல்லை எது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஐக்கிய இலங்கை என்ற மாயைக்குள் மூழ்கிப்போனார்கள்.

## சிரித்திரன் ஆசிரியர் சொன்ன கருத்து:-

தமிழீழத்தின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரும் ஊடகவியலாளருமான சிரித்திரன் சஞ்சிகையின் ஆசிரியர் மாமனிதர் சிவஞானசுந்தரம் அவர்கள் தமது சஞ்சிகை யில் வாசகர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்கு பின்வருமாறு பதில் கூறியிருந்தார்.

கேள்வி இதுதான். தூங்கும் தமிழர்களைத் தட்டியெழுப்பிய பெரியோர்கள் யார்? இதற்குப் பதில் கொடுத்த சிரித்திரன் சிவா "தூங்கும் தமிழர்களைத் தட்டியெழுப்பிய பெரியோர்கள் வேறுயாருமல்ல அநுராதபுரத்தில் ரயிலேறும் சிங்களச் சகோதரர்கள் தான்" என்று நாசூக்காகப் பதில் கொடுத்தார்.

கேள்வி-பதிலை வாசித்த தந்தை செல்வாவின் துணைவியார் தாமும் ரசித்ததோடு தந்தை செல்வாவிடமும் சிரித்திரனை வாசிக்கக் கொடுத்தாராம். தந்தை செல்வா இதனைத் தம்மிடமும் கூறியதாகச் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் தனது நண்பர்களிடம் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

## டட்லி சேனநாயக்கா தூங்கிய விதம்:-

1965ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற பொதுத்தேர்தலின் விளைவாக காலம் சென்ற டட்லி சேனநாயக்கா பிரதமராகப் பதவியேற்றார்.இவரால் அமைக்கப் பட்ட தேசிய அரசாங்கத்தில் காலம் சென்ற ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களும் அங்கத்துவம் வகித்தார். ஒருநாள் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நாடாளுமன்ற விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது தமிழ் காங்கிரஸ் கட்சித்தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் காரசாரமாக விவாதத்தில் ஈடுபட்டு உரையாற்றிக்கொண்டிருந்தார். அங்கே நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதத்தைக் கவனிப்பதற்காக வந்திருந்த அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா நாடாளுமன்ற மேசையில் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார். இதேநேரம் அவரின் அமைச்சரவையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த டபிள்யூ தகாநாயக்காவும் உறக்கத்தில் இருந்தார். பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் கட்டைப் பிரமச்சாரிகள். இருவரும் நாடாளுமன்றத்தில் பகலில் உறங்குவதைக் கண்ட சபாநாயகர் கிண்டலாக சில விடயங்க ளைச் சொன்னார். சபையில் ஒரே சிரிப்பு.இந்தச் சிரிப்பு முடிந் ததும் டட்லி கண்விழித்ததும் ஜி.ஜி.பொன்னம்பலம் பேசி முடித்ததும் ஒரே நேரம், ஒரே கணப்பொழுதில் நிகழ்ந்தன. கண் விழித்த டட்லி சபையில் என்ன நடந்ததென்று பக்கத்தி லிருந்த சபை முதல்வரிடம் கேட்டாராம். தமிழர் பிரச்சினைமீது டட்லிக்கு எவ்வளவு அக்கறை.

## 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர்:-

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்கு எதிராகவே உள்ளதாக அக்காலகட்டத்தில் சனாதிபதியாகவிருந்த ஜே.ஆர் அடிக்கடி ஊடகங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். இவ்வேளையில் இலங்கைக்கும்- இந்தியாவுக்குமிடையில் "கிரிக்கெட் மட்ச்" ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1983ஆம் ஆண்டு வேலைநாட்களான திங்கள், செவ்வாய், புதன் என மூன்று தினங்கள் இடம்பெற்ற "கிரிக்கெட் மட்ச்" இலங்கைக்கும்- இந்தியாவுக்குமிடையிலான ஒரு யுத்தம் போலவே அரசால் உணர்த்தப்பட்டது. கிரிக்கெட் மட்ச் போட்டியில் யார் வெல்வது என்பது இனப்பிரச்சினைக்கான யுத்தத்தில் யார் வெல்வதென்ற கண்ணோட்டத்தில்தான் இந்தக் கிரிக்கெட் மட்ச் இடம்பெற்ற படியால் கொழும்பு விளையாட்டு மைதானத்தில் ஏகப்பட்ட ரசிகப் பெருமக்கள் மத்தியில் ஒரே ஆரவாரம். மூன்றாம் நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வென்றது. இலங்கைக்கும்- இந்தியாவுக்குமிடையில் இடம்பெற்ற யுத்தத்தில் இந்தியாவை இலங்கை தோற்கடித்துவிட்டது போன்ற உற்சாகம்; மகிழ்ச்சி;ஆரவாரம். இனவாதப்பத்திரிகைகள் முதல்பக்கச் செய்தி போட்டு முக்கியத்துவம் கொடுத்தன.

இந்தச் செய்தி சனாதிபதி ஜே.ஆரைச் சென்றடைந் தது. இனவாதி சும்மாவிருப்பாரா? இந்தியாவை இலங்கை கிரிக்கெட் மட்சில் தோற்கடித்தமையை கௌரவிக்கும் முகமாக மறுநாள் வியாழக்கிழமையை விடுமுறை தினமாக பிரகடனம் செய்தார். இலங்கை மக்களின் மகிழ்ச்சியில் தானும் பங்குகொள்வதாக அறிவித்தார். இதனால் இலங்கை அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், பாடசாலைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன.

இலங்கையைச் சேர்ந்த சுதேசிகள் சிலர் கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகத்தில் வேலை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் அடுத்த வியாழக்கிழமை வேலைக்குப் போகவில்லை. மறுநாள் வேலைக்குப் போனார்கள். இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் ஏன் நீங்கள் ஒருவரும் நேற்று வேலைக்கு வரவில்லை யென்று கேட்டார். அதற்கு அவர்கள் சொன்னார்கள் நேற்று இலங்கை அரசாங்கமும் சனாதிபதியும் விடுமுறை தந்தார்கள் என்றனர். ஏன் விடுமுறை என்று இலங்கையர்களைப் பார்த்து ரஷ்யத் தூதுவர் கேட்டார்.அதற்கு இலங்கையர்கள் இந்தியாவை இலங்கைக்கு கிரிக்கெட் மட்சில் வென்றுவிட்டார்கள் என்றனர். இவற்றையெல்லாம் கேட்ட ரஷ்யத் தூதுவர் பின்வருமாறு சொன்னாராம்.

Lazygame (சோம்பேறிகளின் விளையாட்டு) Sleeping People (அங்கு தூங்கி வழியும் மக்கள்) Mad President (பைத்தியக்காரச் சனாதிபதி) இதிலே குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய விடயம் யாதெனில் ரஷ்யா போன்ற கம்யூனிச நாடுகளில் கிரிக்கெட் இல்லை. ஆகையால் அவர்கள் "கிரிக் கெட்" விளையாட்டை "Time Killing Game" என்றழைககிறார்கள். இலங்கையர்கள் பற்றிய ரஷ்யாவின் மதிப்பீடு எப்படி?

## தூங்கி விழுந்த டிங்கிரி பண்டா விஜயதுங்கா:-

1989ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஒருநாள் விடுதலைப்புலிகளுக்கும்- அப்போதைய சனாதிபதியாகவிருந்த பிரேமதாசாவிற்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கைஅரசின் சார்பில் பிரேமதாசாவுடன் அப்போதைய இலங்கைப் பிரதமர் டி.பி.விஜய துங்கா, உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் ஆகியோரும் விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குழுவுக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினரும் பங்கு பற்றி னார்கள் . இக்குழுவில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களும் பங்கு பற்றினார். சிலவேளைகளில் இந்தப் பேச்சுவார்த்தை நள்ளிரவு வேளையிலும் இடம்பெறுவது வழக்கம்.

இவ்வாறுதான் ஒருநாள் இரவுவேளை பேச்சுவார்த்தை இடம்பெற்றபோது அன்றைய இலங்கைப் பிரதமர் டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்கள் தூங்கி விழுந்துகொண்டிருந்தார். நல்ல குறட்டை விட்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

அந்தக் காட்சியைப் பார்த்த தேணல்கிட்டு அவர்கள் அங்கிருந்த தனது நண்பர்களிடம் கேட்டார். "யார் இந்த தலைநரைத்த முதியவர் இப்படிக்குறட்டை விட்டு நித்திரை கொள்ளுகிறார் இந்தப் பேச்சுவார்த்தை மேசையில்" என்று; அதற்கு அவரது நண்பர்கள் இவர்தான் இலங்கையின் தற்போதைய பிரதமர் டி.பி. விஜயதுங்கா என்று பதிலளித் தார்கள். அதைக் கேட்ட கேணல் கிட்டு இந்த நாட்டு தமிழ்மக் களது பிரச்சினை பற்றி நாங்கள் இங்கே பேசிக்கொண்டிருக் கிறோம். இவரோ குறட்டை விட்டுத் தூங்குகின்றார். "இந்த நாட்டுப் பிரதம மந்திரிக்கு இந்த நாட்டுத் தமிழ்மக்களின் துன்ப துயரத்தில் எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா" என்றாராம். சிங்களத் தலைமைகள் தூங்குகின்றன. தமிழ் தலைமையோ விழிப்போடுதான் எப்போதும் உள்ளது. ஒரு காலத்தில் உறங் கிய தமிழர்களை இன்று சிங்களச் சகோதரர்கள் தட்டியெழுப்பி விட்டார்கள்.

## 1998இல் சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டம்:-

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்டது. இதற்காக 1998இல் இலங்கையில் சந்திரிகா அரசு சுதந்திரதினப் பொன்விழாவைக் கோலாகலமாகக் கொண் டாட ஏற்பாடு செய்தது. பிரித்தானியாவிலிருந்து சாள்ஸ் இளவர சர் இக்கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதாக இலங்கைக்கு வந்தார்.

1996ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதி தொடங்கிய ஓயாத அலைகள் -1 மண்மீட்புப் போரில் முல்லைத்தீவைப் பறிகொடுத்த சந்திரிகாவின் அரசும் அவரது யுத்தகால மந்திரி கேணல் ரத்வத்தையும் இன்னும் திருந்தாதவர்களாக 1997ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வெற்றி நிச்சயம் என்ற பெயரில் ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினார்கள். இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் யாழ்ப்பாணத்தி லிருந்து பயணம் செய்து கண்டி மாநகருக்குA9 பாதையூடாக தரைமார்க்கமாக பயணம் செய்து கண்டி போகம்பரை

கலாநிதி முரளிமாறன்

மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கையின் ஐம்பதாவது சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதேயாகும் என அக்காலகட்டத்தில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தைவிளக்கம் கொடுத்தார். ஆனால் அவரது கனவு பலிக்கவில்லை. கண்டி தலதாமாளி கைப் பகுதியில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக கண்டித் தலதா மாளிகை பிரதம குரு எக்காரணம் கொண்டும் சுதந்திர பொன் விழாவைக் கண்டியில் கொண்டாட அனுமதிக்க முடியா தென உறுதிபட கூறிவிட்டார். இதனால் கொழும்பில் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அங்குதான் கொண்டாடப்பட்டது.

## இளவரசர் சாள்ஸ் கண்ட காட்சி.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரதின பொன்விழா மிக பிரமாண்டமான அளவில் கொழும்பில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் விழாவுக்கு உரிய நேரத்தில் வந்து சேர்ந்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 03. 03 . 2006
மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# அரசின் பொய்ப் பிரச்சாரம்..!

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் முடிவில் இரண்டு தரப்புக்களுக்குமிடையில் இணக்கம் காணப்பட்ட விவகாரங்களை உள்ளடக்கி நோர்வே அனுசரணையாளர்களால் விடுக்கப்பட்ட கூட்டறிக்கைக்கு சிறிலங்கா அரசதரப்பு தவறான அர்த்தம் கற்பிக்க முயன்று வருகிறது.

அதாவது, 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கும் அப்போதைய சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக விடுத்துவரும் அறிவிப்பேயாகும். ஆரம்பத்தில் இவ்விவகாரம் தென்னிலங்கை கடும்போக்கு சக்திகளை திருப்திப்படுத்துவதற்காகக் கையாண்ட ஒரு விவகாரமாகப் பார்க்கப்பட்டது.

ஆனால் இதனை அரசு பெரும் பிரச்சாரமாகக் கையாள முனைந்ததையடுத்து இதற்கு கடும் ஆட்சேபனையைத் தெரிவித்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்டுவருகின்றனர்.

ஆனால், இதனை உள்வாங்கிக்கொள்ளாத சிறிலங்கா அரசின் பேச்சுவார்த்தைக்குழுவில் அங்கம் பெற்றிருந்த எச்.எல்.டி. சில்வா மீண்டும் மீண்டும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததோடு இதன் பின்னணியில் அரசியல் சதி நோக்கத்தோடு செயற்பட முனைகிறார்.

இந்த நிலையில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்தவொரு மாற்றங்களும் செய்யப்படமாட்டாது எனத்தெளிவாக உணர்த்தப்பட்ட பின்னர்; பேச்சு மேசையில் செய்யமுடியாது போனதை கொழும்பில் பத்திரிகையாளருக்கு வழங்கும் செவ்வி மூலம் மாற்றிவிடலாமென அரசு கருதுகின்றது போலும்.

உண்மையில் சிறிலங்கா அரசாயினும் சரி, அதன் சார்பில் பேச்சுவார்த்தைக்குழுவில் அங்கம் பெற்றவர்களாயினும் சரி எவ்வளவு தூரம் சிறுபிள்ளைத்தனமாகவும், நகைப்பிற்கிடமாகவும் நாட்டின் மிகமுக்கியமான விவகாரத்தில் செயற்படுகிறார்கள் என்பது இந்த விவகாரத்தில் தெரிகிறது.

ஜெனீவாப் பேச்சுக்களின் போது காணப்பட்ட இணக்கத்திற்கு தவறான அர்த்தத்தை கற்பித்து சிங்கள தேசத்து மக்களை ஏமாளிகளாக்க முற்படுகிறார்கள் சிறிலங்கா அரசதரப்பினர்.

இதன்மூலம் அரசதரப்பு அடுத்த கட்டப்பேச்சுக்களைக் குழப்பியடிக்க முற்படுகின்றனரா என்ற சந்தேகம் எழுகிறது.

நேர்மையான வழியில் செயற்படாது; அரசு என்ற அந்தஸ்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அரசு செற்படுவதானது அடுத்த கட்ட பேச்சு நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே கேள்விக்குறியாக்கிவிடும் ஆபத்து உண்டு.

இந்த நிலையில் அரசின் இந்தச் செயற்பாடு தொடர்பாகக் கடும் கண்டனத்தை தெரிவித்திருக்கும் புலிகள் இயக்கம் நோர்வே அரசிற்கும் இது தொடர்பாக அறிவித்துள்ளனர்.

எனவே இதன் ஆபத்தைப் புரிந்துகொண்டு சிறிலங்கா அரசின் இந்தத் தவறான பொய்ப்பிரச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு இந்தப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசிற்கும் முக்கிய பங்குண்டு.

இதனை உணர்ந்து கொண்டு நோர்வே அர்சு விரைந்து செயற்படுத்துவதே நிலைமைகள் சிக்கலாவது தடுக்கப்படும்.

அத்தோடு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாதுகாப்பதாகவும் அமையும்.

இல்லையேல் ஒருதலைபட்சமாக இந்த அறிவிப்பை விடுத்துவரும் சிறிலங்கா அரசு அதன் வழி செயற்பட முனையுமானால் எவராலுமே கட்டுக்கு கொண்டுவரமுடியாத அளவுக்கு நிலைமைகளை கொண்டு வந்துவிடும்.

இந்த நிலையில் சிறிலங்கா அரசும் கௌரவமான முறையில் செயற்பட முனையவேண்டும்.

ஆனால் சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் ஒப்பந்தங்களை கிழித்தெறிவதும் அதனை ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்க முயல்வதும் புதிதல்லவே.

எனவே அரசு ஆபத்தை வலிந்து இழுக்கும் வகையில் செயற்படுவதை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டிய பொறுப்பு அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேக்கு உண்டு.

# நடவாத ஒன்று..!

சுவிற்சர்லாந்தில் அரசிற்கும்-புலிகளுக்குமிடையில் பழைமை வாய்ந்த 'பொஷி' கோட்டையின் மூடிய கதவுகளுக்குள் நடந்த சம்பாஷனைகள், வாக்குவாதங்கள், உடன்பாடுகள் முரண்பாடுகள் எல்லாமே அந்தக் கோட்டையின் கதவுகளைத் திறந்துகொண்டு அநேகமாக எல்லாமே வெளியில் வந்துவிட்டன.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட புலிகளின் பேச்சுக் குழுவினராலும், அரசதரப்புப் பேச்சுக் குழுவினராலும், அனுசரணையாளர்களான நோர்வேயின் பிரதிநிதிகளாலும் என எல்லோருமே ஊடகங்களுக்கு வழங்கி வருகின்ற நேர்காணல்கள், அறிக்கைகள், செய்திகள் என்பனவற்றையெல்லாம் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால் ஜெனீவாப் பேச்சில் என்ன நடந்தது என்ற ஒரு வரைபடம் கிடைக்கும்.

ஆனால் இப்போது ஜெனீவாவில் நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாகக் காட்டும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. இது முற்றிலும் முரணான விடயமாகும். ஜெனீவாப்பேச்சில் கலந்துகொண்ட பேச்சுக் குழுவினர் படாதபாடு அத்தனையையும் ஜெனீவாவில் பட்டு உரத்து எழாத குரல்களால் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை ஜெனீவாவிலும் நடத்திவிட்டு வந்தவர்கள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்ததன் பின்னர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சிங்களத்துச் சண்டித்தனத்தை காட்டியுள்ளனர்.

ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்த அமுலாக்கம் குறித்து மட்டுமே பேசப்படும் எனத் தெளிவாக வரையறுக்கப்பட்ட பேச்சுவார்த்தையில் புலிகளின் பேச்சு மேலாண்மைக்கு அடிபணிந்த அரச பேச்சுக்குழுவுக்கு இப்போது இது கௌரவ விவகாரமாக மாறிவிட்டது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் தவமாய் தவமிருந்தவர்களுக்குக் கிடைத்த பரிசு புலிகளின் பேச்சுக்குழுவின் மாறாத நிலைப்பாடே.

பேச்சு மேசையில் நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அவர்கள் இந்தப் பேச்சு மேசையில் யுத்த நிறுத்த அமுலாக்கம் குறித்து மட்டுமே பேச தேசியத் தலைவர் அவர்களோடு இணக்கம் கண்டிருப்

முற்படுவது போன்றதே.

இத்தகையதொரு காரியத்தில் புலிகள் இயக்கம் ஈடுபடத் தயாரில்லை என்பது தெளிவு.

உண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மாற்றியமைக்க சிங்கள தேசம் படாதபாடு படுவதெல்லாம் அவர்கள் குறிப்பிடுவது போன்று அரசியல் யாப்பிற்கு முரணானது என்ற அடிப்படையிலோ அல்லது, சட்ட ரீதியற்றது என்ற அடிப்படையிலோ அல்ல.

மாறாக மஹிந்தவின் சிந்தனைக்கும், ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள தேசத்து கடும்போக்குக் கோட்பாடுகளுக்கும் உயிர் கொடுக்கவேண்டுமென்பதே.

இந்த அசிங்கமான கோட்பாடுகளுக்குள் பிரபாகரன் சிந்தனை ஒரு போதும் அடிபணியாது என்பதை ஜெனீவாப் பேச்சு மேசையில் சிங்கள



ஜெனீவாப் பேச்சுவார்த்தை என்பது நோர்வேயின் அதிக அலைச்சல் மூலம் இரண்டு தரப்பினரையும் அரங்கிற்குக் கொண்டு வந்த ஒரு செயற்பாடு.

பேச்சு விவகாரத்தில் ஆரம்பப் பேச்சு நடைபெற்ற முதலே அரசு குழப்பியடிக்கும் செற்பாடுகளிலேயே ஈடுபட்டு வந்தது.

இதனால்தான் நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அவர்களிடம் தமிழீழத் தேசியத்தலைவர் பேச்சுக்கான இடத்திலிருந்து, பேச்சுக்கான விவகாரம் வரை வெட்டொன்று துண்டு இரண்டாக வலியுறுத்தி உடன்பாடொன்றையும் கண்டிருந்தார்.

பதாக அறிவித்து அதன் திசையில் பேச்சைக் கொண்டு சென்ற பின்னரும் அரச பேச்சுக் குழுவினர் ஜெனீவாவில் புரிந்துணர்வு உடன்படிக்கை மாற்றியமைக்கப்பட்டுள்ளது என கூறுவது புலிகளின் பேச்சுக் குழுவுக்கு தலைமை தாங்கிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டது போல நகைப்பிற்கிடமானதொன்றாகவே உள்ளது.


உண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றம் கொண்டு வருவது, மாற்றியமைக்கப் படுவதென்பது குடியிருக்கும் வீட்டை அப்படியே வைத்துக்கொண்டு அதன் அத்திவாரத்தை மாற்றியமைக்க

தேசத்து காவுமூட்டைகளுக்கு உணர்த்தப்பட்ட பின்னரும் இன்னமும் உணராதது போல நடிப்பதை சிங்கள தேசத்துக்குக் கிடைத்த கேடு என்பதா?

இப்போது சிங்கள தேசம் ஜெனீவாவில் நடவாத ஒன்றை நடந்துவிட்டதாகக் கூறி சிங்கள மக்களை ஒரு மாய உலகிற்குக்கொண்டு செல்ல படாத்பாடு அத்தனையும் பட்டு நிற்கிறார்கள் என்பது தெரிகிறது.

ஆனால் சிங்கள தேசத்தின் இந்த செயற்பாடு எத்தனை ஆபத்தானது என்பது அவர்களுக்குப் புரியாமலிருக்க முடியாது.

**சிறி.இந்திரகுமார்.**



# இறுதித்தீர்வு ஒன்றுதான்

உடன்படிக்கைகளை தித்து நடந்து இனப்பிரச்சினைக்கு மைதி வழியில் தீர்வு காண்பதில் ங்கள இனவாதிகளும் அவர்களது தலைவர்களும் என்றுமே தயாராக இல்லை என்பது உலக அரங்கிலே மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்தவாரம் ஜெனீவாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் சிறிலங்கா அரசதரப்பு நடந்து கொண்டமுறை அதனை வெளிப்படையாகவே நிரூபித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை 22.02.2002 இல் விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள ஆ சியாளர்களுக்கும் இடையே செய்து கொள்ள உடன்பாட்டை செம்மையான முறையில் அமுல்செய்வது தொடர்பில் ஆராயவே ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனை நோர்வேத் தரப்பு- அதாவது இச்சந்திப்பை ஏற்பாடு செய்த தரப்பு அழுத்தம் திருத்தமாகவும் வெளிப்படையாகவும் அறிந்து வந்தது. இதனையே தமிழர் தரப்பும் வெளிப்படையாகவே கூறியது. அதேவேளை சிறிலங்கா அரசாங்கத் தரப்பும் இதற்கு ஒப்புக் கொண்டிருந்தது.

ஆனால் பேச்சுவார்த்தைக்குச் சென்ற அரசாங்கக் குழுவின் ஆரம்பவுரை அவர்கள் எடுத்துச்சென்ற ஆவணங்கள் அவர்களின் தயார்ப்படுத்தல்கள் எல்லாம் அதற்கு ஏற்றாற் போல இருக்கவில்லை. முதலில் போர்நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் பற்றிப்பேச சம்மதித்து ஜெனீவா சென்ற இவர்கள் போர்நிறுத்த ஒப்பந்தமே தவறானது என்ற அடிப்படையிலேயே முழுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தமையை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதற்கு அவர்கள் ஜெனீவாவிற்குச் சென்றிருக்கவேண்டுமென்பதோ புலிகளை சந்தித்திருக்க வேண்டுமென்பதோ அவசியமில்லை.


ஏனெனில் ஏற்காத ஒன்றைப் பேசி எதுவித பயனும் இல்லை.

அதிலும் மிகவும் உச்சக்கட்ட முரண்பாட்டு நிலையில் இருந்த இருதரப்பிடையே உண்மையிலேயே சமாதானத்தை ஏற்படுத்த இது ஒரு போதும் உதவுவதாக அமையப் போவதுமில்லை என்பதும் வெளிப்படையாகும்.

எனவே போர்நிறுத்த உடன்பாடே தவறானது. பேச்சுவார்த்தை அது குறித்து பேசுவதாயின் சம்மதமில்லை என நேர்மையாகத் தெரிந்திருக்கவேண்டியதே சிறிலங்கா அரச தரப்பு செய்திருக்க வேண்டியதாகும்.

ஆனால் போர்நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் பற்றிப் பேச சம்மதம் தெரிவித்துவிட்டு பின்னர் போர்நிறுத்த ஒப்பந்தத்தையே நிராகரிக்கும் வகையில் அரசாங்கத் தரப்பினர் வாதங்களை முன்வைத்தமையானது அவர்களின் நேர்மையீனத்தை வெளிப்படுத்தியது.

அதுமட்டுமல்ல பேச்சுவார்த்தையின்போது புலிகளின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது மட்டுமே அரசதரப்பினரது நோக்கமாக இருந்தது என்பதை சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபரின் தயாரிப்பும் ஏனையோரின் நடவடிக்கைகளும் வெளிப்படுத்தின.



ஆனால் இவர்கள் அடிப்படையில் ஒருவிடயத்தை மறந்து விட்டே இதனைச் செய்யமுற்பட்டுப் பெரும் அவமானத்தைச் சந்தித்தனர்.

அதாவது தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதும் அந்த உரிமையைப்பெற அமைதி வழியில் போராடிய தமிழ் மக்கள் மீது கட்டவீழ்த்து விட்ட வன்முறைகளே தமிழர்தரப்பை ஆயுதம் ஏந்திப் போராடவைத்தது என்பதையும் மறைத்துவிட்டு அரச பயங்கரவாதத்திற்குத் தமிழ்மக்கள் கொடுத்த பதிலடியை தமிழ்மக்கள் மீதான, புலிகள் மீதான குற்றச்சாட்டாக முன்வைக்க முனைந்தனர்.

ஆனால் இம்முயற்சிகள் எல்லாம் இறுதியில் தோல்வியில் முடிவடைந்து அரச தரப்பு அவமானப்பட்டுச் சென்றதையே பேச்சுவார்த்தையின் இறுதிமுடிவுகள் வெளிப்படுத்தின.

அதாவது அரச பேச்சுவார்த்தைக் குழுவினரும் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் என்னதான் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகளைத் திருத்திக்கூற முற்பட்டாலும் அவரைப் பதவியில் அமர்த்திய பெருமைக்குரிய கட்சிகள் இரண்டும் அதனை ஏற்கத் தயாராக இல்லை.

அவர்கள் பேச்சுவார்த்தையின் முடிவுகள் குறித்துக் கொண்டுள்ள அதிருப்தியானது அவர்கள் நினைத்த திசையில் பேச்சுவார்த்தை செல்லவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது.

எனவே சமாதான முயற்சிகள் குறித்து அவர்கள் நேர்மையாக இல்லை என்பது மட்டுமல்ல சமாதான வழியில் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது.

எனவே இப்பொழுது எட்டப்பட்ட இணக்கப்பாட்டை இவர்கள் எவ்வளவு தூரம் நடைமுறைப் படுத்தப் போகிறார்கள்? என்பதைக் கண்டறிய நீண்ட நாட்கள் எடுக்காது என்பது வெளிப்படையாகும்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அனைவருமே பாராட்டுகின்றனர். ஆனால் தமிழ் மக்களுக்கு 'இதன் முடிவு' எவ்வாறு அமையப்போகிறது என்பது அனுபவத்தின் மூலம் தெரியும்.

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதும் அவை சமாதான வழிமூலம் வழங்கப்பட வேண்டும் என்பதும் இன்று உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகிவிட்டது. "ஐக்கிய இலங்கைக்குள் தமிழீழம்" என்று ஒருவிடயத்தை இந்தியாவின் அமைதிப்படைத் தளபதி ஒருவர் கூறியிருக்கிறார். ஆனால் ''தமிழீழம்''என்பதை அங்கீகரிப்பது என்பதே முடிவாக இருக்கும் என்பதில் தமிழ்மக்களின் அதே அனுபவ அறிவு தமிழ்மக்களுக்குக் கூறிவருகிறது.

**வேலவன்**

## நேர்நோக்கு

# அரசு வழக்கும் நீலிக்கண்ணீர்

சிறுவர்கள் தொடர்பான விடயத்தில் சிறிலங்கா அரசு நீலிக்கண்ணீர் வடித்துவருகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்த்துவிட்டு ஒரு பானை சோறுமே அவிந்து விட்டது என்ற எடுகோலின்படி தற்போது சிறிலங்கா அரச தரப்பினர் கருத்துக் கூறி வருகின்றனர். அதாவது தங்களுடைய முதுகிலுள்ள அழுக்கைத் துடைப்பதற்கான வழியை காணவில்லை. அல்லது அதற்கான முயற்சியைக் கூட எடுக்கவில்லை. ஆனால் அரசு அடுத்தவர்களின் முதுகில் அழுக்கு இருப்பதாகக் காட்டி விமர்சித்துவருகிறது.

அதாவது சிறுவர்கள் தொடர்பாக தமிழர் தாயகத்தையும் தென்னிலங்கையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நிலைமைகள் தெளிவாகப் புரியும். சாதாரணமாக இலங்கையின் தலைநகரான கொழும்பின் வீதிகளில் பிச்சை எடுக்கும் சிறுவர்களோடு வன்னியை ஒப்பிட்டால் நிலைமை நன்றாகவே புரிந்துவிடும்.

இவ்வாறு நிலைமையைப் புரிந்து கொண்டவரான கொழும்பு தெகிவளையில் இயங்குகின்ற சிறுவர் நலன்பாதுகாப்புத் தொடர்பான அமைப்பான "எஸ்கேப்'' எனும் அமைப்பின் அதிகாரி ஒருவர் இவர் சுனாமிக்குப் பின் முல்லைத்தீவைப் பார்வையிட வந்தபோது பின்வருமாறு கூறினார்.

அதாவது தான் நினைத்தது போன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் நிலைமைகள் இல்லை எனவும் எல்லாமே ஒரு ஒழுங்கின் கீழ் செயற்படுவதாகவும் கூறினார். தொடர்ந்தும் அவர் கூறுகையில், கொழும்பிலுள்ள மருதானை, கோட்டை, புறக்கோட்டை, கொச்சிக்கடை போன்ற பல்வேறு பிரதேசங்களிலுள்ள பிச்சை எடுக்கும் சிறுவர்களின் தொல்லை அங்கு ஏனைய தேவைகளுக்காக செல்கின்றவர்களைப் பெரிதும் பாதித்துவருவதாகவும் இவ்வாறு பிச்சை எடுக்கும் சிறுவர்கள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதாகவும் ஆனால் அரச தரப்பினரோ அல்லது ஏனைய சிறுவர் நலன் தொடர்பான அமைப்புக்களோ எவ்வித நடவடிக்கைகளும் எடுப்பதாகவும் தெரியவில்லை. எனவே நானும் அவ்வாறுதான் வன்னியையும் எண்ணியிருந்தேன்.

**சிறிலங்காவைப் பொறுத்தவரை வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் பாலியல் தேவைகளுக்காக பெருமளவு சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். தென்னிலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து சிறுவர்கள் கடத்தப்பட்டு வெளிநாட்டு பிரயாணிகளுக்குப் பெருமளவு பணத்திற்காக வழங்கப்பட்டு வருகின்றனர்.**

ஆனால் இங்கு நிலைமை தலைகீழ். எந்தவொரு சிறுவனையும் பிச்சை எடுக்கும் நிலையில் நான் வன்னியில் கண்டதில்லை. புளியங்குளம், முறிகண்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்றதாகவும் எந்த இடத்திலும் தான் சிறுவர்கள் பிச்சை எடுப்பதனைக் காணவில்லை என ஆச்சரியத்துடன் கூறினார்.

யதார்த்தம் இதுதான். மேலும் சிறிலங்காவைப் பொறுத்தவரை வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் பாலியல் தேவைகளுக்காக பெருமளவு சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். தென்னிலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து சிறுவர்கள் கடத்தப்பட்டு வெளிநாட்டு பிரயாணிகளுக்குப் பெருமளவு பணத்திற்காக வழங்கப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு பெருமளவு சிறுவர்கள் கொழும்பு மற்றும் ஏனைய சிறிலங்காவின் நகரங்களில் பல்வேறுபட்ட வேலைகளுக்கு அமர்த்தப்பட்டு வருகின்றமையும் காலம் காலமாக நடந்தேறி வருகின்றது. இவ்வாறு இவர்கள் வேலைசெய்யும் இடங்களில் பல்வேறு துன்பங்களையும் இச்சிறுவர்கள் அனுபவித்து வருகின்றமையும் அவ்வப்போது வெளிவந்தவண்ணமே உள்ளது. இருந்தும் சிறிலங்கா அரசு இதுவரைக்கும் என்ன நடவடிக்கைகள் எடுத்தது? இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகம் மலிவாகவே நடந்தேறிவரும் தனது பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்த எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்காத சிங்கள அரசும் அதன் அதிகாரிகளும் மற்றவர்கள் விடயத்தில் அதிக அக்கறையும், கரிசனையும் காட்டுவதுதான் வேடிக்கையான விடயமாகிறது.

எனவே இந்நிலையில் நாம் ஒன்றைத் தெளிவாக பார்க்கவேண்டும். வன்னிப் பெருநிலப்பரப்பில் அதாவது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொழும்பைப் போன்றோ அல்லது ஏனைய சிறிலங்காவின் நகரங்களில் உள்ளது போன்றோ சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல், வீதிகளில் இறங்கி பிச்சை எடுத்தல், பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தல் போன்றன இங்கு நடைபெறவில்லை.

எனவே இந்நிலையில்தான் சிறுவர் நலனில் அக்கறை இருந்தால் தென்னிலங்கையைத் தவிர்த்துவிட்டு புலிகளை மட்டும் விமர்சிப்பதுஏன்? என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளரின் கேள்வி நியாயமாகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பல்வேறு சிறுவர் இல்லங்கள் காணப்படுகின்றன. அத்தோடு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும் பதினெட்டுக்கும் மேற்பட்ட சிறுவர் இல்லங்களை நடத்தி வருகின்றனர். இந்தச் சிறுவர் இல்லங்களில் மட்டும் பல ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையில் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் சிங்கள தேசம் வெறுமனே குற்றச்சாட்டுக்களை விட்டுத் தாங்கள் நியாயம் தேடுவதனை தவிர்த்து செயற்பட வேண்டும் என்றும் அடுத்தவனின் முதுகில் அழுக்கு உள்ளதா இல்லையா என்று ஆராய்வதற்கப்பால் தங்கள் முதுகிலுள்ள அழுக்கைத் துடைக்க அல்லது அகற்ற முன்வரவேண்டும். அதுவே ஒரு பொறுப்பு வாய்ந்த அரசின் பொறுப்பான செயலாகும்.

**மு. தமிழ்ச்செல்வன்**

# சினிமா என்பது யாரோ காணும் கனவு

## இசைநாடகக் கலைஞர் விமலநாதன்



கலைஞர்கள் மனிதர்களாக மனித நேயம், மனிதப்பண்பு, கலைஞான நயத்துடன் இருக்க வேண்டும். தன்னுடைய கலைப்படைப்பு வெளிக்கொணர வேண்டுமென்பதில் அக்கறையுடன் செயலாற்றி கலைவடிவங்களை எல்லோருக்கும் கிடைக்கப் படைக்க வேண்டும். கலைஞர்கள் மட்டும் வளரக்கூடாது. கலைஞரிற்கு ஊடாக கலை வளர வேண்டுமென்ற நல்ல மனப்பாங்கு மனதில் இருக்க வேண்டும்.

இவ்வாறு குறிப்பிடுகின்றார் இசைநாடக முன்னணிக் கலைஞர் நாகலிங்கம் விமலநாதன். இசைநாடகத்துறையில் மிகத்திறமையான கலைஞர்களில் ஒருவரான விமலநாதன், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானமாணியும், யாழ். இந்துக்கல்லூரியின் கணித ஆசிரியருமான விமலநாதன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

**நாம்:- இசைநாடகத்திற்குள் நீங்கள் உள்வாங்கப்பட்டமை தொடர்பாக.........?**

**விமலநாதன்:-** சிறுவயதில் ஒரு சில நிகழ்வுகளில் பங்கு பற்றியபோதும், யாழ். பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் கலாநிதி பாலசுந்தரம் பிள்ளையின் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு அருந்தவநாதன், விஜயபாஸ்கர் போன்ற கலைஞர்களின் அறிமுகம் ஏற்பட்டது. இதில் இருந்துதான் சிவன் பாத்திரத்தின் ஊடாக நாடகக் கலைக்குள் எனது பிரவேசம் அமைந்தது.

கலைத்துவம், கலைஞர்கள், கலைச்சூழல் ரீதியான பரிச்சயம் ஏற்பட்டு கலைவேந்தன் எம். தைரியநாதனின் நெறியாள்கையில் சத்தியவான் சாவித்திரி இசைநாடகத்துடன் இசை நாடகப் பயணம் ஆரம்பமாகி இன்றைக்கு இசை நாடகங்களில் வெவ்வேறு பாத்திரங்கள் ஏற்று நடித்து வருகிறேன்.

**நாம்:- இசைநாடகத் துறையில் இடைவெளி உணரப்படுகின்றது. இது தொடர்பாக....?**

**விமலநாதன்:-** இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் கலை வடிவங்கள் கட்டிவைக்கப்பட்டிருந்ததென்றே கூறவேண்டும். நாங்கள் பல்கலைக்கழகத்தில் போடும் நாடகங்களிற்கு பெரும் வரவேற்பு இருந்தது. மூத்த கலைஞர்கள் இன்றில்லை. ஒருசிலர் இருந்தாலும் அவர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருப்பதால் அவர்களும் இயங்குவதில்லை. இவர்களின் இடத்தை நிரப்பக் கூடியவர்களும் இல்லை. இதனால் இசைநாடகத்தில் ஒரு வறுமை நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் நிலைக் கலைஞர்கள் இல்லாத நிலையில் பகுதிநேரமாக செயற்படும் ஒருசில கலைஞர்களே இருக்கிறார்கள்.

**நாம்:- இன்றும் ஆண்களே பெண் பாத்திரம் ஏற்று நடிக்கிறார்கள்....?**

**விமலநாதன்:-** இசை நாடகத்தில் சந்திரா என்ற பெண் நடித்துள்ளார். ஆண், பெண்வேடம் பூண்டு பெண்ணாகத் தன்னை மாற்றிக்கொண்டு நடிக்கும் போது அதில் ஒரு அழகு இருக்கின்றது. ஆண் அழகான பெண்ணாக மாறி நளினங்களுடன் நடிக்கையில் மேடை அலங்காரமாகின்றது. ரசிகர்கள் உண்மையை உணர்ந்து சுவையாகப் பார்த்து ரசிக்கின்றனர்.

காளிகா பரமேஸ்வரி, பார்வதி சிவபாதம் போன்ற பெண்கள் ஆண்களாக நடித்துள்ளனர். பாத்திரம் யார் செய்கிறதென்றில்லை எப்படிச் செய்கிறதென்பதே முக்கியம்.

கட்டுமஸ்தான ஆண் பெண்ணாக நடிக்க இயலாது- இயல்பான நளினத்தோடு நடிக்கும்போது வெற்றி பெறுகிறது. அதை வியப்பாகவும் பார்க்கிறார்கள்.

**நாம்:- ஏன் கிராமப் புறங்களில் பாரம்பரிய கலைகள் மேடையேற்றப்படுகின்றன....?**

**விமலநாதன்:-** கிராமப்புறங்களில் தான் நாடகங்கள் இப்பவும் மேடையேற்றப்பட்டுவருகின்றன. இவர்களும் தொடர்ச்சியாக செய்யவேணும் என்ற நிலையில் தரமான படைப்புக்களை வெளிக்கொணர தவறுகிறார்கள், பாரம்பரிய கலைகள் மீதான ரசிப்புத் தன்மை நகரப் புறங்களில் குறைந்து வருவதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தொலைக்காட்சியில் தொடராக பாரம்பரிய கலைவடிவங்களை ஒளிபரப்ப வேண்டும். இதற்கு நாங்கள் தயாராக இருக்கிறம். நிறுவனங்கள், அமைப்புக்கள் முன்வந்து நடவடிக்கைகளை மேற்கொள்வார்களாயின் மக்கள் மயப்படுத்தப்பட்டு எமது கலைகளைப் பரவலாக்க முடியும். தொலைக்காட்சியின் ஊடாகப் பார்க்கும்போது வித்தியாசத்தையும் வேறுபட்ட தன்மையையும் பார்வையாளர்கள் பெறுவார்கள். இதனால் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறமுடியுமென்பது எனது கருத்து.

**நாம்:- கலை நிறுவனங்கள், அமைப்புகள் தொடர்பாக...?**

**விமலநாதன்:-** கவர்ச்சிகரமான, உயிர்த்துடிப்புடன் நல்ல தயாரிப்புக்களை தரமாக, பயனுள்ள வகையில் வெளிக்கொணர வேண்டும். இந்த நிலை இன்றில்லை. நிறுவனங்களின் படைப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலை நிறுவனங்களும் விடுமுறை தினங்கள் அல்லது மாதத்தில் வரும் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் நாடகத்தைப் போடவேண்டும். எமது படைப்புக்களைப் பகிர்ந்து கொள்ள பார்வையாளர்கள் வருகினமோ இல்லையோ நாங்கள் நாடகத்தைப் போட்டால் மக்கள் மத்தியில் ஓரளவேனும் எமது கலைகளை உட்புகுத்த முடியும்.

**நாம்:- கலைஞர்கள் தொடர்பாக....?**

**விமலநாதன்:-** கலைஞர்கள் மனிதர்களாக மனிதநேயம், மனிதப் பண்பு, கலைஞான நயத்துடன் இருக்கவேண்டும். தன்னுடைய கலைப்படைப்பு வெளிக்கொணர வேண்டுமென்பதில் அக்கறையுடன் செயலாற்றி கலையை எல்லோருக்கும் கிடைக்க படைக்க வேண்டும். கலைஞர்கள் மட்டும் வளரக்கூடாது. கலைஞரிற்கு ஊடாக கலைவளர வேண்டுமென்ற நல்ல மனப்பாங்கு மனதில் நிலைபெறுவதுடன் கலைஞர்களைப் பொறுத்தவரை அவன் எப்பொழுதும் முழுமை பெறுவதில்லை. தொடர்ச்சியாக இயங்கும்போதே அவன் முழுமையான கலைஞன் ஆகிறான். நிறையக் கற்பதன் மூலம் திறமையான அதே நேரம் தரமான படைப்புக்களை வெளிக்கொணரும் கலைஞர்களை நாம் காணமுடியும்.

**நாம்:- மூத்த கலைஞர்கள் பற்றி தங்களின் கருத்து.....?**

**விமலநாதன்:-** மூத்த கலைஞர்களுடன் நடிக்கும் போது நாடக நுணுக்கங்கள் பலவற்றை கற்றுக்கொள்கிறம். பல்வேறு கட்டங்களில் அவர்களது அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. அமரர் வி.என்.செல்வராசா மிக நன்றாக நடிப்புடன் முறையாக சங்கீதத்தைப் பயின்றவர். இயல்பாக நளினத்துடன் நகைச்சுவையாகவும் நடிக்கக்கூடியவர். மூத்தவர்களுடைய நடிப்பு மிக அற்புதமானது. இவர்களைப்போல் யாரும் செய்ய முடியாது. இப்படியானவர்க ளுடன் நடிக்கும்போதும் இளம் கலைஞர்கள் சற்றுத் திணறுவது உண்மைதான். மூத்த திறமையான கலைஞர்களுடன் நடிக்கும்போது சமநிலைப் புரள்வு ஏற்படுவது யதார்த்தமே.

**நாம்:- இசைநாடகத்தில் எதையாவது சாதித்ததாகக் கருதுகிறீர்களா...?**

**விமலநாதன்:-** இசைநாடகத்தைச் சும்மா செய்து வருகிறேனே தவிர இதில் முழுமையாக ஊறவில்லை. இன்னும் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. இதில் முழுமை பெறும் நோக்கில் துறைசார்ந்தவர்களுடன் இயங்கி வருகிறேன். மிகத் திறமையான கலைஞனாக வரவேணும் என்பதுதான் என் ஆசை.

**நாம்:- இசைநாடகத்திற்கு அணி செய்கலைஞர்கள்...?**

**விமலநாதன்:-** இசைநாடகத்தின் அச்சாணி ஆர்மோனியம். இசைநாடகம் தொடங்கி மங்களம் பாடும் வரைக்கும் நடிகர்கள் வந்து போய்க்கொண்டிருப்பார்கள். ஆர்மோனியக் கலைஞர் அப்படியே இருப்பார். நடிப்பம். திடீரெனப் பாடுவம். அதற்கான சுருதியை எடுத்துத்தர வேண்டும். முன்பு நாடகங்களை ஒழுங்கு செய்பவர்கள் ஆர்மோனியம் யார் என்று கேட்டுத்தான் நாடகத்தைப் பிடிப்பார்களாம். அந்தளவிற்கு ஆர்மோனி யத்தின் பங்களிப்பு நாடகத்தின் வெற்றிக்கு பெரும் பங்களிப்பாக இருந்துள்ளதனை அறியமுடிகிறது.

இப்பொழுது இசைநாடகத்திற்கு ஆர்மோனியம் வாசிப்பதற்கு ஆர்மோனியச் சக்கரவர்த்தி ஜோண்கவாஸ் தான் இருக்கிறார். மிகத் திறமையான அனுபவம்மிக்க கலைஞர்.

**நாம்:- இறுதியாக இத்துறை சார்பாகக் கூறுவது...?**

**விமலநாதன்:-** நல்ல கலைப்படைப்புக்களை உருவாக்கி அதன் ஊடாக பார்வையாளர்களை உள்வாங்கி அவர்களிடமும் எம் கலைப்பாரம் பரியத்தை பகிர்ந்துகொள்ள வேண்டும். சினிமாவிற்குள்ளும், தொடர் நாடகங்களிற்குள்ளும் மூழ்கியிருக்கும் எம்மவர்கள் மீண்டுவரவேண்டும்.

சினிமா என்பது யாரோ காணும் கனவு. இந்தக்கனவை நாங்கள் நேரத்தை வீணடித்து பார்ப்பதுடன் அதிலே ஊறிவிடுகின்றோம். இந்த நிலை மாறவேண்டும். எமது படைப்புக்களை நாங்கள் மீள மீள மேடை ஏற்றி விழிப்புணர்வை ஒன்று படுத்துவதுடன் எம்மிடமுள்ள திறமையான வளங்களை ஒன்றுபடுத்தி பயன்படுத்த வேண்டும்.

யாரோ செய்கின்ற, செய்த விடயங்களைப் பின்பற்றி மீண்டும் மீண்டும் அதனையே அசைபோட்டுக்கொண்டிருக் கிறோம். இந்த நிலை எம்முடன் இல்லாது போகட்டும். கலைஞர்கள், கலைநிறுவனங்கள் ஒன்றுபட்டுக் கிடைக்கின்ற களங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

எனக் கருத்துக்களை நிறைவு செய்ததுடன் பவளக்கொடி இசைநாடகத்தில் பவளக்கொடியின் மீது மையல் கொண்ட அருச்சனன் பாடும் பாடலையும் மிக அற்புதமாகப் பாடி செவ்வியை நிறைவு செய்தார் விமலநாதன்.

பவளக்கொடியின் மீது ஆசை மறப்பேனோ நானே மறப்பேனோ நானே - மாய பிரானே,
அவளுக்குள்ள அழகு....... ஆ...
அவளுக்குள்ள அழகு எவரிற்கும் இல்லையென்று.......

இசை நாடகத்தில் அருச்சனன், சத்தியவான், கிழவன், நாரதர், சாவத்திரி எனப் பல பெயர்களுடனும் காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் சிவன், அம்மன் போன்ற பெயர்களிலும் மிகத் திறமையாகப் பாத்திரமேற்று பாத்திரமாக வலம் வரும் கலைஞர் நல்லூரில் வாழ்ந்து வரும் கலைஞர். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், நாட்டார் வழக்கியல் கழகம் போன்ற அமைப்புக்களுடன் சேர்ந்து இயங்கி வருகின்றார்.

**இரா-வின்.**

# ஜெனீவாவில் எட்டப்பட்டவை நடைமுறைக்கிடப்படுமா?



**இராணுவத்தின் நிலைப்பாடு என்பது வெகு இறுக்கமாகிக்கொண்டிருப்பதையே நாளும் நாளும் காணமுடிகிறது. யாழ். மாவட்டத்துக்கான சிறிலங்கா இராணுவக் கட்டளையதிகாரியுடன் மனித உரிமை ஆணைக்குழு, பொதுமக்கள் பிரதிநிதிகள், அரசாங்க அதிபர் ஆகியோரது சந்திப்பில் பொதுமக்களின் மிக முக்கியமான இரண்டு கோரிக்கைகளைப் பாதுகாப்புக் காரணங்கள் எனக்கூறித் தயவுதாட்சண்யமின்றி நிராகரித்திருக்கிறார் கட்டளையதிகாரி.**

இலங்கைத்தீவின் தற்போதைய அரசியல் நகர்வின் மையமாக இருப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையே. உண்மையிலேயே காலாவதியாகிவிட்ட ஒன்றே இது என எண்ணத்தக்க வகையில் இந்த உடன்படிக்கை கேவலப்படுத்தப்படுகிறது. 'சட்டவலுவற்ற ஆவணம்' என்பது இதற்கு சிறிலங்கா அரசதரப்பால், ஜெனீவாப் பேச்சுக்களிற்குப் பின்னர் சூட்டப்பட்டிருக்கும் பெயர். ஆனால் முரண்நகையாக அதே புரிந்துணர்வு உடன்படிக்கையின் மீது அடுத்த கட்டப் பேச்சுக்களிற்குப் போவது பற்றியும் அரசாங்கம் பேசுகிறது.

ஆனால் அடுத்தகட்டப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கிறதா? ஜெனீவாவில் நடந்த முதல் அமர்வுக்குப் பின்னான இந்த ஒரு வாரத்தில் (மொத்த எட்டுவாரங்களே அடுத்த சுற்றுக்கான கால இடைவெளி) நடைபெற்றவற்றையும் நடைபெறாதவற்றையும் சொல்லப்பட்டவற்றையும் சொல்லப்படாதவற்றையும் வைத்துப் பார்க்கும்போது இந்தச் சந்தேகம் மேலெழத்தான் செய்கிறது.

சனவரி 22 ஆம் திகதி மட்டு-புலிபாய்ந்தகல்லில் வைத்து புலிகளின் முக்கிய தளபதிகள் இருவரைக் கொலை செய்வதன் மூலம் ஜெனீவாப் பேச்சுக்களையே தகர்த்துவிட / குழப்பிவிட சிறிலங்காப் படைகளின் ஓட்டுக்குழுவொன்று (உண்மையில் இந்தத் தீர்மானம் எந்த மட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடுமென்பது மிகமுக்கிய விவகாரமாகும். எவ்வளவு உயர்மட்டத்திலிருந்து அது வந்திருக்கக் கூடுமோ, அந்தளவுக்கு நிலைமை தீவிரமாகிறது) எடுத்தமுயற்சி வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

ஒட்டுப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து (அரச படைகள் தவிர்ந்த வேறெவரும் ஆயுதங்கள் வைத்திருப்பதை அரசு தடைசெய்யும்) விடுவதற்கு ஜெனீவாவில் அரசு சம்மதித்திருப்பதை இதனுடன் பொருத்திப்பார்க்கும்போது ஏப்ரல் 19 இல் மீண்டும் பேச்சுக்கள் நடைபெறக்கூடுமா, என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதது.

இவ்வாறு சொல்லுவதற்கு மேலும் பல காரணங்கள் உள்ளன. துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைவதற்குச் சம்மதித்ததன் மூலம், துணைப்படைகள் உள்ளன என்பதை அரச தரப்புக்குழு ஏற்றுக்கொண்டுவிட்டது என ஜாதிக ஹெல உறுமய மார்பிலே அடித்துக்கொண்டு கதறுகிறது. அவ்வாறு ஆயுதக்களைவு செய்வதை நாம் ஏற்கமாட்டோம். அது மகிந்த சிந்தனைக்கு எதிரானது எனக் கொதிக்கும் உறுமய; அப்படி ஏதும் நடந்தால் (மகிந்த சிந்தனைக்கு விரோதமாக நடந்தால்) அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் எச்சரித்துள்ளது.

அரசின் மற்றொரு கூட்டாளியான (ஒப்பீட்டளவில் மிகப்பெரிய கூட்டாளியான) ஜே.வி.பியோ இன்னும் ஒருபடி மேலே போய், துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைவதாயின் அதற்கு முன்பாகப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென்கிறது.

வெகு சுவாரஸ்யமாயிருக்கிறது கொழும்பின் அரசியற்கள நிலைமை. என்ன சொல்லுகிறோம் என்ற பிரக்ஞையேயின்றி ஆளாளுக்கு வாய்புலம்புகிறார்கள். இவர்களின் வாய்மொழிகளுக்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் நடுவே வெறுமனே கிடக்கிறது " ஜெனீவாக் கூட்டறிக்கை" இதனை, மிக உடனடியாகவே நடைமுறைக்கிடுமாறு 'இணைத்தலைமை' நாடுகளிலிருந்து அனைவரும் விடுக்கின்ற வேண்டுகோள்களுங்கூட. இவ்வாறு கொழும்பின் அரசியற்சாற்றில் படபடக்கின்றன. சூழலு க்கு வெப்பம் சேர்த்துக்கொண்டிருக்கின்றன. ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைப்பதாக அமைகின்றன அரசாங்கத்தரப்பின் சட்ட அறிஞரின் கூற்றுக்கள்.

இந்தக் குழப்பங்கள் ஒருபுறமென்றால், தமிழர் தாயகப் பகுதியிலே சிறிலங்காவின் ஒட்டுப்படைகளின் நடவடிக்கைகள் மிகத்தீவிரமாக இருக்கின்றன. தம்மை வெளிப்படையாக அடையாளங் காட்டிக்கொள்ளுமளவுக்கு இவை பகிரங்கமாகவும் நடக்கின்றன.

இதற்கெல்லாம் அரசின் பதிலென்ன? பேச்சுக்களின் முடிவுகள் இருதரப்புக்குமே வெற்றி என்றதோடு கதையை முடித்துவிட்டது அது. அதற்கப்பால் எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைக்கிடுவது பற்றி அரச தரப்பிலிருந்து எவரும் வாய்திறப்பதாகத் தெரியவில்லை. (ஏனென்றால் இரண்டுமாதகால கால அவகாசத்தை அரசு பெற்றுக்கொண்டுவிட்டதுதானே!)

ஆனால் தம்மால் ஆயுதங்களைக் கீழே வைக்கமுடியாது என வெகு சாதாரணமாக ரொய்ட்டருக்கு விநாயகமூர்த்தி முரளிதரனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேட்டி மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டதாகவும் ரொய்ட்டர் கூறுகிறது. (விநாயகமூர்த்தி முரளிதரன் இப்போது விக்னேஸ்வரன் மதன்குமார் என்ற பெயரில் நடமாடுவது 'தமிழ்நெற்' இணையத்தளத்தினால் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரி வீதி, பதுளை என்ற முகவரியும் 663 123530 என்ற இலக்கத்தைக் கொண்டதுமான அடையாள அட்டை முரளிதரனுக்கு 2004.05.10 இல் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர் விபரங்களுடைய ஒரு நபர் இருந்திருப்பாரானால் அவருக்கு என்ன நேர்ந்திருக்கக்கூடும்?)

நிலைமை இவ்வாறு இறுகிக்கொண்டு வரும்போது கண்காணிப்புக்குழு இதற்குச் சிகரம் வைத்தாற்போல தனது கருத்தை வெளிப்படுத்திவிட்டது.

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விநாயகமூர்த்தி முரளிதரனின் ஒட்டுப்படை இயங்குவது உண்மையே

**பு. சத்தியமூர்த்தி**

என்று வெகு அழுத்ததிருத்தமாகத் தெரிவித்திருக்கிறார் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்ரப்.

எல்லோருமே சொல்வது போல பந்து இப்போது மகிந்தவின் கைகளில் மிகக் கவனமாகப் போய்ச்சேர்ந்துவிட்டது. துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்தே ஆகவேண்டிய நிலைக்கு அரசு இறுகியுள்ளது.

ஆனால், அரசு என்ன செய்கிறது? இராணுவத்தின் சீருடையில் துணைப்படைகள் ரோந்து சுற்றுகின்றன! அதாவது களையப்பட்டுக் கலைக்கப்படவேண்டிய துணைப்படைகள் உத்தியோகபூர்வப் படைகளுக்குள் உரும்மறைக்கப்படுகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடமாடும் துணைப்படையினரால் பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், தமிழுணர்வாளர்கள் தலைமறைவாக வாழ நேர்ந்திருக்கிறது. இவர்களே உருமறைக்கப்பட்டு வருகின்ற துணைப்படைகளின் இலக்காக இருக்கின்றனர்.

இது போதாதென்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனைப் பகிரங்கமாகப் பட்டப்பகலில் இராணுவ,பொலிஸ் பாதுகாப்புடன் வந்து கைத்துப்பாக்கியைக் காட்டிக் கொலை செய்துவிடுவதாக மிரட்டியிருக்கிறது குறித்த ஒட்டுப்படை.

இராணுவத்தின் நிலைப்பாடு என்பது வெகு இறுக்கமாகிக்கொண்டிருப்பதையே நாளும் நாளும் காணமுடிகிறது. யாழ். மாவட்டத்துக்கான சிறிலங்கா இராணுவக் கட்டளையதிகாரியுடன் மனித உரிமை ஆணைக்குழு, பொதுமக்கள் பிரதிநிதிகள், அரசாங்க அதிபர் ஆகியோரது சந்திப்பில் பொதுமக்களின் மிக முக்கியமான இரண்டு கோரிக்கைகளைப் பாதுகாப்புக் காரணங்கள் எனக்கூறித் தயவுதாட்சண்யமின்றி நிராகரித்திருக்கிறார் கட்டளையதிகாரி. வலிமேற்கு, வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்குத் தடை, யாழ்ப்பாண வீதிகளில் குவிக்கப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கையைக் குறைத்தல் என்பனவே நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள்.

இதற்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையே செல்லுபடியற்றதென வாதிடும் வழக்கு சிறிலங்காவின் மேன்முறையீட்டு மன்றில் மார்ச் 29 இல் விசாரணைக்கு வருகிறது.

இதையெல்லாம் தாண்டித்தான் ஏப்ரல் 19 இல் ஜெனீவாவில் ஏதாவது நடைபெறுவதென்றால் நடைபெற வேண்டும். இன்னும் ஏழு வாரங்கள் மட்டுமே உள்ளன இதற்கு பொறுத்திருப்போமே.

தமிழீழ ஆவணக்காப்பகம் தமிழரின் போராட்ட வரலாறுகளைச் சித்தரிக்கும் எழுத்து ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றது. குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களின் முயற்சியின் பயனாக தமிழீழ ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டது.

உலகத் தமிழர் ஆவணக்காப்பகம் என்ற பெயரில் கண்டியில் கடந்த காலத்தில் இயங்கி வந்த இவ் ஆவணக்காப்பகம் கிளிநொச்சி உதயநகர் புகையிரத வீதியில் சந்தைக்கு அருகாமையில் தற்போது இயங்கி வருகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகத்தில் செய்த ஆவணங்கள்.

இப்படியான தரவுகளைத் தேடிப் பெற்றுப் பேணிப் பாதுகாப்பதே ஆவணக்காப் பகங்களின் முக்கிய பணி என்போம். வரலாற்றைக் கையகப்படுத்தி வருங்காலச் சமுதாயத்துக்கு வழங்கும் இந்த மரபு ஒரு நவீன கண்டுபிடிப்பல்ல. கி.மு. 3000-2800 களில் மொசப்பத்தேமியா நகரின் இயானா ஆலயத்தில் எழுதப்பட்ட களிமண் எழுத்துக்களே உலகில் கிடைத்த மிகத் தொன்மையான எழுத்தாவணம் எனக் கூறுவர்.

தமிழீழத்தை மையமாக வைத்து அவர்களின் புராதன வரலாற்று ஆவணங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பர்.

ஒரு தனிமனிதன் என்றால் என்ன- ஓர் இனமாக இருந்தால் என்ன- நடந்த நிகழ்வுகளை நெறிப்படுத்தித் தொகுத்து வழங்கப்படும் சான்றாதாரங்களையே வரலாறு என்று கூறுவோம். எந்த ஒரு நிகழ்வையும் பெரிதுபடுத்தியோ, மறைத்தோ, இட்டுக்கட்டியோ தொகுப்பது வரலாறே அல்ல. அவற்றைப் புனைகதைகள் என்றே அழைத்துவிடலாம். எந்த இரு இனத்தையும் தாழ்த்தியோ, உயர்த்தியோ வரைபவை எல்லாம் வரலாறு ஆகிவிட முடியாது. அவை சுய புராணங்கள் என்போம் துரதிர்ஷ்டவசமாக தமிழர்கள் தம் வரலாற்றை அதற்கான சான்றாதாரங்களை முறையாகத் தொகுத்து வைக்காமல் விட்டுவிட்டதால் தமிழின எதிரிகள் சூழ்நிலையைத் தமதாக்கிக்கொண்டு பல புனைகதைகளைப் புனிதமாக்கிக்கொண்டு அவற்றையே "வரலாறு" எனப் பொன் முலாம் பூச, பொதுத் தொடர்புசாதனங்கள் அவற்றை மேடைகளில் அரங்கேற்றம் செய்கின்றன. இன்னும் இந்த நிலை தொடர்கிறது.

தள்ளப்பட்டு வருகிறது. மாறாக புதிய பல வரலாறுகள், தமிழின வரலாறுகள் தமிழின வரலாற்றுப் புதைகுழிக்கு மேல் எழத் தொடங்கிவிட்டன. இந்தச் சர்வதேச வரலாற்று மோசடி தடுத்து நிறுத்தப்பட தமிழர்கள் விழித்துக்கொள்ளவேண்டும். வரலாறு இல்லாத இனம் தன்னை ஒரு நாகரிக இனமாகப் பிரகடனப்படுத்திவிட முடியாது.

மேலை நாடுகள் ஆவணக்காப்பகத் துறையில் பல ஆண்டுகளுக்கு முன்பே விழித்துக்கொண்டுவிட்டன. ஒரு மாபெரும் புரட்சியே அங்கு ஏற்பட்டு விட்டது. பல்வேறு நவீன கண்டுபிடிப்புக் கருவிகள் இத்துறையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஒளிப்பட, திரைப்படச் சாதனங்கள், பதிவு நாடாக்கள், கணிப்பொறிகள், நுண்சுருள்கள், நுண்ஒளித் தகட்டில் பகர்ப்பு எடுக்கும் கருவிகளென நவீன சாதனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டு சமயம், தத்துவம், நாட்டியம், மருத்துவம், மொழி, இலக்கணம், சிற்பம், ஓவியம், சோதிடம் எனப் பல்வேறு துறைகளுக்கும் பயன்படுத்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

மனித நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் எனக் கால வெள்ளத்தால் மறைந்து போய்விடக்கூடிய அனைத்துமே நிரந்தர ஆவணங்கள் ஆக்கப்பட்டு வருங்காலத் தலைமுறையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஆவணக்காப்பகங்கள் வரலாற்று மாணவர்களை நோக்கி நகர ஆரம்பித்து






# கிளிநொச்சியில் இயங்கும் தமிழீழ ஆவணக்காப்பகம்

கடந்த காலம் தொடர்பான தகவல்களைப் பார்ப்பதற்கு விரும்புவோர் இங்கு வந்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், வரலாற்று ஆர்வலர்கள், அரசியல் ஆய்வாளர்களுக்கும் இவ் ஆவணக்காப்பகம் உதவும.

இவ் ஆவணக்காப்பகத்தில் தமிழீழ தேசியக் கொள்கை, மற்றும் பல ஆவணங்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆவணங்கள் என்பவை எழுத்து வடிவிலான சான்றாதாரங்கள் எனவும் இவைகளைப் பேணிப் பாதுகாத்து வைக்கப்படும் இடங்கள் காப்பகங்கள் என்றும் பொதுவாகக் கருதப்படுகின்றது.

ஒரு பாரிய துறையின் மேலெழுந்த வாரியான பார்வை இது. அலி-ஏ-மஸ்ருப் என்ற ஆய்வாளர் ஆவணக்காப்பகத் துறையை ஐந்து பெரும் பிரிவுகளாக வகுக்கின்றார்.

01) தொல்பொருள் ஆவணங்கள்:- மட்பாண்டங்கள், நாணயங்கள், எலும்புக் கூடுகள் சுருங்கக்கூறின் தொல்பொருளாய்வின் மூலம் பெறப்படும் அரும் பொருட்கள் அனைத்தும்.

02) எழுத்து ஆவணங்கள்:- கல்வெட்டுக்கள் மற்றும் எழுத்து வடிவிலான அனைத்தும்.

03) ஓவிய ஆவணங்கள்:- பாறைகளில் வரைந்த படங்கள், செதுக்கிய ஓவியங்கள், சிற்பங்கள்.

04) ஒளி, ஒலி ஆவணங்கள்:- பல்வேறு நிகழ்வுகளைக் கொண்ட ஒளி, ஒலிப் பேழைகள், நுண்ணிய சுருள் நாடாக்கள்.

05) வாய்மொழி ஆவணங்கள்:- மனித நினைவாற்றலை ஒலிப்பதிவு அறிஞர்களால் முழுமையான வெற்றியை எட்டமுடியவில்லை. பல நூற்றாண்டு காலத் தமிழர் வர லாறு எந்தவித வரலாற்று அடிச்சுவடுகளுமற்றதோர் இருள் படிந்த சூனிய நிலையிலேயே காணப்படுகிறது.

திராவிடர்கள் எகிப்தியரின் வழித் தோன்றல்கள் என்று கூறுகிறது ஒரு ஆய்வு. இந்தியாவின் வடக்கேயிருந்து ஆரியர்கள் படையெடுப்புக் காரணமாகத் தெற்கே புலம் பெயர்ந்தவர்களே திராவிடர்கள் எனக் கூறுகிறது இன்னுமோர் கணிப்பு. திராவிடர்களே உலகின் மூத்த குடியினர். கடறகோளால் அமிழ்நதுவிட்ட குமரிக் கண்டமே தமிழரின் ஆதித்தாயகம் என்று கூறுகிறது பிறிதோர் ஆய்வு. ஆனால் நிலையான சான்றாதாரமாகக் கிடைத்திருப்பது மொகஞ்சதாரோ ஹரப்பா கண்டுபிடிப்புக்களே. இவை திராவிடர்களின் தொன்மையையும் அவர்கள் உலக நாகரிகத்தின் முன்னோடிகள் என்ற உண்மையையும் உலகுக்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் "வாழும்" ஆவணங்களாகும். வரலாற்றை முறைப்படி தொகுத்து வைக்காத இனங்கள் இருண்ட கண்டமென வர்ணிக்கப்பட்ட ஆபிரிக்க நாட்டுப் பழங்குடியினர் என்பர்.

பிற்காலத்தில் திரட்டப்பட்ட பழம் பெரும் ஓலைச்சுவடிகளும் தமிழ் மன்னர் காலத்து வானளாவிய சிற்ப ஆலயங்களும் சாசனக் குறிப்புக்களும் மடாலயங்களில் கிடைத்த தரவுகளும் தொல்பொருளாய்வு மூலம் கிடைத்த கலைச்செல்வங்களும் தமிழர் வரலாற்றை கணிக்க ஓரளவு உதவினும் பல காலகட்டங்களில் தகவல் பெறமுடியாத தொய்வுநிலை காணப் படுவதுடன் தொடர்பு அறுந்தும் முழுமையற்றும் காணப்படுகிறது. இவை பண்டைய தமிழர் வரலாற்றின் நிலைப்பாடு. இன்று...?

திராவிட இனத்தை அரக்கர்கள் ஆக்கி, குரங்குகளாக்கி இதிகாசங்கள் பிறந்தன. தமிழர் பெருமளவில் வாழும் தமிழகம், இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமல்ல. தமிழர் குடியேறிய நாடுகளில் கூட இந்தப் புலவர்களின் புலுடாக்கள் வரலாறு என்ற வடிவில் கொடிகட்டிப் பறக்கின்றன. ஒரு சனநாயக அரசு என்றால் அங்கு வாழும் பல்லின மக்களையும் ஒரே கண்ணோட்டத்தில் நோக்குவதோடு, மட்டுமல்ல அவர்கள் பண்பாட்டு கருவூலங்களை வரலாற்று ஆதாரங்களை அந்தந்த இனத்தின் பண்பு நிலைக்கொப்பப் பேணிப்பாதுகாத்துத் தருவது அதனோர் புனிதமான கடமையாகும்.

ஆனால் அநேக நாடுகள், மாற்று இனமக்களின் வரலாற்றுச் செல்வங்களை எல்லாம் குழிதோண்டிப் புதைத்து விடுகின்றன. அல்லது ஒருதலைப்பட்சமாக அவற்றைத் தமதாக்கிக்கொள்கின்றன. ஆக, சர்வதேச மட்டத்தில் தமிழினம் பண்பாட்டுப் பின்னணியற்றதோர் இனமாகப் பின்



விட்டன. அவர்களை ஊக்குவிக்க ஊர்திக் காட்சிகள் உலகெல்லாம் நடைபெறுகின்றன. புதிய ஆய்வாளருக்கு களம் அமைத்துக் கொடுக்க ஆவணக்கல்வி அதிகாரிகள் நியமிக் கப்படுகிறார்கள். இந்த முயற்சிகளுக்கு மகுடம் வைத்தாற் போல ஒத்த பாரம்பரியத்தைக் கொண்ட பல்வேறு உலக நாடுகளும் ஆவணக் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு கூட்டுறவு அடிப்படையில் புரட்சிகரமான மாற்றங்களைத் தோற்றுவித்து வருகின்றன.

ச.சங்கரன்

எனவே உலகெல்லாம் பரவிய தமிழர்களும் தாம் வாழும் நாட்டு அரசுகளை நம்பிக்கொண்டிருக்காமல் அந்தந்த நாடுகளில் தம் உரிமையை நிலைநாட்ட வரலாற்றை, பாரம்பரியக் கலை வடிவங்களை, பண்பாட்டு கருவூலங்களை, முதியோரின் நினைவாற்றல்களை முறையாகத் தொகுத்து ஆவணக்காப்பகங்கள் நிறுவவேண்டும். தாம் வாழும் நாடுகளில் நடக்கும் வரலாற்றுத் திரிபுவாதங்களை உடனுக்குடனே மறுத்து ஆதாரபூர்வமான உண்மையை நிலைநாட்ட எம் இனத்தில் உள்ள அறிஞர்களும் புத்திஜீவிகளும் முன்வரவேண்டும்.

இந்தத் திரிபுவாதங்களுக்கு உரிய நேரத்தில் பதில் தராது நம் வரலாற்று அறிஞர்கள் அமைதியாகிவிடுவதால் நம் இளைய தலைமுறையினரும் இவற்றை நம்பவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கர்காமத்தில் நாம் இழந்தவை கோடி! எனவே புத்தம் புதிய வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள், தமிழினத்தின் மத்தியில் தோன்றவேண்டும். வரலாற்று ரீதியாகத் தமிழ் இனத்துக்குச் சேரவேண்டிய உரிமைகளை நிலைநாட்ட முன்வரவேண்டும். இந்த முயற்சிகளுக்கு ஆவணக்காப்பகங்கள் அடித்தளமாக அமையவேண்டும்.

# காரசாரம்

# வெண்ணெயை விற்றுவிட்டு நெய்க்கு அலையும் புத்திசாலிகள்

**உலக** நாடுகள் பூராவுமே விவசாயப் பண்ணைகள் ஆபத்தாக மாறத்தொடங்கியுள்ளன. எப்போதாவது பத்திரிகைகளில் வரும் பெருவிபத்துச் செய்திகளோடு உணவில் நஞ்சு, பறவைக் காய்ச்சல், விலங்கு நோய்கள், இவற்றுடன் கூடவே இவற்றால் தொகையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம் என செய்திகள் வருகின்றன. சந்தையில் வாங்கிய கோவாவை சமைத்துண்டவர்கள் பரவலாகப் பல இடங்களிலிருந்தும் ஒரே நாளில் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டதும், விசச்சாராயம் அருந்தி பலர் உயிருக்குப் போராடியதும் போல அண்மையில் மானிப்பாய் பாடசாலையொன்றில் நடந்தது என்ன? என்ற கேள்விகளெல்லாம் விடை தெரிந்தாலும் பெரும்பான்மையாக மறைக்கப்பட்ட காரணங்களுடன் சமாளிக்கப்பட்டுவிட்டன.

எனினும் தொடர்ந்தும் பல வகை அனுபவங்களை எமது விவசாயிகள் பெற்றுவருகின்றனர். வட்டக்கச்சியில் தவறுதலான மருந்துப் பாவனையால் அழிந்துபோன விவசாய நிலமொன்றைக் காணக் கூடியதாகவுள்ளது. இவை தவிர பொன்போலக் கதிர்வருமெனக் காத்திருந்த பல விவசாய நிலங்களில் பால்போல கதிர் வந்துள்ளது. இந்த வெண்கதிர் பிரச்சினைக்கு எப்போது என்ன மருந்து பாவிக்கவேண்டும். என்று எமது விவசாயிகள் அறியாதவர்களும் இல்லை. உரிய காலத்தில் பெறமுடியாத கடன் வசதிகள் உரியகாலத்தில் மருந்து தெளிக்கவோ விசிறவோ முடியாத நிலையைத் தோற்றுவிக்கிறது. இதைவிட மருந்துகளையும் இப்போது நம்ப முடியவில்லை. கலப்படம்.

இப்படியே உலகம் பரந்தளவில் பறவைக்காய்ச்சலுக்கும், கோழித்தீவனமே காரணம் எனக்கருதி தீன்மூடைகளும் அழிக்கப்படுகின்றன. சில வருடங்கள் முன்னதாகப் பன்றி, ஆடு போன்ற விலங்குகள் அழிக்கப்பட்டன. நம்மூரில் மாடுகளுக்கு குரை வெடிப்பு, வாயில் நீர்வடிதல் (இந்நோய்க்கு பழைய மாட்டு வாகடம் 'குரைநோய்' என்றே பெயர் கொடுத்துள்ளது) பொதுவாக மாட்டுக்கு மாரிச்சேற்றில் திரியும் காலத்தில வரும் இத்தொற்று நோயால் மாடுகளுக்கு உயிரிழப்பு குறைவாயினும் அவற்றின் பயன்பாடு அருகிவிடும்.

இப்படியே தொடர்ந்தும் போய்க் கொண்டிருந்தால் முடிவுதான் என்ன? இன்று உலகம் பரந்தளவில் நவீனரகப் பயிர்ச்செய்கையே ஊக்குவிக்கப் படுகிறது. இரசாயன மருந்து உற்பத்தியாளர்களும் இரசாயனப் பசளை உற்பத்தியாளர்களும் வானளவு உயர்ந்து செல்கின்றனர். அதேசமயம் அவற்றின் நுகர்வோர் மிதப்பதாகக் காணோம்.

இந்த வேளையில்தான் இயற்கை விவசாய விஞ்ஞானம் என்ற ஒரு புதிய சலனம், பசுமைப் புரட்சியாளர்கள் மத்தியில் தோன்றத் தொடங்கியுள்ளது. இவை பற்றிய அறிவு இன்றைய தலைமுறையினருக்கு இல்லாமல் இருக்கலாம். அதைவிட இளையோர் விவசாய முயற்சிகளில் ஈடுபடுதலும் குறைந்துவிட்டனர். விவசாயக் கூலித்தொழிலாளர்கள் என்போர் இன்று முக்கியமாக அதையே தொழிலாக வைத்திருப்பதில்லை. சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக கிருமி நாசினிகள் தமிழீழத்துக்குள் வராத காலத்தில், இரசாயன உரங்கள் வராதகாலத்தில் நாம் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவில்லையா? அப்போது என்ன செய்தோம். ஓரளவுக்கு புதிய இயற்கைப் பசளைகளையும் கிருமி நாசினிகளையும் பாவிக்கவில்லையா என்ன? முகமாலை ஓமந்தைப் படலை திறந்ததும் எங்கள் இயற்கை விவசாய விஞ்ஞானிகள் உறங்கிவிட்டார்கள் போலும்.

ஒருகாலத்தில் வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குழை ஏற்றுமதி செய்வோம். பாடசாலை விட்டு வந்ததும் பாவட்டை கொழுஞ்சி, அவுரி போன்ற குழைகளை வெட்டி அளவான கட்டுக்களாகக் கட்டி விற்போம்.அதில்வரும் பணத்தில் கொப்பி, பென்சில் போன்றவற்றை வாங்குவோம். மீதியை அம்மாவிடம் கொடுத்து விடுவோம்.



இது தவிர எருலொறிகள் தினசரி வந்து எருக்கொண்டுபோகும். அதிகாலை எழுந்து தெருவில் சாணி பொறுக்கி சேகரித்து விற்கலாம். யாழ்ப்பாணத்தில் மாடு மேய்க்கக் கொண்டுசெல்பவா கூடவே ஒரு கடகம் கொண்டு போவார் ஏன்? மாடு சாணி போட்டால், உடனே அதைப் பொறுக்கி கடகத்தில் போட்டுவிடுவார்.

தோட்டப் பசளைக்கு இப்படியெல்லாம் தேடினார்கள். வன்னியில் வீணாகும் பசளைக்கு அதுதான் இயற்கைப் பசளைக்கு கணக்கு வழக்கு இருக்கிறதா? அன்றாடம் வன்னித் தெருக்களின் புழுதியோடு கலக்கும் மாட்டெரு கொஞ்சமா நஞ்சமா? இதைவிடுங்கள் உமிச்சாம்பல் உவரை மாற்றவல்லது.

வன்னியில் அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் தம்மிடம் குவியும் உமியைக் காடுகள் தேடிக் கொட்டுகிறார்கள். இவற்றை விவசாய நிலங்களில் போட்டால் என்ன? போடுவதில்லை. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா நகரில் ஏராளமான மரக்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. அங்குள்ள அரிசி ஆலைகளின் உமியை காடுகளுக்கு ஏற்றிக்கொண்டு போய் கொட்டுவதற்கு ஆலைக்காரர்கள் பாரஊர்திகளைப் பயன்படுத்துவர். அவ்வேளை விவசாயிகள் அந்த உமியைத் தங்கள் நிலத்தில் கொட்டும்படி கேட்டுப் பெறுவர். நல்ல விளைச்சலையும் பெறுவர்.

வன்னியின் படலை திறந்தபிறகு மறுபடியும் எரு ஏற்றும் பாரஊர்திகள் நிறையவே வந்து போகின்றன. அதேசமயம் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டங்களும் படித்த மகளிர் குடியேற்றத் திட்டங்களும் தரிசாக மாறியுள்ளன. காரணம் இதே நிலத்தில் பொன்னை அறுவடை செய்தவர்கள் மண்ணை நஞ்சூட்டிக் கொன்றுவிட்டனர்.

என்னதான் முயன்றாலும் இருக்கும் முதியோரால் இனியொரு பயிர்ச்செய்கை நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. "மகள் லண்டனில முடிச்சவள் சுகமில்லாம (கர்ப்பம்) இருக்கிறாள். அதுதான் எப்பன் பலகாரஞ் செய்து எடுத்துக்கொண்டு போறன்" என்று ஏதோ பக்கத்து ஊரில் பெண்கொடுத்தவர்கள் போலப் பறந்து திரிகிறார்கள். பெருமளவு கால்நடைகள் எதுவித பயன்பாடு மற்று எங்களிட்டையும் நூறு மாட்டுக்குக்கிட்ட நிக்குது. அதுவும் சரியான கணக்குத் தெரியாது என்று சொல்லுமளவுக்குத்தான் கால்நடைப் பெறுமானம் உள்ளது. கிளிநொச்சி நகரத் தெருக்களில் ஆடுகளே கட்டாக் காலிகளாகத் திரிகின்றன.

இந்த நிலையில் வன்னியில் விற்பனையாகும் இரசாயனப் பசளைகளினால் வெளியே போகும் பணத்தின் தொகையும், பூச்சிக் கொல்லிகளின் தொகையும், கணக்கிட்டுப் பார்த்தால் நெஞ்சு விறைக்கும். பேச்சுக்குச் சொல்லவில்லை! வீட்டுக்கு வழியில்லாட்டியும் தீட்டிப்போட்டாக்குவதில் நாங்கள் கெட்டிக்காரர் என்பதோடு. கையிலிருக்கும் வெண்ணெயை விற்றுவிட்டு நெய்க்கலையும் புத்திசாலிகள்.

இப்படியே புதுப் புது கிருமி நாசினிப் பாவனைகளாலும் இராசாயனப் பசளைப் பாவனையாலும் சுவையற்ற உணவு உற்பத்தியைச் செய்வதுடன் புதுப் புது நோய்களையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். இவை தவிர இயற்கையாகவே எமது மண்ணில் பயிரிடப்பட்டு வந்த தானியங்கள் கைவிடப்பட்டு, நவீனரகக் காய்கறிகள், தானியங்கள், பயிரிடப்படுகின்றன. இவை இலாப நோக்கோடு செய்யப்படுபவை. ஆனால் எம்மண்ணுக்கு ஒட்டாத வகைகள் இவை. இவற்றை இவற்றின் சூழலை எதிர்த்தே இங்கு பயிரிடுகின்றோம். ஆகவே அந்தளவுக்கு கிருமி நாசினி பயன்படுத்த வேண்டும். ஒரு கிருமிநாசினிப் போத்தலில் சாதாரணமாகத் தெரிவிக்கப் படும் அறிவுறுத்த்லாவது அறுவடைக்கு பதினான்கு நாட்களுக்கு முன் தெளிக்கவும். அல்லது எட்டு நாட்களுக்குள் அறுவடை செய்தலாகாது. எப்படிப்போகிறது கதை. மூன்று நாட்களுக்கொருதடவை பயிற்றங்காய் ஐந்து நாட்களுக்கொருமுறை கத்தரிக்காய், ஒன்று விட்டொருநாள் தக்காளி, வெண்டி, கோவா, பீற்றூட், கரட் என்பவற்றுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறை கிருமிநாசினி வேண்டும். அதிலும் கோவாவில் மருந்து மணம் நீங்காமலிருக்கவேண்டும்.

இவற்றில் எந்தவொன்றையும் குறித்த நாட்களுள் அறுவடை செய்யத் தவறினால் தோட்டமே பழுதடையும், விவசாயி என்ன செய்வான். தொடர்ந்து மருந்தடிக்காவிட்டால் காய்கறிகளில் பூச்சித்தாக்கம் இருக்கவே செய்யும்.

சந்தையில் மரக்கறி வாங்கும் போது பூச்சியரிக்காத மரக்கறியைத் தேடுகிறோம். ஒரு பூச்சிகூட உயிர் வாழமுடியாத மரக்கறியில் எவ்வளவு நஞ்சூட்டப் பட்டிருக்கும் என்பதெல்லாம் எமக்குறைப்பதில்லை. ஆக, நாம் கவர்ச்சியான பொருட்களுக்குள் சிலந்தி வலையில் பூச்சிகள் சிக்குவது போலச் சிக்கியிருக்கிறோம். எமது பணத்தைக்கொடுத்து நோய் வாங்கி எமது பணத்தைக்கொடுத்து சிகிச்சை பெறும்போதும் எம்மிடம் ஒரு வரட்டுக் கௌரவம் மிஞ்சியுள் ளது மட்டும் திருப்தி. நாடும் நாட்டு வளர்ச்சியும் உண்மையாக முன்னேறித்தான் வருகிறதா?

மாயா



## சங்கதி தெரியுமோ..?

**விசாலாட்சி:-** என்னடா சிவராத்திரிக்கு கீரிமலைக்குப் போன நியோ.

**பேரன்:-** ச்சா நான் பொடியளோட சேந்தாப் போல திருக்கேஸ்வரம் போனனான்.

**விசாலாட்சி:-** எட எப்பிடி ஏதும் நல்ல விசயம்.

**பேரன்:-** என்னத்த ஏதோ இந்த முறை மோட்டச்சயிக்கிலுகள்ள போகலாம் எண்டு சொல்லிப்போட்டாங்கள்.

**விசாலாட்சி:-** அப்பிடியே

**பேரன்:-** அவங்கள் என்ன செய்யிற மேலிடத்து உத்தரவுக்கு வேலை செய்யிறாங்கள்.

**விசாலாட்சி:-** ம்...ம்... நாங்கள் மேலிடத்து உத்தரவுக்குத்தான் பாத்துக்கொண்டிருக்கிறம். வரட்டன் நாங்கள் லொறியோட உள்ளுக்க போவம்.

**பேரன்:-** சும்மா.... உனக்கொரு வீம்புக் குணமெணை.

**விசாலாட்சி:-** இருக்குந்தானேடா என்ர பூட்டியாச்சி கீரிமலையில கச்சான் வித்துச் சேத்த காசிலதான் இந்த அட்டியல் செய்தது. இப்ப கீரிமலைக்குப் போக அவை சொல்ல வேணும்.

**பேரன்:-** எணை அவங்கட கட்டுப்பாட்டுக்கயெல்லே கீரிமலை கிடக்கு.

**விசாலாட்சி:-** பொதுச் சொத்துக்கு எண்டைக்கடா கட்டுப்பாடு. முன்ன பழங்காலத்தில இந்தியாவாலயே வந்து இஞ்ச முழுகிக் குளிச்சு போனவையடா அதாலதான் இதுக்கு உந்தப் பேரே வந்தது.

**பேரன்:-** இருக்கலாம் இப்ப ஆராய்ச்சியெல்லாம் ஆர் கேட்டது. அவங்கள் அவங்கட பாதுகாப்புக்கும் இதுகள அழிஞ்சு போகாம காக்கவும் அதுக்குள்ள இருக்கிறாங்கள்.

**விசாலாட்சி:-** இருக்கலாம் இருக்கலாம் எருது ஏழையாயிருந்தா பசு பத்தினித்தனங் கொண்டாடுமாம்.

**பேரன்:-** என்னணை.

**விசாலாட்சி:-** பின்ன என்னடா என்ர சொத்தை என்னால பாக்கேலாது எங்கயோ கிடந்த சிங்களவன் வந்து பாக்கிறண்டு சொல்லுறாய். உதுபோல கோணேஸ்வரம், கேதீஸ்வரம் எல்லாத்தையுந்தான் மடக்கிப் போட்டிருக்கிறாங்கள். என்ன இடமில்லாம உதுகளுக்க நிக்கிறாங்களே. ந.... விசரா. அவங்கள் எங்கட கலாச்சாரத்தை அழிச்சுப்போடவெல்லோ துடிக்கிறாங்கள்.

**பேரன்:-** ஒண்டிலயும் நல்லதப் பாராய் கெட்டதுதான் உன்ர கண்ணுக்க பட்டெண்டு தெரியுறது.

**விசாலாட்சி:-** ஓமடா ஓ... நல்லது கெட்டது பாராம விட்டுத்தானடா இண்டைக்கு எங்கட நிலத்துக்கு என்ன நடவடிக்கையெண்டு ஜெனீவாவில் போய்த் தேடுறம். அடிச்சதோட துலைச்சிருக்கோணும்.

**பேரன்:-** சும்மா சண்ட சண்டையெண்டு நில்லாதையணை- எவ்வளவு காலத்துக்கு ஓடித்திரியிறது.

**விசாலாட்சி:-** ஓடித்திரியிறது பிரச்சினையெண்டாப் பிரச்சினைதானடா- "ஓடுறவனக் கண்டாத் துரத்துறவனுக்கு லேசு" எங்கதிரும்பி ஓடவைக்கிறதெண்டு முடிவெடுத்துப்பார். எப்பிடியிருக்குமெண்டு.

**பேரன்:-** கொஞ்சம் பொறணை, கொழும்புக் காறரும் உந்த முடிவுக்குத்தான் வருவினம். கிட்டடியில முட்டுப்படும்.




# இறக்காத காலங்கள்

ஆனை... யு
எழுச்சிக்கோலமாய் காட்சியளித்தது. வீதியின் இருமருங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. இடையிடையே எழுச்சிப்பதாதைகளும் தொங்கின. அவன் உந்துருளியில் போய்க் கொண்டிருந்தான். ஊர்திகள் தொடராக ஆனையிறவு நோக்கி பயணித்துக்கொண்டிருந்தன. உப்பு வெளி அவனது உள்ளத்தில் இனம்புரியாத உணர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

மாவீரர் நினைவாலயம் அமைந்திருந்த இடத்திற்கு முன்னால் வீதிக்கு மேலாக அலங்காரவளைவுகள் கட்டப்பட்டு பந்தல் வடிவில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தமிழீழக் காவல்துறையினர் வீதிப் போக்குவரவை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். அவன் உந்துருளியை தரிப்பிடத்தில் நிறுத்தினான். அப்போதுதான் ஊர்தியொன்று வந்து நின்றது. அதிலிருந்து ஒரு குடும்பம் இறங்கியது.

ஊர்தியில் வந்தவர் அவனை உற்றுப்பார்த்தார். அவனும் அவரை வடிவாகப் பார்த்தான். இருவரும் ஏதோ உணர்ந்தவர்களாய் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டார்கள். பத்தாண்டுகளின் பின்னர் பழைய நண்பர்கள் சந்தித்திருந்தார்கள்.

அவன் நண்பனோடு வந்தவர்களை அவதானித்தான். நண்பனது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வந்திருந்தார்கள். மூத்தவனுக்கு ஆறுவயதிருக்கும், இளையவளுக்கு மூன்று வயதிருக்கும். இருவரும் அவனுடைய வரிச்சீருடையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். நண்பன் மனைவிக்கு அவனை அறிமுகப்படுத்தி வைத்தான். சின்னவயதிலிருந்து உயர்தரம் வரை இருவரும் ஒன்றாகப் படித்திருந்தார்கள். மழை நாட்களில் பள்ளிக்கூடம் விட்டு ஆமணக்கஞ் செடிகளுக்கூடாக ஓடுவார்கள். இடையில் பள்ளங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தில் குளித்துவிட்டு வீட்டுக்குப் போவார்கள். அவனுக்கு வீட்டில் அடிவிழும். நண்பனது அழுகுரலும் பக்கத்து வீட்டில் கேட்கும். அவனுக்கு முதலில் அந்தச்சம்பவமே நினைவில் வந்தது.

சில நாட்களில் ஊரடங்குச்சட்டத்தால் பள்ளிக்கூடங்கள் நடைபெறாது நண்பன் வேலிப் பொட்டுக்கால் அவனதுவீட்டுக்கு வந்துவிடுவான். இருவரும் வீட்டு முற்றத்தில் போளை அடித்து விளையாடுவார்கள். நாய்கள் குரைக்கத்தொடங்கும். இராணுவத் தொப்பிகள் வேலிக்கு மேலால் தெரியும். போளைகளையும் விட்டு விட்டு ஓடிவந்து வீட்டு மூலைக்குள் இருப்பார்கள்.

"என்னமாரி மச்சான் அப்ப நீ யூனிவசிற்றிக்கு போகாமலே வந்திட்டாய் போலகிடக்கு"

நண்பன் அவனிடம் கேட்டான். அவன் யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைகள் நெறிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தான். அந்தக்காலப்பகுதியில் தான் நண்பன் வெளிநாடு சென்றிருந்தான்.

"ஓம் மச்சான் நான் யூனிவசிற்றிக்கு போகேல்லை. நாங்கள் படிக்காட்டியும் பறவாயில்லை. எதிர்காலச் சந்ததியெண்டாலும் சுதந்திரமாய் படிக்கவேணும் வாழவேணும்."

"நான் மச்சான் என்னாலை முடிஞ்சளவு எங்கட விடுதலைப் போராட்டத்துக்கு அங்க உழைச்சுக் குடுக்கிறன். ஆனா நானும் இந்த விடுதலைப் போராட்டத்திலை நேரடியாப் பங்கெடுக்கேல்ல என்ற கவலை இருந்துகொண்டுதான் இருக்கு."

நண்பனின் ஆதங்கம் உணர்வுபூர்வமாக அவனின் முகத்தில் பிரதிபலிப்பதை அவன் அவதானித்தான்.

"இண்டைக்கு விடுதலைப் போராட்டம் எவ்வளவோ வளர்ந்திட்டுது. அதுக்கு பல்வேறுபட்ட தேவையள் இருக்கு. அதிலை நீயும் பங்கெடுக்கிறாய். அதுவே பெரிய விசயம். விடுதலைப் போராட்டம் வெற்றியடையுமட்டும் அதை நீ செய்தாலே திருப்தியான விசயம்."

அவன் புன்னகைத்தபடி சொன்னான். நண்பனின் முகத்தில் திருப்தியின் கோடுகள் சற்று வெளிப்பட்டு மறைந்தன.

அவர்கள் அனைவரும் மாவீரர் நினைவாலயத்தை நோக்கி நடந்தார்கள். நண்பனின் பிள்ளைகள் இருவரும் வாசற்கோபுரத்தை வடிவாய் பார்த்தார்கள்.

"அங்கையப்பா மேலை அண்ணாவும் அக்காவும் புலிக்கொடி பிடிச்சிருக்கினம். இளையவள் ஆர்வமாய் நண்பனிடம் சென்னாள்."

"ஓம் நிலா அது நல்ல வடிவாயிருக்கென்ன?"

"ஓம்...ஓ நல்ல வடிவு"

"எவ்வளவு படம் அம்மா வைச்சிருக்கு. எல்லாரும் இந்த இடத்திலையே ஆமியோடை சண்டைபிடிச்சு வீரச்சாவடைஞ்சவை."

மூத்தவன் கேட்டு விட்டு தாயை பார்த்தான்.

அப்படித்தான் இருக்கோணும் நிலவன் நீங்கள் இந்த மாமாட்டை எல்லாத்தையும் கேளுங்கோ அவர் உங்களுக்கு வடிவா எல்லாத்தையும் சொல்லித்தருவார்.

நண்பனின் மனைவி அவனைக் காட்டி அவர்களுக்கு சொன்னாள். அவர்கள் அவனைப் பார்த்து புன்னகைத்தார்கள்.


"எங்கடை தேசிய விலங்கு சிறுத்தை, தேசிய மரம் வாகை, தேசியப்பூ கார்த்திகைப்பூ அப்ப எங்கட தேசியப்பறவை என்ன மாமா"

நிலவன் அவனிடம் கேட்டான்.

"எங்கடை தேசியப்பறவை செம்பகம். நீங்கள் செம்பகத்தை பார்த்திருக்கிறீங்களா?"

"இல்லை... நான் பார்க்கேல்லை"

வாசலிலிருந்து நீள்வளைவாக இருபக்கமும்



பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. வாசலுக்கு எதிரே நீள்வளைவு முடிவில் முதன்மைப் பந்தல் அமைக்கப் பட்டு நிகழ்வுக்கான அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது. நீள் வட்ட வெண்மணற் பரப்பின் நடுவில் கம்பத்தில் தேசியக் கொடி பறந்துகொண்டிருந்தது.

**வைகை**

மாவீரர் நினைவுப்பந்தலுக்கு மேலே போர்க்கள காட்சிகள் பதாதைகளாகக் கட்டப்பட்டிருந்தன. நண்பனின் பிள்ளைகள் அவற்றை ஆழமாய் பார்த்து அவனிடம் வினாக்களைத் தொடுத்தார்கள். அவன் தெளிவாகப் பதிலளித்தான்.

மாவீரர் நினைவாலயத்தை பார்த்து முடித்தபோது பத்து மணியாகியிருந்தது. அவனோடு கூடவே பயிற்சியெடுத்தவர்களும் சமர்களில் பங்குபற்றியவர்களும் நினைவாலயத்தில் திருவுருவப் படங்களாகக் காட்சியளித்தனர்.

"மாமா எனக்கு அந்தப் படம் வேண்டித்தருவீங்களா"

நிலவன் காட்டியதை அவன் பார்த்தான். நினைவாலய அழைப்பிதழில் அடிக்கப்பட்டிருந்தது வெற்றிக் கொடியேற்றும் காட்சிப்படம்.

"எனக்கும் வேணும் மாமா"

நிலா தனது குறுகுறுத்த விழிகளுடன் அவனிடம் கேட்டாள்.

அவன் இரண்டு அழைப்பிதழ்களை அங்கு நின்ற போராளிகளிடம் வாங்கி அவர்களிடம் கொடுத்தான்.

"நன்றி மாமா"

இருவரின் குரலும் ஒலித்தது.

மாவீரரின் நினைவாலயத்தை விட்டு வெளியே வந்தார்கள் "ஆமட்காரோடை நிண்டு படமெடுக்கலாமே மாமா?"

நிலா வரலாற்று நினைவுச்சின்னமான கவசஊர்தியைக் காட்டி அவனிடம் கேட்டாள். அவன் இருவரையும் கவச ஊர்தியில் ஏற்றிவிட்டு படமெடுத்தான். இருவருக்கும் அளவுகடந்த மகிழ்ச்சி. அவனுக்கும் அவர்களை நினைக்க அளவு கடந்த மகிழ்ச்சியாக இருந்தது.

இங்கிருந்து வெளிநாடு சென்ற பலர் தமிழை மறந்து அந்த நாட்டு மொழியோடு ஒன்றிப் போன போதும் அங்கு பிறந்த இவர்கள் அழகாய் தமிழ் கதைத்தார்கள்.

"மச்சான் உன்ரை பிள்ளையள் தமிழீழத்திலை இருக்கிற பிள்ளையள் மாதிரியே வடிவா தமிழ் கதைக்குதுகள்"

"இதிலை என்ரை முயற்சி குறைவு மச்சான். அவதான் அவையின்ரை வழிகாட்டி என சொல்லிவிட்டு மனைவியைப் பார்த்தான் நண்பன்."

"நாங்கள் வெளிநாட்டிலை இருந்தாலும் எங்கடை மண்ணை மொழியை மறக்கேலாது. எங்கடை பிள்ளையள் இஞ்சை பிறக்காட்டியும் அவையின்ரை பூர்வீகம் தமிழீழம் தான். அதிலை நாங்கள் கவனமா இருக்கிறம். இவர்தான் பிள்ளையளுக்கு பெயர் வைச்சவர். தமிழ்ப் பெயரா இருக்கோணுமெண்டு விரும்பினவர்."

அவர்களின் ஆடைகள் அந்த நாட்டு கலாச்சாரத்துக்கு ஏற்றபடி இருந்தாலும் அவர்களின் மனமும் நடத்தையும் அசைக்க முடியாத தமிழர்களாக இருந்ததை அவன் புரிந்துகொண்டான்.

"அதெல்லாம் சரிமச்சான் எங்களோட படிச்ச முகிலன் சிறையிலையெல்லே இருந்தவன். விட்டிட்டாங்களே."

நண்பன் அவனிடம் கேட்டான்.

"இல்லை விடேல்லை களுத்துறைச் சிறைச்சாலையிலைதான் இருக்கிறான்."

"பத்து வருசமா சிறைவாழ்க்கையெண்டதை நினைக்க என்னவோ செய்யுது மச்சான். அவனொரு அப்பாவி. அவனுக்கே இந்த நிலையெண்டால்..."

நண்பன் கவலையாக வார்த்தைகளை வெளிப்படுத்தினான்.

"அப்ப எப்ப உங்களுக்கு பிளைற்" "நாளையிண்டைக்கு இரவு. இண்டைக்கு இப்பிடியே கொழும்புக்கு போடுவம். நாளைக்கு ஓய்வெடுத்து விட்டு நாளையிண்டைக்கு வெளிக்கிட வேண்டியது தான்"

"இஞ்சாலை வந்து கனநாளே"

"ஓம் மச்சான் ரெண்டு கிழமை வந்து. ரெண்டு நாள் கொழும்பிலை மாமா வீட்டை நிண்டிட்டு யாழ்ப்பாணம் வெளிக்கிட்டனாங்கள். சுனாமி அழிவுகளைப் பாத்தா தலையைச்சுத்துது. ஏதோ என்னாலை முடிஞ்ச உதவியை பாதிக்கப்பட்டாக்களுக்கு செய்திட்டுப் போறன். எங்கடை குடும்பத்துக்கு மட்டுமில்லை எங்கடை நாட்டுக்காகவும் வெளிநாட்டிலை இருக்கிற ஒவ்வொருவரும் உழைக்கோணும் மச்சான்."

நண்பனின் வார்த்தைகளில் அசைக்க முடியாத உறுதி இருந்ததை அவன் அவதானித்தான். நண்பனின் கரங்களைப் பற்றிக் குலுக்கினான்.

"அப்ப உனக்கு எப்ப திருமணம்?"

நண்பன் திடீரென கேட்டான். அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமலிருந்தது.

"செய்வம் மச்சான்"

ஒற்றை வார்த்தையில் பதிலளித்தான். அதற்கு மேல் நண்பன் அதைப்பற்றி அவனிடம் கேட்கவில்லை. அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"அப்பா நாங்கள் எப்ப இஞ்சை திரும்பி வாறது."

நிலவன் கேட்டான். நண்பனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவனை திரும்பிப்பார்த்தான்.

"பிள்ளையளுக்கு இஞ்சையிருந்து போறது விருப்பமில்லை." அவனைப்பார்த்துக் கூறிவிட்டு மகனின் பக்கம் திரும்பினான்.

"பிள்ளையளை அப்பா கெதியிலை இஞ்சை கூட்டிக்கொண்டருவன்"

"மாமா நாங்கள் போட்டுவாறம்."

கூறிவிட்டு இருவரும் ஊர்தியில் ஏறி அமர்ந்தார்கள். ஊர்தி புறப்படத் தயாரானது. நண்பனும் மனைவியும் அவனிடம் விடைபெற்றார்கள், ஊர்தி தரிப்பிடத்திலிருந்து நகர்ந்து முதன்மைச்சாலையில் ஏறி விரைந்தது. அவன் ஊர்தியையே பார்த்துக்கொண்டிருந்தான். ஊர்தி வளைவில் மறைந்துபோனது. உளம் நிறைந்த அவர்களின் நினைவோடு உந்துருளியை உயிர்ப்பித்தான்.

# கவிஞர்களின் விமர்சனம்


எப்போதெல்லாம் கலை தன் செயல்பாட்டு முறைகளை மாற்றிக்கொள்கிறதோ, எப்போதெல்லாம் வாழும் கலையின் நோக்கங்கள் வாதுக்கழைக்கப்படுகின்றனவோ அப்போதெல்லாம் கலை குறித்துப் பேசும் விமர்சன மொழி புதிய சவால்களைச் சந்தித்து வந்துள்ளது. தமிழின்

## கவிஞர்களின் விமர்சனச் செயல்பாடு

கவிதையியலை கலை வரலாற்று ரீதியாகப் பகுத்து,காலகட்டங்களின் சட்டகத்தினுள் வைத்துப் பார்த்தோமெனில் இந்த உண்மை மிகத் தெளிவாகப் புலப்படும்.

கவிதை விமர்சனத்தின் சக்கரம் தங்குதடையின்றி முன்நகர வேண்டுமானால் கவிதை குறித்த அரிச்சுவடிக் கேள்விகளையும் அவற்றிற்கு இதுவரை கொடுக் கப்பட்ட பதில் களையும் கேள்விக்கு உள்ளாக்கவேண்டும்.

இந்தக்கேள்விகளுக்கு கவிஞர்களும்,



விமர்சகர்களும் பல்வேறு தளத்திலான விடைகளை அல்லது மௌனங்களை அவர்களின் காலம், இடம்,'பொருள்' ஆகியவற்றிக்கு ஏற்றவாறு கொடுத்து வந்திருக்கிறார்கள். இவற்றைத் தொகுத்து வைத்துப் பார்க்கிறபோதுதான் தமிழில் புதுக்கவிதையின் தோற்றத்திற்குப் பிறகான விமர்சனச்செயல்பாட்டில், கவிதை குறித்து நுண்மையாகவும், பருண்மையாகவும் பேசத்தக்க ஒரு விமர்சன மொழியையோ, விமர்சனத்தளத்தையோ உருவாக்குவதில் நாம் எந்த அளவுக்கு அக்கறை அற்று இருந்திருக்கிறோம் என்பது தெரியவரும். இதுவரை நடந்து வந்த குழாயடிச் சண்டைகளை விமர்சனம் என்று நினைத்து நெஞ்சு நிமிர்த்திக்கொள்ளக்

## விமர்சன மொழியை உருவாக்குதல்

புதுக்கவிதை என்பதுதோன்றி ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது என்பதைப்போலவே,அதன் உடன் நிகழ்வாகத் தோன்றிய புதுக்கவிதை விமர்சனமும் தோன்றி நூறு ஆண்டுகள் ஆகிவிட்டதாகச் சொல்லலாம். ஆனால் இன்றைய காலகட்டத்து விமர்சனம் எதிர்நோக்குவது நான்கு முக்கிய செயல்பாடுகளைத் தான்.

1.தற்போதைய விர்சன மரபை மாற்றியமைப்பது,

2. வித்தியாசப்படுத்துவது,

3.முற்றாக மறுப்பது,

4.பழைய விமர்சனத்தைக் கடந்துசெல்வது. ஆகிய நான்கு செயல்பாடுகளும் இன்றைக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன.

படைப்பாளி, வாசகன், மற்றும் இவர்களிருவரையும் கவனித்துக்கொண்டிருக்கும் விமர்சகன் ஆகியவர்களுக்குள் ஏற்படும் உறவுமுறைகளைச் செழிப்பாக்கக் கூடிய சொல்லாடல்களை உற்பத்தி செய்வது இன்றியமை யாததாகிறது. இத்தகைய ஒரு பயிற்சியை மேற்கொள்கிற விமர்சனம் என்பது பல்வேறு அர்த்தங்களைத் தேடிச்செல்வதற்கான ஒரு நுழைவாயில் என்கிற திறந்த நிலையை அடைகிறது.

இப்போது எழுதுதல்,வாசித்தல் என்கிற இரண்டு செயல்பாடுகளின் இடையேயுள்ள தூரம்

**படைப்பாளி, வாசகன், மற்றும் இவர்களிருவரையும் கவனித்துக்கொண்டிருக்கும் விமர்சகன் ஆகியவர்களுக்குள் ஏற்படும் உறவுமுறைகளைச் செழிப்பாக்கக் கூடிய சொல்லாடல்களை உற்பத்திசெய்வது இன்றியமையாததாகிறது. இத்தகைய ஒரு பயிற்சியை மேற்கொள்கிற விமர்சனம் என்பது பல்வேறு அர்த்தங்களைத் தேடிச்செல்வதற்கான ஒரு நுழைவாயில் என்கிற திறந்த நிலையை அடைகிறது.**

குறைக்கப்பட்டு விடுகிறது. இது எந்த அளவுக்குக் குறைக்கப்படுகிறதோ அந்த அளவுக்குக் கவிதை மாயத்தன்மைகளைக் கட்டி எழுப்புவதிலிருந்து விலகி நிற்கிறது.


பிரெஞ்சுக் கவிஞர் மல்லார்மே(mallarme) "படைப்பை உருவாக்குவது யார்?" என்கிற கேள்வியை முன் வைக்கிறார். இவர் ஒரு புத்தகத்தை அதன் வாசகர்களே உருவாக்கவேண்டும் என்று எதிர்பார்த்தவர். இத்தகைய எதிர்பார்ப்புகள் கவிதையை அதன் வாசகனிடமிருந்து அவனுக்கு எட்டாத தூரங்களுக்கு நகர்த்திச் செல்வதிலிருந்து காப்பாற்றுகிறது. கவிதை குறித்த மாயைகள் கட்டி எழுப்பப்படுவதற்கு தடையாகச் செயல்படுகின்றன.

தமிழ்க்கவிதைக்கு உகந்த விமர்சன மொழி ஒன்றை உருவாக்க வேண்டுமென்றால் அதற்கென பலதரப்பட்ட மொழியையும் கவனத்தில் எடுத்து பரிசோதிக்க வேண்டும். சாதாரண பேச்சு வழக்கில் உள்ள மொழியைக் கூட கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 'தலித் பண்பாடு' எனும் விமர்சன நூலைஎழுதுவதற்கு, கீழ்த்தரமானது என்று பொதுவாகக் கருதப்படுகிற ஒரு பேச்சுவழக்கைக் கூட விமர்சன மொழியாக இடை இடையே ராஜ்கௌதமன் பயன்படுத்துகிறார்.

பேச்சுமொழி, பழங்காலத் தமிழ்,கண்டுபிடிக்கப்படும் புதிய மொழி வழக்குகள், நம்மைப் பெரிதும் ஆட்டிப்படைத்து வரும் ஆங்கில மொழிக்கும், தமிழ் மொழிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்று பல்வேறு விதமான மொழிச் சாத்தியப் பாடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வதற்கு குறிப்பிட்ட காரணங்கள் உண்டு.

குறிப்பாகக் கவிதை குறித்த நமது பல்வேறு குழப்பங்கள், அர்த்தங்கள், நம்பிக்கைகள், கவனிப்புக்கள் என்று எல்லாம் மொழியிலிருந்தே தோன்றுகின்றன. இங்கு மொழியைப் புரிந்துகொள்வது என்பது உலகைப் புரிந்துகொள்ளுதல் என்பதும், அதன் மூலம் கவிதையை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளுதல் என்பதும் நிகழ்கிறது என்பதனாலேதான். மொழி என்பது என்ன? கவிதை விமர்சனத்தில் அதன் பயன்பாடு எது? என்பது குறித்த சிந்தனைகள் ஒரு விமர்சகனுக்குத் தேவை. அப்போதுதான் வெறும் வாய்ச்சவடால்களையே விமர்சனம் என்ற பெயரில் முன்வைப்பது தவிர்க்கப்படும்.



## சிறைக்கம்பி தாவி சிறகடித்துவருவாய்

சிறைக் கம்பி தாவீ
சிறகடித்து வருவாய்

கைதானதற்கும்
கைதியானதற்கும்
காரணம் கடவுளுக்கும் தெரியாது.

ஒளிக்கதிர்கள் படாத
நாற்சுவர்களுக்குள்
உண்மை விளக்குகள்
உறங்கிக் கிடக்கின்றன.

களுத்துறையின்
கம்பிக் கூடுகளுக்கும்
எதுவும் விளங்கப் போவதில்லை.

நீதிக் கட்டடங்கள்
கூனிக் குறுகி விட்டன.
நிதிக் கட்டடங்கள்
நிமிர்ந்து விண்முட்டுவதால்
சட்டம் இருட்டறையில்
செல்லரித்துக் கிடக்கிறது.

ஏதுமறியாப் பிராணிகளாய்
எலும்புக்குள் நடுங்கும் படி
நீதி வேண்டி
நெடுந்தவம் இயற்றுகின்ற
தர்ம தேவதைகளுக்கு
வரம் கிட்டும் நாள் வருமா?
கை விலங்குடன்
உண்பதற்கும் கிடப்பதற்கும்
காட்டு விலங்குகளாய் இவர்களை
பிரமன் படைத்தானா?

ஒன்றுமறியாப் பாவிகள்
சிறைகளில் வாட
ஒன்றுக்கு நூறு கொலை
களவுச் சூத்திரதாரிகள்
தெருக்களிற் திரிய
நீதியைத் திருடியவன்
நீதிமன்றக் காவலாளி
விளக்க மறியலில்
விசாரணையுமின்றி
விடுதலையுமின்றி
வாடும் கைதிகள் நிலை
உலக மனச்சாட்சிகளின்
இதயங்களை உறுத்தவில்லையா?
சிறைக்கம்பி தாவி சிறகடித்து வரும்
உறவுக் குரல்களைக் கேட்க
உறைந்து போகின்றதே
என் பேனா.

இருட்சிறைகளுக்குள்ளும்
உணர்வுப் பூக்கள்
பூக்காமலில்லை.
உண்மை மனிதர்களின்
ஆத்ம வேர்களை
இடுங்கி எறியும் பலம்
எவருக்கெடா உண்டு?
மனச்சிறை தகர்த்தெழுந்த
மா புனிதர்களே
வெறும் கம்பிச் சிறைக்குள்
காத்திருக்கிறார்கள் விடுதலைக்காய்!

சிறைக்குள் இருப்பதால் மட்டும்
இவர்கள்
விடுதலையை வேண்டவில்லை.
சிறைப்பட முன்னருமே
இவர்கள் யாசித்ததும் விடுதலை தானே.


வேலணையூர் சுரேஷ்

# நீளமான நதி


உலகத்தில் மூன்று நீளமான நதிகள் இருக்கின்றன. ஆபிரிக்காவில் உள்ள நைல்நதி 6670 km நீளமுள்ளது. தெற்கு அமெரிக்காவில் அமேசன் நதி 6448 km நீளமுள்ளது. வட அமெரிக்காவில் உள்ள மிசிறி மிசுசிப்பி 5970 km நீளமுள்ளது.

அமேசன் நதி, நைல் நதியைவிடப்பெரியது. அதில் அதிக நீர் நிரம்பி இருக்கும். ஒரு வினாடிக்கு 3120 கியூபிக் மீற்றர் நீரை வெளியேற்றுகிறது. அமேசன் நதி வினாடிக்கு 18000 கியூபிக் மீற்றர் நீரை வெளியேற்றுகிறது.

கி.வினோஜினி.




நாய் எந்த நூலைப் பிடித்து இழுத்தால் ஐஸ்கிறீம் கிடைக்கும்?




# இயற்கை உழவன்



மனிதன் கலப்பையைக் கண்டுபிடித்து மண்ணைப் பதப்படுத்த ஆரம்பிக்கும் முன்னரே அந்தப் பணியைத் தொடங்கி செய்து வருவது மண் புழுவே. இயற்கை உழவனான இது உலகில் அந்தாட்டிக்கா, மடகாஸ்கர் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் காணப்படுவது. மண்ணில் வளை தோண்டுவதன் மூலம் மண்ணை இளகச் செய்கிறது. இதனால் மழை நீர் எளிதாக நிலத்தடிக்கு ஊறிச் செல்லமுடிகிறது. காய்ந்த இலைகள் மற்ற அங்ககப் பொருட்களை வளைக்குள் எடுத்துச் சென்று மண்ணிற்குச் செழுமையூட்டுகிறது.

மண் புழுவில் 2000 இற்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. 25 செ.மீ நீளத்திலிருந்து 4 மீற்றர் நீளம் வரை பல அளவுகளில் உள்ளன. பொதுவாக இவை 20 செ.மீ நீளம் வரை இருக்கும். இதன் உடல் நீண்டு உருளை வடிவில் இருக்கும். உடலின் முன் பக்கம் வாயும் ஆசனத் துவாரம் பின் நுனியிலும் உள்ளது. உணவுக் குழல் இந்த இரண்டையும் இணைக்கிறது. உடல் பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கண்டத்தின் பக்கவாட்டிலும் அடிப்புறத்திலும் 4 சோடி ரோமக் கால்கள் உள்ளன.

இதன் உடலிலுள்ள வளையத்தசைகளும் நீளத் தசை நார்களும் இதன் இயக்கத்திற்குத் துணை புரிகின்றன. வளையத் தசைகள் சுருங்கும்போது உடலின் பின் பகுதியை ரோமக் கால்கள் தரையில் ஊன்றி அசையாமல் பார்த்துக் கொள்ளுகிறது. அப்போது உடலின் முன் பகுதி முன்பக்கம் நீள்கிறது. அப்பகுதியில் உள்ள ரோமக் கால்கள் தரையைப் பற்றிப் பிடித்துக்கொள்ள பின் நுனி முன் பக்கம் இழுக்கப் படுகிறது.

இதற்குக் கண்களும் காதுகளும் கிடையாது. எனினும் இருளில் பொருட்களைத் தெரிந்துகொள்ளும் திறனும் நுகருணர்வும் உள்ளது. மிகச் சிறிய அதிர்வுகளைக் கூட உணர்ந்துகொண்டு தன் வளையில் பதுங்கிக்கொள்ளும். இதற்கு நுரையீரல்கள் கிடையாது. சருமமே சுவாச உறுப்பாகச் செயல் புரிகின்றது. நீண்ட நாள் உணவு இல்லாமல் இருக்கும் திறன் இதற்குண்டு. மிகுந்த வறட்சியான காலத்தில் மண்ணில் சிறிது ஆழமான பகுதிக்குச் சென்று கோடை காலத்தூக்கத்தில் ஆழ்ந்து விடும்.

இதன் உடலிலிருந்து இருவிதக் கோழைகள் சுரக்கின்றன. பின் பகுதியில் சுரக்கும் கோழை ஒரு வித துர்நாற்றமுடையது. இதன் தற்காப்பு சாதனம் இது. இன்னொருவிதக் கோழை பக்றீரியா போன்ற சில கிருமிகளின் தாக்குதலிலிருந்து இதைக்காக்கிறது.

இவை தங்களுக்குத் தேவையான இலைகள், விதைகள், முதலானவற்றை வளைக்குள் இழுத்துச் செல்கிறது. அங்கு இவை உண்டது போக மீதி மக்கிப்போய் மண்ணோடு மண்ணாகக்கலந்து மண்ணிற்கு செழுமையூட்டுகிறது. மண்ணை உண்டு செரிமானம் செய்யாது வெளியேற்றும் போது அப்பொருளிலுள்ள அமிலத்தன்மையும் சமநிலை ஆகிறது. ஒரு ஆண்டில் ஒரு ஏக்கரில் சுமார் 12 டன் ஊட்டச்சத்துள்ள மண்ணை இவை உருவாக்குகின்றன.

இதை இரு கூறாக வெட்டினாலும் ஒவ்வொரு பகுதியும் முழுப் புழுவாக வளரும் திறனுடையது. இது அன்னலிடே பகுப்பில் ஒலிகோ கீட்டே வகுப்பைச் சேர்ந்தது.

# யானையின் விருப்பம்




# சொற்சிலம்பு-127

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | அ | னீ | சீ | அ | ஓ | ப |
| பி | கு | லி | பா | ற் | ழி | ம் |
| ம | கை | தி | நோ | ங் | ள் | க |
| வெ | னா | ம் | லி | ளை | த் | லை |
| ல் | மா | தொ | ன் | ர் | யா | ரு |
| கோ | ர் | ய | க் | ஸ் | கி | ர |
| ஜெ | டா | ளி | ல் | வா | த் | னி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் - 125 இன் விடைகள்

01. செங்கடல்.

02. ஈரான்.

## சொற்சிலம்பம் - 125 இன் பரிசுக்குரியவர்

ம.கௌசலா, தரம்-7[A],
மன்/ வட்டக்கண்டல்,
அ.த.க. பாடசாலை,
மன்னார்.

## சொற்சிலம்பம் - 125 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.டர்சிகன், சீ.எஸ்.ஐ.முன்பள்ளி, சந்தையடி வட்டக்கச்சி.
02. கு.தவேந்தினி, கச்சாய் தெற்கு, கொடிகாமம்.
03. வி.கலையருவி, தரணிக்குளம், வவுனியா.
04. க.யோகராணி, (நாச்சிக்குடா) விசுவமடு.
05. யோ.வித்தியாழினி, தரம்-10[A], கிளி/அக்கராயன் ம.வி.
06. ம.கவிப்பிரியா, தரம்-1, 8 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

01. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்?

01) ....................................

02. அண்மையில் விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்ற இடம்?

01) ..............................

பெயர் :- ........................

முகவரி :-..........................................

..........................................................

..........................................................

சொற்சிலம்பம்-127
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

# பிறரை இகழலாமா?

எல்லா மனிதர்கள ம் பல்வேறுபட்ட திறமைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றோ சிலவோதான் வெளிப்படுகின்றன. சில ளிப்படாமலே பயனற்றும் விடுகின்றன. எந்தவொரு மனிதனிடமும் திறமைகள் ஏதுமில்லை என்று சொல முடியாது.

அப்படியிருந்தும் பிறரை குறைத்து எடைபோடுவது, தாழ்த்தி மதிப்பிடுவது, மட்டந்தட்டி பரிகசிப்பது என்பன சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு செய்வதால் மற்றவர்களுக்குத் தாம் உயர்ந்தவர்,கெட்டிக்காரர், மேதாவி என்ற தோற்றத்தை ஏற்படுத்திவிடும் என்று எண்ணுகிறார்கள் போலும். மனிதர்கள் வெறும் ஜடங்கள் அல்ல. உணர்வுகளும், உணர்ச்சிகளும் கொண்டவர்கள் என்றும் உண்மையை அந்த மேதாவிகள் சிறிதேனும் உணர்கிறார்களில்லை.

நாலுபேர் மத்தியில் ஒரு மனிதரை மட்டந்தட்டி பேசும்போது அவன் எந்தளவுக்கு கூனிக்குறுகிப்போகிறான். உணர்ச்சிக்கொந்தளிப்பால் உள்ளத்தவிப்புக்கு உள்ளாகின்றான் என்று அந்தப் "பெரிய" மனிதர்க்குத்

**மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் நல்ல மனித உறவு வளர்வது ஒருவரை ஒருவர் மதிக்கும்போதும், பரஸ்பரம் அன்பு தழுவிய அக்கறைகொள்ளும்போதும்தான்.**

தெரிவதில்லை.

மனிதரை மட்டந்தட்டுதல் பரிகாசஞ் செய்தல், கீழ்மைப்படுத்துதல் என்பன மனிதாபிமானம்அற்ற செயல்கள். இவற்றினால் எவருக்கும் நன்மையில்லை. உடல்வதையால் ஏற்பட்ட புண் விரைவில் குணமடைந்துவிடலாம். ஆனால் வதைப்பிற்குள்ளான உள்ளத்தில் ஏற்படும் புண் இலகுவில் மாறாது! அது புரையோடிய நிலையில் அதிககாலம் நிலைத்திருக்கும். அடிக்கடி உள்ளத்தை உறுத்தும்,நெருடும், நீறுபூத்த நெருப்புப் போல வெளிக்காட்டாது விட்டாலும் உள்ளே அணையாது காணப்படும்.

எந்த விதத்திலும் உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ எவரையேனும் இம்சிப்பது மனிதத்தன்மை அல்ல. இவையெல்லாம் பகிடிக்குத்தான் என்று சமாதானம் செய்யலாம். எந்தப் பகிடியும் உள வதையாக மாறாமல் இருக்கும்வரைதான் அது பகிடியும்,நகைச்சுவையும் என்பது உணர்வதற்குரிய விடயம்.



மனித உள்ளங்களைப் புண்படுத்துவதற்குப் பதிலாக உத்வேகப்படுத்துதல் வேண்டும். உத்வேகமும் உற்சாகமும் ஏற்படும்போது எத்தகைய தியாகங்களையும் செய்யமுன் வருவர். மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் நல்ல மனித உறவு வளர்வது ஒருவரை ஒருவர் மதிக்கும்போதும், பரஸ்பரம் அன்பு தழுவிய அக்கறைகொள்ளும்போதும்தான், மட்டந்தட்டி கீழ்மைப்படுத்தும்போது அல்ல என்பதனை நன்கு உணர்ந்துகொண்டு நாம் அனைவரும் வாழ்வோமானால் எம்வாழ்வில் சுபீட்சத்தையும், முன்னேற்றத்தையும் காண்பது உறுதி என்பதில் சற்றும் சந்தேகமில்லை. வாழ்வோம் பிறரை வாழவிடுவோம்....

ஆனந்தி-ஆறுமுகம்.

# தன்னம்பிக்கை வேண்டும்

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது தன்னம்பிக்கையே. ஒருவரை சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு ஆளாக்குவது அவருக்குள் இருக்கும் நம்பிக்கைதான்.

நாம் ஒரு வேலையைச் செய்யும்போது அவற்றை செய்யலாமா? இவற்றினால் நன்மை வருமா? இதனை நான் எப்படிச் செய்வது? அப்படிச் செய்தாலும் தவறுகள் வருமா? என்றெல்லாம் யோசித்து அதனை அப்படியே விட்டு விடுகிறோம். மன உறுதியோடு என்னால் சாதித்துவிட முடியும் எனநினைத்து போராடினால் அவற்றில் வெற்றிபெறலாம்.



க.நாகேந்திரன்

**வாழ்வில் முயற்சி செய்யாதவர்கள் தோல்வியையே சந்திக்கிறார்கள். முயற்சியுடன் போராடவேண்டுமானால் முதலில் நாம் எம்மை உணர்ந்துகொள்ளவேண்டும். சிலந்தியைப் போன்று ஒவ்வொருவரும் முயற்சி செய்தால் வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம்.**

வாழ்வில் முயற்சி செய்யாதவர்கள் தோல்வியையே சந்திக்கிறார்கள். முயற்சியுடன் போராட வேண்டுமானால் முதலில் நாம் எம்மை உணர்ந்துகொள்ள வேண்டும். சிலந்தியைப் போன்று ஒவ்வொருவரும் முயற்சி செய்தால் வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம்.

தன்னம்பிக்கை என்பது வேறு. எவராவது செய்யும் வேலையிலோ அவரை நாம் நம்பி நடப்பதாலோ வருவதில்லை, எம்மை நாமே நம்பி நடப்பதே தன்னம்பிக்கை ஆகும். எமக்குள் இருக்கும் சிறிய செயலில் முதல் முயற்சியுடன் வெற்றிபெற்று அதன்பின் ஏனைய ஆசைகளை நிறைவேற்றலாம்.

எனவே தன்னம்பிக்கையை வளர்த்து முயற்சியுடன் போராடினால் வாழ்க்கையில் ஒளியேற்றலாம்.

வீடு

**வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## குமரகுரு பரிசுத்திட்டத்தின் 85 தொடக்கம் 87 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

### குமரகுரு பரிசுத்திட்டம்–85

உ.உதையசங்கரி,
குருசடி றோட்,
செம்மலை,
அளம்பில்.

### குமரகுரு பரிசுத்திட்டம்–86

லீ.கலிஸ்ரா,
இடைத்தங்கல் முகாம்,
வலையன் மடம்,
முல்லைத்தீவு.

### குமரகுரு பரிசுத்திட்டம்–87

கே.துஷாந்தி,
154 ஆம் கட்டை,
செல்வபுரம்,
திருமுறிகண்டி.

பரிசுபெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

## றிச்கேக்

*தேவையான பொருட்கள்:-*

| | | | |
|---|---|---|---|
| | | சௌீஸ் | -250 கிராம் |
| பட்டர் | -500 கிராம் | சவ்சவ் | -250 கிராம் |
| சீனி | -1 கிலோ | கன்டீட்பீல் | -250 கிராம் |
| ரவை | -400 கிராம் | ஸ்ரோபரி ஜாம் | -1 போத்தல் |
| கோதுமை மா | -100 கிராம் | றோஸ் எசென்ஸ் | -1 போத்தல் |
| முட்டை | -25 | வனிலா | -1 போத்தல் |
| முந்திரிகை வற்றல் | -1 கிலோ | ஏலம்,கராம்புத்தூள் | -1 மேசைகரண்டி |
| முந்திரிகை பருப்பு | -500 கிராம் | தேன் | -1 கிளாஸ் |
| சிறிய திராட்சை (கறன்ஸ்) | -500 கிராம் | கோல்டன் சிரப் | -1 போத்தல் |
| பூசினி அல்வா | -500 கிராம் | சாதிக்காய் | -1/4 பாதி |
| இஞ்சிப் பாகு | -250 கிராம் | பேக்கிங் பவுடர் | -4 தேக்கரண்டி |
| பேரிச்சம்பழம் | -250 கிராம் | எசென்ஸ் | -1 போத்தல் |

செய்முறை:-

* முந்திரிகை வற்றல்,முந்திரிகைப் பருப்பு, சிறிய திராட்சை, பேரிச்சம்பழம் இவற்றைக்கழுவி உலர்த்திய பின் எல்லாப் பழங்களையும் ஏனையவற்றையும் சிறிய துண்டுகளாக வெட்டவும்.
* பின் வெட்டிய பழங்கள்,ஜாம்,எசென்ஸ் வகைகள்,வாசனைப் பொருட்கள், தேன், யாவற்றையும் ஒன்று சேர்த்து மூன்று நாட்கள் பாத்திரத்திலிட்டு மூடி வைக்கவும்.
* றவையை இலேசாக வறுத்து ஆறவைத்து அரைவாசி பட்டரைச் சேர்த்து ஒரு மணிநேரம் ஊறவிடவும்.
* மிகுதி பட்டர்,சீனியை நன்கு அடித்துக்கொண்டு,மஞ்சள் கருவையும் சேர்த்து அடிக்கவும்.
* முட்டை வெள்ளைக்கருவை நுரைவரக்கூடியதாக நன்கு அடிக்கவும்.
* பட்டர் சீனிக்கலவை நன்கு மென்மையானதும் பேக்கிங் பவுடர் சேர்த்து அரிக்கப்பட்ட மா, றவை இவற்றைச் சேர்த்துக்கலந்து பழக் கலவையையும் முட்டை வெண் கருவையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து நன்கு கலந்து பேக் பண்ணிக்கொள்ளவும்.







## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறீ ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும்.. குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 88**

பெயர்:.....................................................
முகவரி:....................................................
....................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்கள்

## சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்புக்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் உள்ள வேலைகள்

## சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

**மானிப்பாய்- கைதடி- வீதி (11+000-13+670) கி.மீ பகுதியைப் புனர்நிர்மாணம் செய்தல்.**

01. பொது முகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மானிப்பாய் -கைதடி வீதியின் (11+000-13+670) கி.மீ பகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கான மூடிய கேள்விகோரல்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாகப் பெற்றுக்கொள்வார்.

    கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 29.03.2006 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்.

    கேள்விப்பத்திரங்கள் மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் கிடைக்கும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

    இந்த வேலைத்திட்டத்திற்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் 06.03.2006 தொடக்கம் 27.03.2006 வரை மீள் அளிக்கமுடியாத கேள்வித்தொகையான 1,725.00(பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெறவேண்டும்.

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03. தகுதிவாய்ந்த கேள்விகோரல்களைக் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

    அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையியல் தரம் எம்-05 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

    ஆ) கேள்வி கோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விகோரல் ஆவணங்களை மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்/ வவுனியா அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06. ரூபா இருநூறாயிரம் (200,000.00) பணத்தொகைக்குரிய கேள்விப் பாதுகாப்புப் பத்திரம் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைந்திருத்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்புப் பணப்பத்திரத்தை கொண்டிராத கேள்விப்புத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. முன் கேள்வி கோரல் கூட்டம் 17.03.2006 அன்று காலை 10.00 மணிக்கு மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர அவணங்களின் இரு பிரதிகள் <u>பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி செத்சிறிபாய பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்பட வேண்டும்.</u>

09. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக பொதுமுகாமையாளர் <u>வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி செத்சிறிபாய பத்தரமுல்ல அலுவலகத்தில்</u> திறந்து பார்க்கப்படும் கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலதிக விபரங்களிற்கு தயவு செய்து மாகாணப்பணிப்பாளர்/வடக்கு/கிழக்கு(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா/ யாழ்ப்பாணம் அலுவலகங்களுடன் 024-2222826 அல்லது 024-2220679 அல்லது 021-2222517 அல்லது 021-2222968 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

R.W.R.பேமசிறி,
பொதுமுகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

மோசஸ் மரியதாசன்,
மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

(சி.14103)

# NorthEast Youth Action Organization

## (NEYAO)

## Call for Applicants for the position of Project Manager and Technical officer

NEYAO, with funding from FIFA will be constructing eight football training centres in in seven districts in the NorthEast. It is also in the process of finalizing the projects to build Youth Centres with financial contribution from save the Children in Sri Lanka, UNICEF, UNDP and other organizations. Candidates who wish to apply for the positions listed. below should be prepared to attend an interview in Kilinochchi if they are short listed Interview for the project Manager will be in English. The education and other requirements for the positions are as follows:

**project Manager**

1.A pass or better in B.Sc or BA degree in computer science, management, commerce, economics, English or geography from a recognized university. Those without a degree but have a post-secondary qualification and five or more years of work experience and are **competent in the skills listed below** will be considered for the interview.
2.Very good knowledge in English language enough to write or assist in writing project proposals, periodic progress and evaluation reports. Communicate in English with those who do not know Tamil, in person, through telephone and email.
3. Very good knowledge of Microsoft office applications including typing skills (at least 20 words per minute), use of Word, Excel and power point.
4. One or more years of fulltime work experience is preferred but not mandatory.
5. Demonstrated dedication to development work in the NorthEast is required
6.The selected candidate will assist Volunteer Consultant Dr.n. Ethirveerasingam and should be prepared to take over his responsibilities at the end of 2006.

**Technical officer**

1.A three year Diploma from a recognized Technical College. Those with a two year Certificate will be considered if they have at least five years of work experience related to their Certificate.
2. Competent in the use of CAD.
3. Ability to determine and prepare a BOQ for permanent concrete buildings.
4.Ability to use survey instruments to determine slopes and construct level fields.
5.Able to visit building sites and supervise progress of the projects and meet the building schedules.
6. Should have licence to operate a motorcycle. possession of a motor cycle is an advantage.
7. Knowledge of English good enough to communicate verbally and in writing with those who do not speak English, and write monthly progress reports.
8. Computer skills in using Word and Excel in addition to **CAD.**

**Conditions**

1.Salary for each of the positions is Rs.15,000. per month.
2.Only those who are willing to sign a binding contract for one year should apply.
3. Selected candidate should be willing to travel extensively to project sites in all Districts in the NorthEast.
4. Selected candidates should, i) live in Kilinochchi or within half an hour of traveling distance from the town centre,ii) Weekend travel and work may be required occasionally,iii) Four weeks of leave can be taken during one year but only two weeks can be continuous at the end ll months and iv) Willing to take up appointment within one week of the offer.

**Application Guideline include.**

1. Typed Application Letter, not more than two short paragraphs, in English, stating the position you are applying for and the titles of your qualifications.
2. Photocopies of the original certificates, diplomas and degree you have obtained from the GCE "A" Level onwards.
3.One page typed Bio-data,in English, listing telephone number and address where we can contact you, qualifications starting with the "A" Level, employment history, if any, and names, addresses and telephone numbers of two referees, with their permission, who are not close relatives, but one of whom should be your lecturer.

**Applications for both positions close on March 15, 2006** (சி.14045)

(03) ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி தேங்கி நின்றுவிடும் யுத்தநிறுத்தத்தை சகித்துக் கொள்வது என்பது ஒரு சர்வதேச நடைமுறையாகக் கடந்த தசாப்தம் முழுவதிலும் படிப்படியாக உருவாகி வந்திருக்கிறது. கிழக்கைரோப்பிய, ஆபிரிக்க, பலஸ்தீன, தென்கிழக்காசிய அனுபவங்களுக்கூடாக இப்படி தேங்கி நிற்கும்ஒரு யுத்தநிறுத்தத்தை ஒரு வழமையாக ஏற்றுக் கொள்ளும் ஒரு சர்வதேச யதார்த்தம் உருவாகியிருக்கிறது.

ஆனால் தேங்கிநிற்கும் அல்லது இறுகிநிற்கும் ஒரு யுத்தநிறுத்தம் எனப்படுவது நீண்ட போராட்டப் பாரம்பரியங்களையுடைய மக்கள் திரளை தவிர்கவியலாதபடி அதி தீவிரவாதிகளிடம் அல்லது யுத்தத்தை ஆதரிக்கும் சக்திகளிடம் கையளித்து விடுகிறது. பலஸ் தீனத்தில் இதுதான் நடந்திருக்கிறது. எனவே, தேங்கிநிற்கும் யுத்தநிறுத்தங்களுடன் வாழப்பழகிவிட்ட உலகம் இத்தேக்கத்தின் எதிர்மறை விளைவுகளுடனும் வாழப் பழகிக்கொள்ளுமா?

## தமிழீழ கட்டுமானப் பொறியியற் செயலகம் கட்டட நிர்மாணத்துறை தொழிலாளர்கட்கு விடுக்கும் வேண்டுகை

எமது தாயகப் பிரதேசத்தின் கட்டுமான துறையில் ஈடுபடும் சகல துறை தொழிலாளர்கள் (கொன்ரக், (மேசன்), தச்சர், வண்ணம் பூசுனர், மின்னிணைப்பாளர், மின் ஒட்டுவேலையாளர், நீர்குழாய் இணைப்பாளர் போன்றோர் யாவரையும்.

**(I) இனம் காண்பதற்காகவும்**

**(II) அவர்களின் தொழிற் திறனை விருத்தி செய்வதற்காகவும்**

**(III) தொழில் தேர்ச்சி அடிப்படையில் உரிமம் வழங்குவதற்காகவும்**

**(IV) புதிய தொழிலாளர்களை உருவாக்குவதற் காகவும் போன்ற செயற்றிட்டங்களை உள்ள டக்கி, செயலகம் ஆனது கட்டட நிர்மாண துறை தொழிலாளர்களின் நலன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.**

இதன் அடிப்படையில் எமது தாயக கட்டுமானத் துறையில் பங்குபற்றும் அனைத்து தொழிலாளர் களையும் தங்களை தொழிற்பதிவுக்கு உட்படுத்தி தேச கட்டுமானத்துறை அபிவிருத்தியில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

தமிழீழ கட்டுமான பொறியியல் செயலகத்தினர்.

**குறிப்பு:-**

**இவ் விடயம் சம்பந்தமாக மேலும் சில அறிவித்தல்கள், விபரங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.**

(சி.13997)






TVS

முந்துங்கள்... முந்துங்கள்... முந்துங்கள்...

TVS-GX,GLX,EDGE ஆகிய மூன்றுவிதமான உந்துருளிகளில் ஒன்றை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவாக ரூபா.5000.00 பெறுமதியான TITANI கைக்கடிகாரம் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை மார்ச் 31 வரை மட்டுமே!

முந்துங்கள்... இது கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**

நாயகி கட்டடம், பரந்தன், கிளிநொச்சி.

தொ.பே:021-228 5072

(சி-14066)

# ஏ9 – ஏரம்பு எங்களுக்கு இருப்பது சின்னப்பிள்ளைத்தனமா? சில்லறைத்தனமா..?




எல்லாருக்கும் வணக்கம் ! எப்பிடி இருக்கிறீங்கள் ? அங்கை ஜெனீவாவில அறம்புறமாய் பேச்சுவார்த்தையளும் நடந்திருக்கிது. அதென்ன பாருங்கோ புலியள் ஒப்பந்தத்தை 3500 தடவை மீறிட்டினம் எண்டு பெரிய அட்டவணையளெல்லாம் கொண்டுபோய் சுகாதார அமைச்சர் காட்டியிருக்கிறார் ! சும்மா கை, கால் கழுவோணும், படுக்கப் போக முன்னால பல்லு மினுக்கோணும் எண்டுமட்டுமிராமல் பேசிற விசயங்களிலயும் சுத்தத்தைக் கடைப்பிடிக்கிறவர்தான் ஒழுங்கான சுகாதார அமைச்சராய் இருக்கலாம்.

அதைவிட்டிட்டு தேசியக்கொடி ஏத்தினது, தலைவரின்ர படம் வைச்சிருந்தது, பாட்டுப்போட்டது எண்டு தொட்டதுக்கெல்லாம் குற்றம் சாட்டிறதிலயே மினைக்கெட்டு பட்டியல் போட்டதாலதான் ஒப்பந்தத்தைக் கவனிக்க இவ்வளவு நாளாய் தவறீட்டினம்.சரி! இடம்பெயர்க் கப்பட்டு சொந்த நாட்டிலயே இருப்பிடம் பறிக்கப்பட்டு வாழிற எங்கட சனங்கள் ஒவ்வொண்டும் ஆளுக்கொரு குற்றச்சாட்டு வைச்சாலே அரசாங்கத்துக்கு எதிரான கணக்கு லட்சத்தைத் தாண்டிடும். கூடவே எங்கட மக்கள் தங்கட வழமையான கடல்தொழிலைச் செய்யவிடாமல், ஒப்பந்தத்துக்கு முரணாய் மீன் பிடித்தடையை விதிச்சிருக்கிறதுக்கும் ஒவ்வொரு குடும்பமும் தலா ஒரு குற்றச்சாட்டு வைச்சால் இன்னுமொரு லட்சம் வரும்... எனக்கு வாற கோதிக்கு என்ன செய்வனெண்டு எனக்கே தெரியேல்லை.

இல்லைப் பிள்ளையள் ! தெரியாமல்தான் கேக்கிறன், நாங்கள் என்ன இஞ்சை சிங்களக்கட்சியளோடயே ஒப்பந்தம் கைச்சாத்திடிறோம், சிறிலங்காவின்ர அரசாங்கத்தோட தானே ! அப்பிடியிருக்க பேந்தென்ன ஆளாளுக்கு கட்சிமாறி புதிசாய் பதவியேற்ற உடன எல்லாத்தையும் புதுசாய் கதைக்கவேணுமெண்டு வருகினம் ! மகிந்தரின்ர ஆட்சியை நாளைக்கு ஜேவிபியும் ஹெலஉறுமயவும் கவிட்டால் அதுக்குப் பிறகு பேந்துமொரு தரப்பு புதிசாய் தொடங்கவேணுமெண்டு வரப்பார்க்கினம். ஆ . . . ஹெல உறுமய எண்டவுடனதான் சிரிப்பாய் கிடக்கிது.

சும்மா மூக்கு முட்ட திண்டிட்டு நேரம்போக ஹொங்கொங் நாட்டு கராட்டிப் படங்களைப் பார்த்திட்டு குங்ஃபூ தங்களுக்குத் தெரியுமெண்டு அவர் ஒரு பிக்கு ஒருத்தர் அளந்திருக்கிறார். குங்ஃபூ தாமரைப்பூ மாதிரி ஏதோவொரு பூ ஏண்டு பாவம் நினைச்சிருக்கோ தெரியேல்லை. என்னெண்டாலும் ஏற்கெனவே உவையின்ர நிலைப்பாடுகளுக்குப் பொருத்தமில்லாத உடுப்புகளோட பாராளுமன்றத்தில ஜேவிபியால பரிசு கொடுக்கப்பட்டு ஆஸ்பத்திரியில கிடந்ததையும் அப்ப நடந்ததையும் அன்னார் குங்ஃபூவுக்கு முன்னால கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தால் நல்லது.

மற்றதொரு விசயம் எனக்கு விளங்கேல்லை பிள்ளையள்: அதென்ன உந்த இணைத்தலைமை-நாடுகள் ஏதோ 'விட்டுக்கொடுப்புகள்' பற்றி கனக்கக் கதைக்கினம். நடுவீட்டில வந்திருந்துகொண்டு நாசம் செய்யிறவங்களிட்டை என்னத்தைப் பாருங்கோ விட்டுக்குடுக்கிறது ? சரி எங்களுக்குத்தான் தெரியேல்லை, சொல்லிறவையெண்டாலும் 'விட்டுக்கொடுப்பு' எண்டால் எப்பிடியிருக்கும் எண்டு முன்னுதாரணமாய் ஈராக், ஈரான் விசயங்களில விட்டுக் குடுத்துக் காட்டலாமெல்லே ! அப்பிடியேதாவது அவையள் பெரிய நாடுகள் செய்து காட்டியிருந்தால் தானே எங்களைப்போல சின்ன நாடுகள் பின்பற்றலாம் ! அதை விட்டிட்டு சும்மா வாயளவில சொன்னால் என்னெண்டு பாருங்கோ !

இந்த இடத்தில உங்களுக்கு நான் கட்டாயம் முந்தி நடந்த ஒரு விசயம் பற்றிச் சொல்லோணும். நீங்கள் கனபேர் அப்ப சரியான சின்னாக்களாய் இருந்திருப்பீங்கள். இப்ப இருக்கிற அமெரிக்க ஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் இன்ர தகப்பன் புஷ் சீனியர் 1988இல றொனால்ட் றீகனின்ர பதவிக்காலம் முடியிற நேரம். 41ஆவது அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் சூடுபிடிச்சிருந்த அந்தக் காலத்தில குடியரசுக்கட்சி சார்பாகப் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளரான புஷ் சீனியர் 'kinder, gentler America' (இரக்கமும் பெருந்தன்மையும் மிகுந்த அமெரிக்கா) எண்ட தேர்தல்-கோஷத்தோட பரப்புரையளை மேற்கொண்டிருந்தவர்.

அந்தக் காலத்தில யூலை 3, 1988 அண்டைக்கு பாரசீக வளைகுடாக் கடற்பரப்பில நிண்டுகொண்டிருந்த 'வின்செனஸ்' எண்டதொரு அமெரிக்க ஏவுகணை தாங்கிக் கப்பலில ஆரோ கையடிச்சுப் பார்த்ததில ஒரு ஏவுகணை வெளிக்கிழம்பிப் போய் ஈரானுக்குச் சொந்தமான பயணிகள் விமானத்தைத் தாக்கி 290 அப்பாவி மக்களைக் கொன்றிட்டிது. உத்தியோகபூர்வமான மன்னிப்பு எதுவும் அமெரிக்காவால கோரப்படாத பட்சத்தில, ஜனாதிபதி வேட்பாளரான ஜோர்ஜ் புஷ் சீனியரை இந்தச் சம்பவம் குறிச்சு கேட்கப் பட்டிது.

அதுக்கு அவர் சொன்ன பதில் "I will never apologize for the United States. I don't care what the facts are' (அமெரிக்காவுக்காக நான் ஒருபோதும் மன்னிப்புக் கோரப்போவதில்லை. உண்மைகள் எவ்வாறிருப்பினும் அவற்றை நான் கவனத்தில் கொள்ளமாட்டேன்).

இரக்கமும் பெருந்தன்மையும் கொண்டதொரு நாட்டைக் கட்டியெழுப்பப்போறதாய் சொன்ன அதே ஆள்தான் இந்தக் கருத்தையும் வெளியிட்டவர். அவரைத்தான் சனமும் தெரிஞ்செடுத்து பேந்து ஈராக் மீதான முதலாவது யுத்தம் நடந்து அடுத்த தேர்தலில அவர் தோற்கடிக்கப்பட்டதெல்லாம் வழமையான சம்பவங்கள். அதுதான் கண்ணதாசனின்ர பாட்டொண்டும் இருக்கெல்லே ஒரு விரலால சுட்டிக்காட்டேக்கிளை மிச்சம் 4 விரலும் காட்டிறவரைச் சுட்டிக்காட்டிதெண்டு. சும்மா ஒரு தகவலுக்காய் இதைச் சொன்னனான் பிள்ளையள்!

மற்றதொரு விசயம் பாருங்கோ! பேந்து சொல்ல மறந்தாலும் இப்பயே சொல்லிவைக்கிறன். நானும் வயசுபோய் வாக்குமாறின கணக்குக்கு அடிக்கடி உப்பிடிச் சொல்லிறனெண்டு நினைக்காங்கோ. என்னெண்டால் அண்டைக்கு யாழ்ப்பாணத்தில இருந்துவந்த ஒராள் சொன்னார் : "ஏரம்பர் ! நீர் ஆள்தான் வயசுபோனாலும் மனம் மட்டும் நல்ல இளமையாய் இருக்கிது.

அப்பிடியிருக்க ஏன் தொடர்ந்தும் உப்பிடியே பழசுப்போக்கில எழுதிக்கொண்டிருக்கிறீர். உதுக்கு கொஞ்சக்காலம் ஓய்வு குடுத்திட்டு வேற ஏதாவதையும் முயற்சிசெய்து பார்க்கோணும்" எண்டு. எட வயசு போகுதே எண்டு நெஞ்சிடிச்சுக் கொண்டிருந்த எனக்கு இப்பிடியொரு இளமைச்சான்றிதழ் கிடைச்சவுடன சந்தோசத்தோட நானும் யோசிச்சுப் பார்த்தன்.

நான் ஏற்கெனவே உங்களுக்குச் சொன்னதைப்போல சின்னாக்களுக்கு ஏதாவது ஆக்கபூர்வமாய் எழுதோணும் எண்டு கனகால ஆசை பாருங்கோ ! ஊர்உலகத்தில இருக்கிற பெரியபெரிய இலக்கியக்காரர், படைப்புக்காரர், ஊடகக்காரர் எண்டு பலரும் ஏதேதோ கனக்க எழுதினம். முந்தி இருக்கிற வரண்ட நிலைமை மாறி இப்ப எங்கள் மத்தியிலயும் படைப்புக்கள் பரவலாய் வெளிவருகிதெண்டு சந்தோசப்பட்டாலும் அவையெல்லாம் எந்தளவுக்கு, எத்தினைபேரை எட்டுதெண்ட கேள்வியையும் நாங்கள் கேட்டுக்கொள்ள மறக்கக்கூடாது.

ஏனெண்டால் சடங்குப் பாங்கிலான வெளியீட்டுவிழாக்களும் அறிமுகவிழாக்களும் பெருகியிருக்கிற இந்தக் காலகட்டத்தில சிறப்புப்பிரதிகளாக எத்தினை போகுதெண்டிறதைவிட, சில்லறைப் பிரதிகளாக எத்தினை போகுது ? வாசகர் மட்டத்தில அவை எப்பிடியான வரவேற்பை, ஆரோக்கியமான விமர்சனத்தைப் பெறுகிது எண்டிறதுகளில எல்லாம் கவனம் எடுக்கப்படேல்லை போல எண்டு என்ர மனசுக்குப் படுகிது.

ஆறாவது நான் சொல்லிறதை ஏற்றுக் கொள்ள மறுத்தால் எங்கட சனத்தொகையோட இங்கை விற்கப் படுகிற பத்திரிகையள், சஞ்சிகையளின்ரை எண்ணிக்கையளை ஒருக்கால் ஒப்பிட்டுப்பாருங்கோ ! இல்லாட்டி ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல உள்ள ஆக்களிட்டை எங்கை ஒரு கணிப்பெடுப்பு செய்துபாருங்கோ பார்ப்பம், எல்லாம் எத்தினை பேரிட்டை போய்ச்சேருதெண்ட கசப்பான உண்மை தெரியவரும். சும்மா ஆளாளுக்கு ரிவியையும் சினிமாக்களையும் குறைசொல்லிக் கொண்டிருக்கலாம்.

ஆனால், இலத்திரனியல்-ஊடகங்கள் பெருகிப்போய்க்கிடக்கிற இந்தியா உட்பட வெளிநாடுகளில இலக்கியப்படைப்புகளுக்கு நேராத அவலம் ஏன் எங்கள் மத்தியில மட்டும நலவேண்டும்! சந்தையில காய், கறி விற்கிறவையளுக்கு தாங்கள் வைச்சிருக்கிற மரக்கறியளின்ரை பூர்வீகமே தெரியும், அதை எப்பிடி விற்கிறதெண்டும் அவையளுக்குத் தெரியும்.

ஆனால், எங்கட புத்தகக் கடைகளில நிற்கிறவையள் புதுசாய் வாற, பரவலாக அறியப்பட்ட இலக்கியகர்த்தாக்கள் பற்றி எவ்வளவுக்கு அறிஞ்சுவைச்சிருக்கினம் ? ? தெரியாமல் இருக்கிறது பிழையில்லை, தெரிஞ்சுகொள்ளிற முயற்சியில்லாமல் இருக்கிறதுதான் தவறு ! இதுக்கெல்லாம் என்ன காரணமெண்டு நாங்கள் சிந்திக்காட்டி, வாசிக்கப் படிறதுகளுக்குப் பதிலாய் வேற வழியில்லாமல் சிறப்புப்பிரதிகளாகவே எல்லாத்தையும் வித்துத் தள்ளிட்டு கொட்டாவிவிடவேண்டிய அவலநிலை தவிர்க்கமுடியாமல் போயிடும். 'அஞ்சில வளையாதது ஐம்பதில வளையுமோ !' எண்டெல்லாம் எங்கட மொழியில அருமையான பழமொழியள் இருக்கிது. ஆனால், நாங்கள் அஞ்சில இருக்கிற பிள்ளையளுக்கு ஒண்டையும் முன் வைக்காமல் அறுபது,எழுபதுகளில 'ஐயோ ! தமிழ் அழியுதே !' எண்டு அங்கலாய்க்கிறோம்.

ஆங்கிலம் மட்டுமில்லாமல் சிங்கள மொழியிலயும் சிறுவர்களுக்கெண்டு தரமான ஆக்கங்கள் வந்துகொண்டிருக்கிது. 'பறக்கும் மனிதன்' எண்ட சிறுவர்களுக்கான கதையை எழுதி ரிம்மி, நில்லி, கிற்றி, பப்பி எண்டெல்லாம் சிங்களச்சிறுவர்களிடையே நன்கு அறியப்பட்ட பாத்திரங்களைப் படைச்சவாவும், பல சிறுவர் இலக்கிய விருதுகளைப் பெற்றுக்கொண்டவாவும் ஆகிய ஜானகி சூரியராய்ச்சி என்ன சொல்லிறாவெண்டால் 'கலை, கணிதம், விஞ்ஞானம், தத்துவம் எண்டு பலதரப்பட்ட ஆளுமையையும் இயல்பாகவே சிறுவர்கள் கொண்டிருக்கினம்.

ஒவ்வொருவரின்ர சிறப்பாற்றலையும் இனங்கண்டு தட்டிக்குடுக்க வேண்டியது பெற்றோர்களின்ர கடமை' ! ஆக சிறுவர்களுக்கெண்டு வாசிக்கிறதுக்கு ஒண்டையும் வழங்காத நாங்கள் வாசிப்பில ஈடுபாடு காட்டாத ஆட்கள் பெரும்பான்மையில உருவாகிறதை மட்டும் விமர்சிச்சுக்கொண்டிருக்கிறதால மாற்றம் ஒண்டையும் எதிர்பார்க்கேலாது.

தனிய எழுத்துலகத்தில மட்டுமில்லாமல் இலத்திரனியல் ஊடகங்களிலயும் இதே நிலைமைதான் நிலவிது. எப்பையோ ஒரு அரசகாலத்தில படிப்பில ஆர்வம் காட்டாத தன்னோட பிள்ளையளுக்கு கல்வியைப் புகட்டிறதுக்காக தகப்பன் தகுந்த வழிமுறையைத் தேடின நேரத்தில தான் 'பஞ்ச தந்திரக்கதைகள்' உருவாகிச்சிது.

ஆனால், இந்தக் காலத்தில நாங்கள் புதிய தேடல்களில ஆர்வம் காட்டாமல் இருக்கிறது சரியோ ? குஞ்சுகள் மனச்சாட்சியைத்தொட்டு நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம் ! பெற்றோரை இழந்த ஹைடி எண்ட சின்னப்பிள்ளை தன்னோட பாட்டாவோட வாழிற காலத்தில சந்திக்கிற ஆட்களையும் நெருக்கடிகளையும் பற்றி, சுவிஸில 1880 இல எழுதப்பட்ட மிகப் பிரபல்யமான கதையொண்டு கிட்டடியில (செப்ரெம்பர் 2005) கார்ட்டூனாகவும் வெளிவந்து எல்லா தியேட்டர்களையும் ஆக்கிரமிச்சிருக்கிது.

சின்னாக்களுக்கெண்டு சொல்லப்படிறதுக்கும் படிக்கப்படிறதுக்கும் ஆயிரமாயிரம் விசயங்கள் இருக்கிது. ஆனால், அதில ஈடுபடிறது சின்னப்பிள்ளைத்தனமோ, சில்லறைத்தனமோ இல்லை ! புரிஞ்சுகொள்ளக் கடினமான பழந்தமிழ்ச் சங்ககால மற்றும் அதுக்குப் பிந்தின கால இலக்கியங்களை சின்னாக்களுக்குப் பாடமாக்கக் குடுக்கிறதால என்ன பயன் அவையளுக்கு ? ஏனெண்டால் அவையளுக்கெண்டு ஒரு மொழிநடை, ஒரு தனியுலகம் இருக்கு. அந்தவகையிலதான் அணை கட்டிறதுக்கு அணில் செய்ததுபோல எனக்கு இந்த விசயத்தில சில விருப்பங்கள் இருக்கு. அதுக்காகத்தான் உலா-75ஓட 'ஏ-9' இற்கு சின்னதொரு ஓய்வு குடுக்கிற யோசனையில இருக்கிறன். சரி பிள்ளையள் அடுத்த கிழமை சந்திப்பம் !

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் அண்மையில் தனது மூன்றாவது ஆண்டினைப் பூர்த்திசெய்துள்ளது.

வளங்களில் முக்கிய வளங்களில் கால்நடை வளம் பிரதான இடத்தை வகிக்கின்றது. எனினும் இருக்கின்ற கால்நடைகளின் பயன்பாடானது அதன் எண்ணிக்கைக்கு ஏற்ப முழுமையாகக் கிடைப்பதில்லை.

கால்நடைகளில் இருந்து பெறப்படும் பால் உற்பத்தியாகட்டும், இறைச்சியாகட்டும் திருப்திகரமாக அமையவில்லை.

இதற்கான காரணங்கள் பலவாக இருந்தாலும்



தரமான கால்நடைகள் எம்மிடம் இல்லாமையே இதற்குப் பிரதானமான காரணமாகச் சொல்லப்படுகிறது.

இத்தகைய பின்னணியிலேயே காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு கால்நடைகளை தரம் உயர்த்தும் பாரிய செயற்பாட்டில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

நல்லிணக் காளை கால்நடைகளிலிருந்து சுக்கிலம் சேகரிக்கப்பட்டு உரிய முறையில் கால்நடைகள் சினைப்படுத்தப்பட்டு கால்நடைகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

வன்னியிலே கிளிநொச்சி, பூநகரி, துணுக்காய், ஒட்டுசுட்டான், கனகராயன்குளம், புதுக்குடியிருப்பு போன்ற கால்நடை வைத்திய பிரிவுகளில் இச்செயற்பாடு சிறப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

2003ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடானது இவ்வாண்டில் 707 மாடுகளுக்கும், 231 ஆடுகளுக்கும் மேற்குறிப்பிட்ட கால்நடைப் பிரிவுகளில் தனது சேவையை மேற்கொண்டது.

அவ்வாறே 2004ஆம் ஆண்டில் 1812 மாடுகளுக்கும், 508 ஆடுகளுக்கும் 2005ஆம் ஆண்டில் 829 மாடுகளுக்கும், 574 ஆடுகளுக்கும் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக விருத்தியுறாமலிருந்த இவ்வாறான கால்நடை மேம்பாட்டுத்திட்டங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகள் காரணமாக அக்கறை பெற ஆரம்பித்தன. அதன் ஒரு கட்டமாகவே கடந்த மூன்று வருடங்களாக சிறப்புப்பெற்று வருகின்றன. இந்தச் செயற்பாடு மேலும் சிறக்க நாங்கள் அனைவரும் அக்கறை பெறுவோமாக.




யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்கை செய்யும் நிலங்கள் சில காலங்களில் தரிசாக விடப்பட்டு வருகின்றன. கரைச்சி, பூநகரி, துணுக்காய் பகுதிகளிலுள்ள அதிகமான வயல் நிலங்கள். கால போக நெல் அறுவடையின் பின் தரிசாக விடப்படுதலில் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வண்ணமே யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கிணறுகளற்ற வயல் நிலங்கள் மறு காலபோகம் வரும்வரை தரிசாகவே விடப்படுகின்றன. குடாநாட்டில் சில தோட்டநிலங்கள் புரட்டாதி மாதம் தொடக்கம் கார்த்திகை மாதம்வரை பயிரின்றி தரிசாக இருப்பதைக் காணலாம்.

செய்கை செய்யும் நிலம் தரிசாக விடப்படின் என்ன தீங்குகள் ஏற்படும்? தரிசு நிலங்களுக்கு பின்வரும் தீங்குகள் ஏற்படும்:-

தோட்ட நிலங்கள் தரிசாக விடப்பட்டால் களைகள் அடர்த்தியாய் வளர்ந்து பூத்து காய்த்து விதைகளைப் பரப்பும். இவ்விதைகள் அடுத்தபோகப் பயிரிடையே முளைத்து உழவருக்குச் சஞ்சலம் விளைவிக்கும்.

# சஞ்சலம் தீர்க்கும் சணல்

சூரிய வெப்பம் நிலத்திலுள்ள போசாக்குகளை வெந்துபோகச் செய்யும்.

உவர், சவர் வயல் நிலங்களாகில் காலபோகங்களில் மண்ணிலுள்ள உப்பு கீழ் நோக்கிச் செல்லும். ஆனால் பயிரற்ற சிறுபோக காலங்களில் சூரிய வெப்பத்தின் காரணத்தால் தரைமட்டத்தில் உப்புக்கள் படரும். இதனால் காலபோகத்தில் புழுதி விதைப்பாய் விதைத்த நெல்லிற்கு ஆரம்பமழை குறையுமாகில் வேளாண்மை எரிந்துபோகும்.

மணல் பிரதேசமாகில், காற்று தரிசு நிலத்தின் மேற்பரப்பிலுள்ள பசளை மண்ணை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லும்.

***. மேற்கூறியவற்றை தடைசெய்து நீர் வசதியற்ற இடங்களில் வருமானம் தரக்கூடிய குறுகியகாலப் பயிர் யாது?**

சணல் ஒன்றே நீர்ப்பாசன வசதி குறைந்த நிலங்களுக்கு உகந்தது. நெல் அறுவடை செய்வதற்கு ஒரு கிழமைக்கு முன் சணல் விதைக்கலாம். அல்லது நெல் அறுவடை செய்தவுடன் உழுது சணல் விதைத்து மறுத்து உழுது புரட்டி விடலாம். தோட்டத்தரையாயின் சணலை விதைத்து நாட்டுக் கலப்பையால் உழுது விடலாம். விதைக்கும்போது நிலம் ஈரப்பசுமையுடையதாய் இருப்பின் அல்லது விதைத்து ஒரு மழை பெய்யின் சணல் நன்றாக வளரும்.

மேலும் நிலத்திலுள்ள போசாக்குகள் சூரிய வெப்பத்தில் வெந்து போகாமல் நிலத்தை மூடி வைத்துக் கொள்ளும்.

சணல் காற்றிலுள்ள நைதரசனை மண்ணினுள் புகுத்துவதால் நிலம் வளமடைகிறது. சணல் நிலத்திலுள்ள போசாக்குகளை மற்றும் பயிர்களிலும் பார்க்கக் குறைவாக உட்கொண்டு வளரும். சணல் இலையின் அடிப்பாகத்திலிருந்து சிந்தும் ஓர்வகை நச்சு நீர் களைகளை வளரவிடாது, இதன் நிமித்தம் அடுத்த போகப்பயிரிடையே களைவளர்ச்சி மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

ஒரு ஏக்கர் (4000கண்டுத்தரை) சணல் 9 தொடக்கம் 14 தொன் பசுந்தாளை 2-21/2 மாதங்களில் தரும்.

உவர், சவர், கார நிலங்களிலுள்ள உப்பை சணல் தனது ஆழமான வேர்மூலம் கீழ் நோக்கிச் செலுத்தும். உவர் நிலங்களையும் வளமாக்கும்.

சணல் மணற் பிரதேசங்களிலுள்ள மணலை பாதுகாத்து இறுகச் செய்யும்.

யாழ்ப்பாண மாவட்ட செய்கை நிலங்களுக்குச் சேதன உறுப்புப்பொருட்கள் மிகவும் அத்தியாவசியம். அதிக பணச் செலவில் பிற மாவட்டங்களிலிருந்து கொணரும் தரம் குறைந்த களைவிதை நிறைந்த மாட்டெருவைத் தவிர்த்து சணலையும், தரம் சிறந்த உள்ளூர் எருவையும் குறைந்த செலவில் உபயோகிக்கலாம்.

*** சணலில் வேறு பிரயோசனங்கள் உண்டா?**

சணல் மேற்கூறியபடி கமத்தொழிலுக்கு மாத்திரமன்றிப் பின்வருவனவற்றிற்கும் உதவுகிறது.

**கால்நடை:-**

இலை, தண்டு, சருகு, கோது, விதை சிறந்த கால் நடைத்தீன். இதனால் பால் சுரக்கும். வெண்ணை திரளும். இதனால் கால்நடைகள் சிறப்பாக வளரும்.

**கடதாசித் தொழில்:-**

கடதாசி தயாரிப்பதற்கு சணல் தண்டு சிறந்த தென வாழைச்சேனை ஆராய்ச்சியாளர் கூறியிருந்தனர்.

**கடல்தொழில்:-**

சிலாபம், நீர் கொழும்பிலுள்ள கடற்றொழிலாளர்கள் சணல்தும்பிலிருந்து செய்யப்படும் வலையை 'நைலோன்" வலையிலும் பார்க்க தரமானதாக முன்பு விரும்பி பாவித்தார்கள். அதனால் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து ஏராளமான சணல் தண்டை ஏற்றிச்செல்வார்கள். அப்போ வலையாகவும் இது பாவிக்கப்பட்டது.

*** இப்பயிரை எப்படி செய்கை செய்யலாம்.**

மேற்கூறிய சிறந்த பயன்தரு பயிரைச் செய்கை செய்வது மிகவும் சுலபம். செய்கை செய்யவிருக்கும் நிலத்திற்கு உழமுன் 28 இறாத்தல் மும்மடங்கு அடர் சுப்ப பொஸ்பேற் பரவவும். விதை பெருக்கவேண்டுமாயின் ஏக்கருக்கு 30 இறாத்தல் விதை வேண்டும். பசுந்தாள் வேண்டுமாயின் 80 இறாத்தல் விதை வேண்டும். ஒரு உழவும் ஒரு தண்ணீர்ப் பாசனமும் போதுமானது. ஒரு ஏக்கர் சணல் செய்கைக்கு அதிக செலவில் செலவிடவேண்டியதில்லை. பசுந்தாளாக பாவிக்கவேண்டுமெனில் 2-2 1/2 மாதமுடிவில் அதாவது பூக்கள் அரும்பும் காலத்தில் சணல் பயிரை உழுது அல்லது தாட்டுவிடலாம்.

எனவே சணல் பயிர் எமது மண்ணுக்கு சிறந்த உரமாகவும் சிறந்த மண் வளமாக்கியாகவும் கைத்தொழில் பாவனைக்குரியனவாகவும் அமைவதால் சணலை பயிர்செய்து எமது மண்ணை வளப்படுத்தி களைகளற்ற பயிர் செய்து பயிர்களை பாதுகாத்து பயன்பெறுவோம்.

========== ஜீவநிலா.

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

புதிர்-21இற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 7 | 9 | 5 | 3 | 1 | 6 | 4 |
| 1 | 5 | 4 | 2 | 6 | 7 | 3 | 8 | 9 |
| 9 | 3 | 6 | 4 | 1 | 8 | 7 | 2 | 5 |
| 7 | 4 | 1 | 6 | 9 | 2 | 5 | 3 | 8 |
| 6 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 | 7 | 1 |
| 5 | 2 | 8 | 3 | 7 | 1 | 9 | 4 | 6 |
| 4 | 7 | 9 | 1 | 2 | 6 | 8 | 5 | 3 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 4 | 1 | 7 |
| 8 | 1 | 5 | 7 | 3 | 4 | 6 | 9 | 2 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும்தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

**புதிர் - 22**

அதனுடைய சித்திரவதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப் புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | |
| | | 6 | | 3 | | 1 | | |
| 2 | | | | 7 | 9 | 5 | 8 | 4 |
| | | | | | | | 7 | 8 |
| | 1 | | | | | | 5 | |
| 8 | 9 | | | | | | | |
| 5 | 6 | 7 | 8 | 4 | | | | 9 |
| | | 2 | | 9 | | 3 | | |
| | | | | | 5 | | | |

## எட்டாதிருந்த கணினிக் கல்வி கிட்டிய கட்டணத்தில்!

**DIPLOMA IN MS-OFFICE (M.S.O)**
*Ms-Word*
*Ms-Excel*
*Ms-Power Point*
*Ms-Access*
*Ms-Windows XP*
4 Months — மாதமொன்றிற்கு 900.00

**DIPLOMA IN DESKTOP PUBLISHING**
*Adobe Page Maker*
*Corel draw*
*Type twistet*
*Langue Computing*
*Advertisement layout*
4 Months — மாதமொன்றிற்கு 900.00

**DVANCED DIPLOMA IN DIGITALPRE - PRESS (ADDP)**
*D.T.P, Printers and Scanners*
*Adobe Page Maker*
*Adobe Phpto Shop*
*Corel Draw*
*Language Computing*
*Advertiment Layout*
*Color Separation*
5Months — மாதமொன்றிற்கு 1200.00

**DIPLOMA IN OFFICE AUTOMATION (DIOA)**
*Information Technology*
*Microsofi word*
*Microsoft Excel*
*Microsoft Power Point*
*Microsoft windows*
*Inter net & E-mail*
*Printing*
5Months — மாதமொன்றிற்கு 1300.00

**JUNIOR DIPLOMA IN COMPUTER SCIENCE**
5 வயது தொடக்கம் 12 வயது வரையானவர்கட்கு
3 Months — மாதமொன்றிற்கு 650.00

அனைத்துப்பாடநெறிகளுக்கும் இலவச பாடக்குறிப்புக்கள்.
தமிழ், ஆங்கிலம் விரும்பிய மொழியில் கற்கும் வாய்ப்பு.
ஒவ்வொரு வகுப்பிலும் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகை.
நீடிக்கப்பட்ட பயிற்சி நேரங்கள்.
நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியரினால் விரிவுரைகள் வழங்கப்படும்.
இறுதியில் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-

**வின்நெற்**
**கணினி பயிற்சி நிலையம்**
*கனகபுரம் வீதி, கிளிநொச்சி.*

(சி-13981)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

மலர்வு 15 * 12 * 1932



உதிர்வு 02 * 02 * 2006

### அமரர் திரு.அண்ணாமலை கணபதிப்பிள்ளை

**நெடியகாடு, வல்வெட்டித்துறை.**

**(ஓய்வுபெற்ற இலங்கை துறைமுக அதிகார சபை உதவி அதிகாரி- கொழும்பு)**

அன்பினால் அரசாண்ட எம் தந்தையே
பண்பினால் அரவணைத்த எம் பாச உறவே
கல்வியில் நாமெல்லாம் உயர்வுபெற
அனுதினம் உழைத்த எம் அப்பாவே
பாலன் முருகன் அவன் அழைத்தானோ
பட்டென்று எமையெல்லாம் பாரினில் பரிதவிக்கவிட்டு
நீங்கள் மட்டும் விண்ணகம் விரைந்ததென்ன
அன்பினால் அரசாண்ட எம் அப்பாவே- உங்கள்
அன்புமுகம் இனி என்று காண்போமோ
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும் கடித மூலமாக ஆறுதல் வழங்கியும் மலர் வளையங்கள் சாத்தியும் உதவி ஒத்தாசைகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு 04-03-2006 (நாளை) சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

தற்காலிக முகவரி:-
58/2 விசுவமடு,
முல்லைத்தீவு.

உங்கள் பிரிவால் துயருறும்,
**குடும்பத்தினர்.**

(7503)

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழாவுக்கு வந்த சாள்ஸ் எங்கே சனாதிபதி எனக் கேட்டார் அதற்கு,.... அவர் வழமைபோல் காலதாமதமாகவே வருவார் எனக் கூறப்பட்டது. அடுத்து எங்கே உங்கள் பிரதமர் என்று கேட்டார். அப்போது பிரதமராகவிருந்த சிறிமாவோ பண்டார நாயக்காவை ஸ்ரெச்சரில் வைத்துத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அடுத்து எங்கே உங்கள் பாதுகாப்பு அமைச்சர் என சாள்ஸ் இளவரசர் கேட்டபோது அவர் கைத்தடியோடு அங்கே நொண்டி நொண்டி வந்துகொண்டிருந்தார். அடுத்து எங்கே உங்கள் பொலிஸ்மா அதிபர் இராஜகுரு என சாள்ஸ் கேட்டபோது அவர் சன நெரிசலில் மயங்கி விழுந்துவிட்டார் என்று பதிலளிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் அமைதியாக கேட்ட சாள்ஸ் இளவரசர் பின்வருமாறு கூறினாராம்.

"கால நேரத்தை (Punchuality) கணக்கில் எடுக்காத ஒரு சனாதிபதி; ஸ்ரெச்சரில் வரும் பிரதமர்; கைத்தடியோடு நொண்டும் பாதுகாப்பு அமைச்சர்; மயங்கி விழும் பொலிஸ்மா அதிபர்; உங்கள் நாடு தூங்கி விழும் நாடு" என்று கடிந்து கொண்டாராம். எப்படி சாள்ஸ் இளவரசரின் இலங்கை பற்றிய கணிப்பீடு?

### ஜெனீவா மாநாடும் தூங்கி விழுந்தவர்களும்

2006 ஆம் ஆண்டு மாசிமாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்தப் பேச்சு வார்த்தையின் போது இடம்பெற்ற பல சுவாரஷ்யமான விடயங்கள் இப்போது கொழும்பு ஊடகங்களின் ஊடாக வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இரண்டாம் நாள் பேச்சுவார்த்தை நீண்ட நேரமாகவும் காரசாரமாகவும் இடம்பெற்றதாகக் குறிப்பிடும் கொழும்பு நாளிதழ் ஒன்று இந்தச் சூடான விவாதத்திற்கு மத்தியிலும் அரசதரப்புப் பேச்சுக்குழுவில் பங்குபற்றிய போகல்லகம என்ற அமைச்சர் பேச்சுவார்த்தை மேசையில் உறங்கிக் கொண்டிருந்ததாகவும் அவர் அருகில் அமர்ந்திருந்த பேரியல் அஸ்ரப் அவரைத் தட்டி எழுப்பியதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சுற்றுலா வரும் அரச தரப்புப் பிரதிநிதிகளுக்குத்தான் இலங்கையில் எரியும் இனப்பிரச்சினை மீது எத்துணை அக்கறை பார்த்தீர்களா?

பேரினவாதிகளின் கலையாத உறக்கத்தை தொடுத்துப் பார்த்தால் 1965 களில் டட்லி சேனநாயக்காவும் 1989 களின் முற்பகுதியில் ஜே.ஆரும், 1989 களின் பிற்பகுதியில் டி.பி.விஜயதுங்காவும் 1998 களில் சந்திரிகா அரசும் 2006 இல் இன்று மகிந்தரின் அரச தூதுக்குழுவும் உறக்கம் கலையாத மானிடர்களாகவே வாழ்கிறார்கள். தமிழர் தரப்போ உறங்காது எப்போதும் எங்கும் விழிப்போடுதான் செயலாற்றுகின்றது. இதனால் பேரினவாத வியூகங்கள் உடைக்கப்படுகின்றன. போராளிகளின் மதியூகங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தின் அசைவியக்கம் அதற்கே உரித்தான இயங்கியல் தடத்தில் முன்னோக்கி நகர்த்தப்படுகின்றது.


## தமிழீழ தேசியத் தொலைக்காட்சி
## காட்சியூடகப் பயிற்சியும், பணியும்





**இது தகவல் யுகம்**
**தகவலே மனிதனை இன்று ஆள்கிறது.**
**இன்று சகலதும் தகவல் மயமாகிவிட்டது.**
**தகவல் ஊடகங்கள் இன்றைய உலகில் முதன் நிலை வகிக்கின்றது.**
**அவை சகலரையும் தொடர்புறுத்தி ஆள்கின்றன.**
**தகவல் துறையே இன்று எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது.**

* ஊடகத்துறையில் ஆர்வமுடையோருக்கு தொலைக்காட்சித்துறையில் பயிற்சிகள் அளிக்கப்படும்.
* தொலைக்காட்சித்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் பங்காற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.
* பயிற்சியின் பின்னர் தகுதியானோர் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
* வயதெல்லை கிடையாது.
* ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* ஊடகத்துறை அறிவுடையோருக்கு முன்னுரிமையுண்டு.
* கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) (தமிழில் திறமைச்சித்தி கட்டாயம்)
* வேண்டுகை முடிவுத்திகதி:- 15.03.2006.
* கடிதம் மூலமாகவோ, நேரிலோ விண்ணப்பங்களைச் சேர்ப்பிக்கலாம்.
* தொடர்புக்குரிய முகவரி:-

**காட்சியூடகப் பயிற்சியும், பணியும்,**
**ஆளணிப்பகுதி,**
**தமிழீழ தேசியத் தொலைக்காட்சி,**
**1002 – திருநகர்,**
**கிளிநொச்சி.**

(7275)


## நூலாசிரியர் பற்றி.....

வேர்ஜீனியா எம் அக்ஸ்லைன்-தான் 'விளையாட்டு வழி சிகிச்சை' (PLAY THERAPY) என்ற நூலின் ஆசிரியராகும். உணர்வு ரீதியாகக் குழப்பப்பட்டிருக்கும் பிள்ளைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான விளையாட்டு வழி சிகிச்சை உத்தியில் நிபுணர் என அவர் அங்கீகாரம் பெற்றிருக்கிறார். டொக்டர் அக்ஸ்லைன் ஓஹியோ மாநில பல்கலைக்கழகத்திலும் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றவர். நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் கல்விசார் கல்லூரியிலும் (School of Education) மருத்துவம் சார் கல்லூரியிலும் (School of Medicine) ஆறு வருடங்கள் கற்பித்திருக்கிறார். ஏழு வருடங்களுக்கு, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் கல்லூரியின் ஆசிரிய பீடத்திலே இருந்திருக்கிறார். அதற்கு முன்னதாக, சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் இணை ஆய்வாளராகவும் ஆசிரிய பீட உறுப்பினராகவும் மூன்று வருடங்களைச் செலவிட்டிருக்கிறார். தற்போது டொக்டர் அக்ஸ்லைன் அவர்கள் ஓஹியோவின் கொலம்பஸ்-இல் தனிப்பட்ட முறையில் தன் தொழிலை செய்து வருகிறார். அங்கு அவர், விரிவுரையாற்றல், ஆலோசனை வழங்குதல், எழுதுதல், ஊடாக தனது தொழில்சார் ஞானம் மற்றும் திறமை முதலியவற்றை தொடர்ந்தும் பகிர்ந்துகொண்டிருக்கிறார். ஓஹியோ மாநில பல்கலைக்கழக ஆசிரிய பீடத்தில் அவர் உறுப்பினராக இருக்கிறார்.

## முடிவுரை

டிப்ஸின் வாழ்க்கையில் இருண்ட கணங்கள் இருந்தன. ஒரு குறிப்பிட்டகாலம் வாழ்க்கையின் நிழலில் அவன் வாழ்ந்திருந்தான். ஆனால் தனது இருண்ட கணங்களுக்குள்ளிருந்து வெளியே நகரவும் தன்னுடைய வாழ்க்கையினுடைய நிழல்களையும் பிரகாசங்களையும் தான் எதிர்கொள்ள முடியும் என்று தானே கண்டுகொள்ளவுமான வாய்ப்பு அவனுக்குக் கிட்டியிருந்தது.

சிலவேளை, அந்தக் கண்ணைக் கூசவைக்கும் சூரிய ஒளியை, வாழ்வினுடைய நிழல்களின் அமைவுக் கோலங்கள் தணித்து விடும்போது வாழ்க்கையிலே அதிக புரிந்துணர்வும் அழகும் உருவாகக்கூடும். வாழ்க்கையினுடைய புயல்களுக்கு தாக்குப்பிடித்த உறவானது அதிக ஆழமானதாகவும் இருக்கக் கூடும். ஒரு போதுமே ஏமாற்றத்தைத் தராத, துக்கத்தைத் தராத உணர்ச்சிகளைக் கிளறி விடாத அனுபவமானது உப்புச்சப்பில்லாததாகவே இருக்கும். அதில் சவால்களோ மாற்றங்களோ பெரியளவில் இருக்காது. சில



வேளை, எங்களது கண்களுக்கு முன்னாலேயே உருவாகின்ற தன்னம்பிக்கை, விசுவாசம், எதிர்பார்ப்பு முதலியவற்றை நாம் பட்டறிந்து கொள்ளும்பொழுது எங்களுக்குள்ளேயே அகவலுவையும் துணிவையும் பாதுகாப்புணர்வையும் அது கட்டியெழுப்பக்கூடும்.

எங்களுடைய பட்டறிவுகள், உறவுகள், எண்ணங்கள் மற்றும் உணர்வெழுச்சிகள் முதலியவற்றின் விளைவாக வளர்ந்து மேம்பாடடைகின்ற தனி மனிதர்களாகவே நாங்கள் எல்லோரும் இருக்கிறோம். வாழ்க்கையை உருவாக்க உதவுகின்ற கூறுகளின் திரட்டிய வடிவமாக நாங்கள் இருக்கிறோம்.

டிப்ஸின் கதையைப் பகிர்ந்து கொள்வது பெறுமதிமிக்கது என்று நான் கருதியதால், இந்த நூலில் கூறப்பட்டுள்ளவற்றின் பகுதிகளை, பல்கலைக்கழகங்களில் நான் ஆற்றிய உரைகளின்போது மாணவர்களோடும், தொழில்சார் சந்திப்புக்களின்போதும் பகிர்ந்துகொண்டிருக்கிறேன்.







ஒரு நாள் எனது முன்னாள் மாணவர் ஒருவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

*சிறிது நேரத்தை செலவழித்து இதை உங்களுக்கு எழுதாமலிருக்க என்னால் முடியவில்லை. உங்களின் வகுப்புக்களில் இருந்த நூற்றுக் கணக்கானவர்களில் நானும் ஒருவன். என்னுடைய முகம் உங்களுக்கு நினைவில் இல்லாமலிருக்கலாம். ஆனால் என்னை நம்புங்கள் நான் ஒரு கேட்டு அவதானிப்பவன். நான் இப்போது வெளிநாட்டில் இருக்கிறேன். மீண்டும் சீருடையில் இருக்கிறேன். விரைவிலேயே பதவியுயர்வை எதிர்பார்த்திருக்கிறேன். நேற்றைக்கு எங்கள் தங்கிடத்திலே நான் ஒரு உரையாடலை கேட்க நேர்ந்தது. அதைக் கேட்டதும் அமெரிக்காவினுடையவும் வீட்டினுடையவும் எல்லா நினைவுகளும் என்னுள் விரைந்து நிரம்பிக்கொண்டன. முக்கியமான விடயங்கள் என்பவை, நாங்கள் மற்ற எல்லா விடயங்களையும் மறந்து போனபின் எங்கள் நினைவில் நிற்கும் விடயங்கள்தான் என்று நீங்கள் கூறியது எனக்கு நினைவுக்கு வந்தது. அத்தோடு எமது கவனம் குவியும் இடங்களை நகர்த்தி விடுவதற்கும் அனுபவங்களால் நிச்சயமாகமுடியும். அன்றைக்கு இரவு நாங்கள் ஊக்கமிழந்து போயிருந்தோம். உற்சாகமிழந்து போயிருந்தோம். இதெல்லாம் என்ன நரகமடா என்று யோசித்துக்கொண்டிருந்த வேளையிலே திடீரென்று டிப்ஸ் அங்கு 'தோன்றினான்'. மேசையின் அந்தப்பக்கமிருந்த ஒருவன் டிப்ஸைப்பற்றி கதைத்துக் கொண்டிருந்தான். அது எனக்கு என்ன செய்தது என்று உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறதா? நேரத்தை வீணடிக்காமல், நான் அவனை நோக்கி விரைந்தேன். நீ எப்படி டிப்ஸைப் பற்றி அறிந்தனீ? என்று அவனைக் கேட்டேன். அவன் எனக்குச் சொன்னான். ஒரே வகுப்பில் நாங்கள் இருக்கவில்லை. ஒரே வருடத்திலும் அது நிகழவில்லை. ஒரே பல்கலைக்கழகத்திலும் நாங்கள் கற்கவில்லை. ஆனால் ஒரே பிள்ளையைப் பற்றித்தான் அவன் கதைத்தான். அது எனக்கு எந்தளவு நன்மை செய்திருக்கும் என்பதை உங்களுக்கு சொல்லவே தேவையில்லை. எனக்கு மட்டுமல்ல அங்கிருந்த எங்கள் எல்லோருக்குமே. ஏனென்றால் நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து, டிப்ஸின் மிகுதிக் கதையை எல்லோருக்கும் சொன்னோம். அனைத்து விழுமியங்களினதும்.... அதாவது நாங்கள் இறுகப்பற்றிப் பிடித்திருக்கிற அனைத்து விழுமியங்களினதும்... குறியீடாக டிப்ஸ் ஆகிப் போனான். அதன் பின்பு, "டிப்ஸ் இங்க வந்து விட்டபடியால் நாங்கள் இனித் தோற்கடியாது'' என்று மற்றவர்கள் சொன்னார்கள்.*

*ஆனால் டிப்ஸ் எவ்வளவுக்கு யதார்த்தமாகி விட்டிருக்கிறான், என்னமாதிரியான உண்மையான ஆற்றல் வாய்ந்த சக்தியாக அவன் ஆகிவிட்டான்....... அவன் எப்படி என்னில் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டான் என்பது என் கருத்தைக் கவர்ந்தது. பிறகு நான் எனது கல்வியைப் பற்றி எண்ணிக் கொண்டேன் . நிர்வாகத்துறையில நான் பட்டம் பெற்றேன். உளவியல் துறைசார்ந்த பதங்களில எனக்கு அவ்வளவு பரிச்சயமில்ல. அதால டிப்ஸின்ர விவகாரம் தொடர்பான உளவியல் ரீதியான உய்த்துணர்தல் எல்லாவற்றையும் தவற விட்டுவிட்டேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் கடவுளின் உதவியாக, ஒரு வகுப்பறையில நான் எப்பவாவது சந்தித்திருக்கக் கூடிய யதார்த்தமான ஒரே நபராக டிப்ஸ்தான் இருக்கிறான். ஒரு முழுமையான மனிதனாக இருப்பதன் பொருள் என்ன என்று கற்பிக்கக் கூடிய ஒரே ஆளாகவும் அவன்தான் இருக்கிறான். அதற்கு அப்பாலும் அவனால் போக முடியும். அந்த மூன்று வரிகளை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன்.*

***நான் எப்படி இருக்கவேணுமெண்டு சொன்னேனோ அப்படி.***

***நீங்கள் எப்படி இருக்கவேணுமெண்டு சொன்னீர்களோ அப்படி.***

***நாங்கள் எப்படி இருக்கவேணுமெண்டு சொன்னோமோ அப்படி.***

*உலகளாவிய அளவிலே நாங்கள் எல்லோரும் எதை விரும்புகிறோமோ அதையே டிப்ஸ"ம் விரும்பினான் என்றே நான் ஊகிக்கிறேன். பெறுமதி மிக்கவர்கள் என்று உணர்வதற்கான வாய்ப்பே அது.*

விரும்பப்படுகிற, மதிக்கப்படுகிற ஒரு நபராக, மகிமைபெறத்தகுதியான ஒரு மனிதப்பிறவி என ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒரு நபராக இருக்கும் வாய்ப்பே அது.

டிப்ஸின் குடும்பத்தினர் புறநகர்ப்பகுதிக்குக் குடிபெயர்ந்து சென்றதோடு அவர் களுடனான தொடர்பை நான் இழந்து போனேன்.வருடங்கள் உருண்டு சென்றன. பிறகு ஒருநாள், பேறுபெற்ற பையன்களுக்கான பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் எனது நண்பரொருவர் அந்தப் பாடசாலைச் செய்தித்தாளில் வந்திருந்த ஒரு கடிதத்தை எனக்குக்காட்டினார். அது பாடசாலை தலைமை ஆசிரியருக்கும் நிர்வாக பீடத்தினருக்கும் முகவரியிடப்பட்டிருந்தது. எனது நண்பர் டிப்ஸைப் பற்றி அறிந்திருக்கவில்லை.. பிள்ளைகளுக்கு அவர்களது கருத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டால், அவர்கள் தங்களது நாளாந்த வாழ்க்கைக்குள் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். புரிந்துணர்வையும் துணிகரத்தையும் எடுத்துக் காட்டும் விதத்தில், பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் அனைத்துக் கருத்துக்களிலும் நான் ஆர்வம் கொண்டிருந்தேன் என்பதை அவர் அறிந்திருந்தார். அந்தப் பாடசாலைச் செய்தித் தாளில் இருந்த பகிரங்கக் கடிதத்தை நான் வாசித்தேன்..

*"என்னுடைய சக மாணவர்களில் ஒருவனும் என்னுடைய நண்பர்களில் ஒருவனுமான மாணவன் ஒருவன் அண்மையில் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு பகிரங்கக் கடிதம் இது. உண்மையைச் சொல்லப்போனால், உங்களுடைய மனத்தடிப்புக்குறித்தும் புரிந்துகொள்ளுதல் மற்றும் உணர்வுகள் உங்களுக்கு இல்லாமை குறித்தும் நான் கடும் சீற்றம் கொண்டுள்ளேன் என்றுதான் கூறவேண்டும். எனது நண்பன் பரீட்சையில் மோசடி செய்யும் போது பிடிபட்டு, 'கௌரவமின்றி நீக்கப்பட்டார்' என்பதாக இங்கு வதந்திகள் உலவுகின்றன. தான் மோசடி எதுவும் செய்யவில்லை என்று என் நண்பன் கூறுகிறான். நான் எனது நண்பனை நம்புகிறேன். அவன் ஒரு திகதியை அதாவது வரலாற்றில் முக்கியமான ஒரு திகதியைச் சரிபார்த்துக்கொண்டிருந்ததாகச் சொல்லுகிறான். ஒரு திகதியின் இருப்பை நிறுவுவதற்கு , அதனுடைய துல்லியத்தன்மை அத்தியாவசியமானது என்பதால், அதனுடைய துல்லியத்தன்மை சரிபார்க்கப்பட்டாக வேண்டும். சில சமயங்களிலே நாங்கள் செய்யும் விடயங்களை ஏன் செய்கிறோம் என்பதற்கான காரணங்களை நீங்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள் என்றே நான் எண்ணுகிறேன்.ஒரு நபர் துல்லியத் தன்மையைச் சரிபார்க்க முனைவது தவறென்றா நீங்கள் சொல்கிறீர்கள்? தன்னுடைய நேர்மையான சந்தேகத்தை அறியாமை இருளுக்குள் மூழ்கடிக்க வேண்டும் என்றா நீங்கள் விரும்புகிறீர்கள்? எது எப்படியென்றாலும் பரீட்சைகள் வைப்பதன் நோக்கம் என்ன? அவை எங்களுடைய கல்விசார் அடைவுகளை அதிகரிப்பதற்கானவையா? அல்லது வெற்றியடைய கடுமையாக முயற்சி செய்யும் ஒருவரது வாழ்க்கைக்குள் துன்பங்களையும் சிறுமைப்படுத்தல்களையும் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளா?*

*கற்பித்தல் ஆளணியின் உறுப்பினரான ஒருவர் நேற்று எங்களில் சில பேரைக் கொண்ட குழுவின் முன்னால் வைத்து, எனது நண்பனுக்குக், கூறும்பொழுது, இந்தப் பாடசாலையின் கதி அவனுக்கு அளவுக்கு மீறிய வேகமானதாக இருந்தால் அதனோடு ஒத்தோடுவதற்கு மோசடி செய்ய வேண்டியிருந்தால் அவன் இன்னொரு பாடசாலைக்குப் போவதே நல்லது என்று கூறினார். அவர் கூறியவற்றால் நானும் தனிப்பட்டமுறையில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறேன். இந்தப் பாடசாலைக்கு வந்து இங்கிருக்கும் ஏனையவர்களோடு இருக்க விரும்பும் எந்த ஒருவருக்கும் எந்த வேளையிலும் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு எனது பாடசாலை இருக்கத் தவறுமென்றால், நான் எனது பாடசாலை குறித்து வெட்கப்படுகிறேன்.*

அதிகாரத்தையும் வல்லமையையும் காட்டுவதை விட, அதைவிட முக்கியமாக, பழிவாங்குதல், தண்டனை, துன்பப்படுத்தல் எல்லாவற்றையும் விட பல மடங்கு முக்கியமான பல விடயங்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன. கல்வியூட்டுபவர்கள் என்ற வகையிலே அறியாமை முன்கற்பிதங்கள், கயமைத்தனம் என்ற கதவுகளை திறந்து விடவேண்டும். என்னுடைய நண்பனுடைய பெருமைக்கும் சுய கௌரவத்துக்கும் உங்களால் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீங்கள் மன்னிப்புக் கோரி அவனை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளாவிட்டால், இந்த இலையுதிர் காலத்தில் நான் இந்தப் பாடசாலைக்குத் திரும்பி வரமாட்டேன்.

அக்கறையுடனும் செயற்படும் உத்தேசத்துடனும் விடைபெறுகிறேன்.

அன்புடன் உங்கள்

டிப்ஸ்.''

"இப்ப அவனுக்கு எத்தனை வயது?" நான் கேட்டேன்.

"பதினைந்து"

"ம்ம்.... ஆர்வமூட்டுற ஒரு கடிதத்தை அவன் எழுதியிருக்கிறான்." என்றநான், "அவன் எப்படியானவன்?'' என்று கேட்டேன்.

"மிகவும் புத்திசாலியானபையன். நிறைய கருத்திட்டங்கள வைத்திருக்கிறான். எல்லோரையும் பற்றியும் எல்லாத்தையும் பற்றியும் அக்கறை கொண்டவன். மிகவும் கூருணர்வு கொண்டவன்.

உண்மையான ஒரு தலைவன் ஆவேசமான இந்த மனக்குமுறல்கள நீங்கள் ரசிப்பீர்கள் என்று நான் எண்ணினேன். தான் எதை நம்புகிறானோ அவற்றை அடிப்படையாக வைத்துத்தான் அவன் செயற்படுகிறான். அவன இழக்க பாடசாலை விரும்பாது. அநேகமாக அவன் சொல்லியிருக்கிற மாதிரியே செய்யக் கூடும்'' என்று சொல்லிவிட்டு அவர் சிரித்தார். "எல்லோருக்கும் நீதியும் சமத்துவமும் கோரி நிற்கும் இந்த துணிகரமான புதிய வார்த்தைகள உங்கட சேகரிப்பில வைத்துக் கொள்ள விரும்புறீங்களா?"

"ஓம் நன்றி!'' என்றேன்.

"..... அக்கறையுடனும் செயற்படும் உத்தேசத்துடனும்...." அத நான் நம்புறன்''

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா!*

*சமாதானத்திற்கான இடம் குறித்த பின்பு தமிழர் பிரதேசத்தில் ஈடுபடுத்த என 1000 பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரை நியமிக்கப் போகிறார்களாம் எதற்காக?*

*அகிலன்,*
*பூநகரி.*

சமாதான விரோத சக்திகளுக்கு மேலும் பாதுகாப்பை வழங்குவதற்காக இருக்கலாம்!

*பாவலா!*

*அமைதி முயற்சியை சீர்குலைக்கும் சக்திகள் தனது நிர்வாகக் கட்டமைப்புக்குள் இருக்கின்றன் என கூறி நடவடிக்கை எடுக்குமாறு கூறும் மகிந்தவின் ஆட்சிபற்றி என்ன நினைக்கிறீர்?*

*மதி,*
*பூநகரி.*

மகிந்தவின் வணக்கத்துக்குரியவர்களும், தோழமைக்குரியவர்களும் தான் அந்த சக்திகள் என்பதை மறைக்க முயலுகிறார் போலும். அந்தச் சிங்களக் கட்சிகளுக்கு தெரியாது போலும்.

*பாவலா!*

*இலங்கையில் ஆழிப் பேரலை மீளமைப்புக்காக வருகை தந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சில வெளிநாடுகளால் வழங்கப்பட்ட நிதியினையும் சூறையாடிக் கொண்டு நாட்டைவிட்டு ஓடி விட்டதாக அமைச்சர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆனால் அவர்களின் அரசாங்கத்தில் நடந்துகொண்டிருக்கும் ஊழல்களை எப்போது வெளிச்சத்துக்கு கொண்டுவரப்போகின்றார்?*

*பாவலா!*

*ஒட்டுப்படைகள் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டு இருப்பார்களா? அல்லது தன்மானத்துடன் கழன்று விடுவார்களா?*

*தர்மினி,*
*கிளிநொச்சி.*

ஒட்டுண்ணிகள்- ஒட்டுப் படைகள் அண்டிப்பிழைத்தே பழக்கப்பட்டவர்கள்... அவர்கள் இனமானம் உள்ளவர்களாக இருந்தால் தானே தன்மானமுள்ளவர்களாக இருக்கமுடியும்!?

*பாவலா!*

*காணாமல் போன தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை கண்டுபிடிப்பதற்கு பாரிய தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளப்போவதாக கூறியுள்ளார்களே! அவர்களை எங்கு தேடுவார்கள். எப்படித் தேடுவார்கள் என்று கூறமுடியுமா?*

*ராதிகா,*
*புதுக்குடியிருப்பு.*

ஒட்டுக்குழுக்களுடன் ஒட்டியுறவாடிக்கொண்டே, ஒட்டுக் குழுக்களா? அவர்கள் யாரென்றே தெரியாதென்போர் செய்யும் தேடுதல் எப்படிப்பட்டதாக இருக்குமென்று சொல்லவா வேண்டும்?


*பாவலா!*

*சிறிலங்கா சிங்கள அரசியல் வாதிகளில், இனவாத போக்குடையவர்களாகவும் கோமாளிகளாகவும், பேரினவாத சித்தாந்தத்துடனேயே செயற்படுகின்றார்கள். நாம் எப்போது சிறிலங்காவில் ஒரு கொள்கைப்பற்றுள்ள நேர்மையான அரசியல்வாதிகளை காணலாம்.*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

'தமிழீழம்' உருவான பின்னர் ஒருவேளை சாத்தியமாகலாம்!

# பாவலன் பதில்கள்



*பாவலா!*

*தற்போதைய சனாதிபதி சரியாக புலிகளைப் புரியவில்லை என சிங்களக் கட்சிகள் கூறுகின்றன இதைப் பற்றி தமது கருத்து?*

*மு.றஜீர்,*
*பளை.*

தற்போதைய சனாதிபதிக்கு தன்னைப்பற்றியும் தனது தோழர்களைப் பற்றியும் கூட சரியான தெளிவு இல்லாத நிலை இருப்பதை

*அ.பாவலன்,*
*தேவிபுரம்.*

பாம்பின் காலை பாம் பறியும்.... அது அரசசார்பற்ற ஊழல்... இது அரசசார்பான ஊழல்... அவ்வளவுதான்!

*பாவலா!*

*இளையவர்களின் மகிழ்ச்சி எப்படியானதாக இருக்க வேண்டும்.*

முதியோர்களை சீண்டி வேடிக்கை பார்ப்பதாக அமையக்கூடாது...!



## தெருப்பேச்சு

நபர்1- ச்சீ... நானும் கட்டினனே பொம்பிள யெண்டு இவள. ம்... பக்கத்து வீட்டிலயும் இருக்குதுகள் இதுகளைப் போலயே.

நபர்2- என்ன... என்ன புறுபுறுப்பு கதைக்கிறது நேர கதையுங்க பாப்பம் அதென்ன வாய்க்க புறுபுறுக்கிறது.

நபர்1- நான் ஏனடியப்பா வாய்க்க பேசுறன் அ... எல்லாம் பக்கத்துவீட்டுக் குடும்பத்தப் பற்றித்தான்.

நபர்2- அட அப்படியே.

நபர்1- பின்ன நீயும் இருக்கிறாய் எண்டைக் காவது நான் வந்தா எழும்பி நிண்டிருப்பியா.

நபர்2- ஓஹோ உங்களுக்கு அப்பிடியொரு சங்கதியே நீங்கள் அவள் எழும்பின மட்டுந்தான் பார்த்தநீங்கள். அங்கால என்ன நடக்குதெண்டு பாருங்கோ.... வாங்கோ.... வாங்கோ... இந்த வேலிப் பொட்டால பாருங்கோ. எழும்புறா எழும்புறா...

நபர்3- என்ன இவளநேரம் எங்க நிண்டிட்டு வாறியள். சரிசரி கெதியா அடுப்ப மூட்டு தேத் தண்ணி வச்சுத் தந்திட்டு புட்ட அவியுங்கோ போங்க போங்க.

நபர்2- பாத்தியளோ நடக்கிறத அ... என்ன நானும் இனி உங்களக் கண்டவுடன பக்கத்து வீட்டுக்காறி மாதிரி எழும்பி நிக்கிறதோ...?

நபர்1- சீச்சீ வேண்டாம் நீ இருந்தது போல இரு.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -160



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்-160

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -159



**தெ.ஜீவநந்தினி,**
**புளியங்குளம்,**
**வவுனியா.**

### பரிசுக்குரிய வரிகள்

நிலம் மீட்காத
நிம்மதி அற்ற வாழ்வும்
நிஜம் அற்ற பேச்சுவார்த்தைத் தீர்வும்
நிம்மதியை எப்போது தரப்போகிறது.

### பாராட்டுக்குரிய வரிகள்

*சமாதான காலத்திலும் அரச படைகளின்*
*அராஜகங்களினால் வாழ்விடங்களை விட்டு*
*கையில் அகப்பட்ட பெட்டிகளுடன் நிம்மதி*
*தேடி வீதியின் அருகே காத்திருக்கும் தமிழ் மகன்.*

பொ.கிருஷ்ணமூர்த்தி,
மாங்குளம்.

*இன்று இல்லை, நேற்று இல்லை*
*அன்று தொட்டு இந்நிலைதான்- இனியும்*
*வேண்டாம் இந்(ழி) நிலை*
*நிலையாக வாழ வழிதேடிடுவோம்.*

எஸ்.ஆர்.எஸ்,
கிளி/செந்தூரன் களஞ்சியம்.

*பதிவிட்டு பொதி சுமந்து*
*சுமையான வாழ்வு*
*விடிகாலை சுடராகும் போது*
*பதிலாகும் (வ) எண்ண அலைகளாய்.*

சு. ராஜசெல்வி,
சென்திரேசா பெண்கள் கல்லூரி.

*சொந்த ஊரில் சுதந்திரமாய் வாழும் காலத்தில்*
*திட்டமிட்டு ஊரை வதைக்கும் நாசகார*
*நயவஞ்சகக் காடையரின் செயல்களால்*
*இல்லிடம் விட்டு புகலிடம் செல்வதற்கான காத்திருப்பு.*

மு.கங்கா,
வன்னேரிக்குளம்.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு




# மறக்க முடியாத பெயர்

கால்பந்து விளையாட்டு இருக்கும்வரைக்கும் பீலேயின் பெயர் மறக்கமுடியாத ஒன்று.

பிரேசிலில் உள்ள புரஸ்கார்லோஸ்மினாஸ்கரஸ் என்ற நகரில் பீலே பிறந்தார். இவரது தந்தையும் கால்ந்து வீரர் என்பதால் இயற்கையாகவே கால்பந்து விளையாட்டு மீது ஆர்வம் ஏற்பட்டது.

ஏழ்மையில் வாடிய இவர் சிறுவயதில் கால்பந்துக்குப் பதிலாக சின்ன காக்கி பைகளில் காகிதங்களைத் திணித்து விளையாடி மகிழ்ந்தார். அவருடைய ஆறாவது வயதில் தந்தையின் நண்பர் ஒருவர் கால்பந்து ஒன்றை பரிசளித்தார். பதினொரு வயதுமுதல் உள்ளூர் கிளப்புக்களில் விளையாடத் தொடங்கினார்.



விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது போல் இவரது ஆட்டம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இவரது அபாரத்திறனை கண்ட முன்னாள் வீரர் வால்டிமர் டி பிரிட்டோ தனது பயிற்சி முகாமில் சேர்த்துக்கொண்டார். பீலேயின் 15 ஆவது வயதிலேயே அவர் உலகின் தலைசிறந்த வீரராக உருவெடுப்பார் என பிரிட்டோ ஆருடம் சொன்னார். அவர் சொன்னது பொய்யாகவில்லை. 17 வயதில் பிரேசில் அணியில் இடம்பிடித்தார் பீலே.

1958 இல் சுவீடனுக்கு எதிராக நடந்த உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்து வெற்றிக்கு வித்திட்டார். இதோடு மட்டுமல்லாமல் 1970 வரை நடந்த அனைத்து உலகக்கோப்பை போட்டிகளிலும் தனது ஜாலத்தை வெளிப்படுத்தினார். 1962-70 உலகக்கோப்பை போட்டிகளில் இவரது அணி கோப்பையை கைப்பற்றியது. 1970 இல் நடந்த இறுதிப்போட்டியில் இவரது கோலை ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டார்கள். உலகக் கோப்பை போட்டிகளில் மட்டும் ஒட்டுமொத்தமாக 12 கோல்கள் அடித்துள்ளார்.

பந்து கடத்தல் மற்றும் உதைத்தலில் உலகில் இவருக்கு நிகர் இவராகவே இன்றுவரை திகழும் பீலே சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (பீபா) கனவு அணியிலும் இடம்பெற்றார்.

அனைத்து போட்டிகளையும் சேர்த்து 1200 கோல்களுக்கு மேல் அடித்துள்ள இவரது சாதனையை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை. 1977 இல் தனது ஓய்வுக்குப் பின் சமூக சேவைகளில் ஈடுபட்டுவரும் பீலே 1992இல் ஐ.நா வின் நல்லெண்ண தூதுவராக நியமிக்கப்பட்டார்.

1997 இல் பிரிட்டிஷ் அரச பரம்பரையின் உயரிய விருதான நைட் ஷிட் வழங்கப்பட்டது. இதற்கு மேலாக 2000 ஆம் ஆண்டில் பீபாவின் நூற்றாண்டின் சிறந்த கால்பந்து வீரராக தேர்வுசெய்யப்பட்டார்.

# மெக்ராத் முழுமையாக விலகினார்




தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் இருந்து முழுமையாக விலகி உள்ளார் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மெக்ராத்.

அவுஸ்திரேலிய அணி இப்போது தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து ஒருநாள், மூன்று டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது. இந்தப் பயணத்தில் ஒருநாள் தொடரில் பங்கேற்க இயலாது என அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மெக்ராத் அறிவித்திருந்தார். இதனால் அனுபவ பந்து வீச்சாளர்கள் இல்லாமல் ஒரு நாள் தொடரில் அவுஸ்திரேலியா திணறி வருகிறது. மெக்ராத்தின் மனைவி ஜேன் புற்றுநோயால் அவதிப்பட்டு வருகிறார். இவருக்கு சிட்னியில் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. இதைத் தொடர்ந்து மெக்ராத் தன்னால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் விளையாட இயலாது என தெரிவித்துள்ளார்.

இவரின் இந்த அறிவிப்பால் கிளஸ்பி அல்லது கஸ்பரோவிச்சை அணியில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# புதிய முகம்





"ஆஷஸ்" ஹீரோ பீட்டர்சன் இந்தியாவில் முடி துறந்த நாயகனாக வலம் வருகிறார்!

கெவின் பீட்டர்சன் இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் இளம் ஹீரோ. ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்டில் சதமடித்து இங்கிலாந்து அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் 'கிங் ஆப் ஆஷஸ்' என்ற பெயரோடு வலம் வந்தவர்.

இவரது முடியலங்காரம் கால்பந்து சூப்பர் ஸ்டார் டேவிட் பெக்காமின் பழைய முடி அலங்காரத்தை ஞாபகப்படுத்தும். தலைமுடியின் முன் பகுதியில் வண்ணங்களில் 'ப்ளீச்' செய்துகொண்டு மைதானத்தில் வலம் வருவார் பீட்டர்சன். 'இந்தப் போட்டியிலே என்ன கலரிலே வருவாரு' என்று ரசிகர்கள் ஆர்வத்துடன் இவரை ரசித்து வந்தனர்.

இந்திய மண்ணில் முதன் முறையாக இவரின் ஆட்டத்தையும் முடி அலங்காரத்தையும் கண்டு களிக்கும் ஆர்வத்துடன் இருந்த ரசிகர்களை ஏமாற்றிவிட்டார் பீட்டர்சன். ப்ளீச் தலையோடு வலம் வந்தவர் இப்போது பளிச்சென்று மொட்டைத் தலையுடன் வலம் வருகிறார். உற்று நோக்கினால்தான் ஆளே அடையாளம் தெரிகிறார்.

'என்ன பீட்டர் இப்படி ஆயிட்டீங்க' என்றால் சிரிக்கிறார். இந்தியாவில் அடிக்கிற வெயிலுக்கு இப்படித் தான் திரியமுடியும் என்று புன்னகைக்கிறார்.

# மனைவி சொன்ன மந்திரம்

நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் சகலதுறை வீரர் பிளிண்டொப். அணியின் எதிர்பார்ப்பு,நிறைமாத கர்ப்பத்தில் மனைவி இப்படி பல சிக்கல்களுக்கிடையில் தலைவர் பதவியை ஏற்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் பிளிண்டொப்.

இங்கிலாந்து அணியின் இப்போதைய சூழலில் எனது பணி கடினமானதுதான். இதற்காக என்ன செய்யவேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறேன். அணியின் நலனுக்காக தியாக உணர்வுடன் நான் எடுத்த முடிவே இது. இந்த முடிவை எடுக்க எனக்கு ஆதரவு அளித்த ரேக்கலை (மனைவி)பாராட்டியே ஆகவேண்டும். அவர் இப்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ளார். மூன்றாவது டெஸ்ட் முடிந்ததும் "குழந்தையைப் பார்த்துவிட்டு வரலாம் என்றிருந்தேன். இந்த முடிவை தற்போது தள்ளிவைத்துவிட்டேன். அணியின் முக்கிய வீரர்கள் பலரும் காயத்தில் உள்ளனர். இவர்களுக்கு வைத்திய குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அணியில் புதிய வீரர்கள் சிலரும் இடம்பெற்றுள்ளனர். நல்ல உடல்தகுதி உள்ள 11 பேர்கொண்ட அணியோடு விளையாடவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். எங்களின் தனிப்பட்ட திறமை வெளிப்பட இது பெரிதும் உதவும். இவ்வாறு பேட்டியில் கூறியுள்ளார்.




# அவசரம் அவசியம்




கிரிக்கெட்டில் இது வேடிக்கையான விதி. ஒரு துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்த பிறகு அடுத்த நிமிடத்துக்குள் அதற்கடுத்த துடுப்பாட்ட வீரர் களமிறங்கி கிரீசுக்கு வந்துவிடவேண்டும். ஆடி,அசைந்தபடி... அரைமணிநேரம் கழித்து வந்தால் நடுவர் விரட்டியடித்து வெளியேற்றிவிடுவார். இதற்கு 'ரைம் அவுட்' என்று பெயர். சர்வதேச கிரிக்கெட்டில் சமீபகாலங்களில் யாரும் இப்படி ஆட்டமிழந்ததில்லை. அப்படி தாமதமாக வந்து துடுப்பாட்டவீரர் ஆட்டமிழந்தால் அந்த விக்கெட் பந்துவீச்சாளரின் எண்ணிக்கையில் சேராது.

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட நாயகனாம் நம் நடமாடும் தெய்வம்

ஆன்மீககுரு


# அருட்திரு பங்காரு அடிகளாரின்

# 66 ஆவது அவதாரப்பெருவிழா










காலம் - 03-03-2006 வெள்ளிக்கிழமை (இன்று), நேரம்: காலை முதல், இடம்: வழிபாட்டு மண்டபம்

**அனைவரும் வருக! அன்னதானத்துடன் அன்னையருள் பெறுக!**

இவ் அவதார திருநாளில் அன்னையின் அருளை இறைஞ்சி நிற்கும்-ஆதிபராசக்தி
சிறுவர் முன்பள்ளிகள் கோம்பாவில், கைவேலி புதுக்குடியிருப்பு.

மற்றும்: மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம், புதுக்குடியிருப்பு.

தொ.பே: உள்ளூர்: 077-6634742, 077-6624542
சர்வதேசம்: 044-7946511739

பதிவு எண்: HA/5/MU/122

உலகமெல்லாம் சக்தி நெறி ஓங்க வேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்கவேண்டும்

# தமிழ் ஒளியின் தாயகக் கலையகம் உங்களையும் உலகோடு இணைக்கின்றது

ttn தமிழ் ஒளி



**தாயகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தன் சேவையை வழங்கும் தமிழ் ஒளியில் நீங்களும் பங்குபற்ற விரும்புகின்றீர்களா?**

உணர்வும் துடிப்பும், உறவுகளைத் தேடி, இன்னும் பல புதிய நிகழ்ச்சிகள் உங்களுக்காக..









## உறவுகளைத் தேடி

ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் உங்கள் உறவுகளுடன் எமது தொலைக் காட்சி மூலம் குடும்பமாகப் பங்கு பற்றி உங்கள் பாசத்தைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## உணர்வும் துடிப்பும்

பாடசாலை, தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மற்றும் நிறுவன பணியாளர்கள் என்ற வகையில் 6 – 8 அங்கத்தவர் கொண்ட இளைஞர், யுவதிகள் ஒரு குழுவாகப் பங்கு பற்றலாம்.

## கவிதா நிகழ்வு

உங்கள் உணர்வின் வரிகளுக்கு தமிழ் ஒளியூடாக உயிர் கொடுங்கள்.

தொடர்புகட்கு

அனைத்துலக தமிழ் ஊடகங்களின் இணையம்
(நந்தவனம் அருகாமை) கிளிநொச்சி.
தொலை பேசி. இல – 021 2285911

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.